பக்கங்கள்: 24 விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalaikkathir

விழயல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 சித்திரை 24, ஞாயிற்றுக்கிழமை 07.05.2017 கதிர் 182

கண்கவர் ஆடைத் தெரிவுகளுக்கு
சரவணா ரெக்ஸ்
இல.526,529 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே: 0778448045
இல.171, பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே: 021 226 2992

# சந்திரிகா முன்வைத்த நகலே புதிய அரசமைப்புத் திட்டமாக!



## திருத்தங்கள் மெருகுடன் வருமாம்

கொழும்பு, மே 07

**சந்திரிகா அரசினால் 2000 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட அரசமைப்பு நகல் திட்டமே தற்போதைய புதிய அரசமைப்புக்கான யோசனை நகலாக வெளிவரும் என விடயமறிந்த வட்டாரங்கள் 'காலைக் கதிருக்குத்' தகவல் வெளியிட்டன.**

**எனினும், தற்போதைய அரசியல் நிலைமைகளுக்கு ஏற்ப அந்த நகல் திட்டம் சில பல மாற்றங்களுடன் புதுமெருகில் சமர்ப்பிக்கப்படும் என்றும் கூறப்பட்டது.**

எதிர்வரும் 23, 24, 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் அரசமைப்பு வழிகாட்டல்குழுவின்மரதன்அமர்வுகள் நடைபெறவிருக்கின்றமை தெரிந்ததே. இந்த அமர்வுகளுடன் இடைக்கால அறிக்கை தயாராகி விடும் எனச் சம்பந்தப்பட்ட தரப்புகள் உறுதியாக நம்புகின்றன.

இடைக்கால அறிக்கை தயாரானதும், உடனடியாகவே அரசமைப்புக் கவுன்ஸிலுக்குச் சமர்ப்பிக்கப்படும். நாடாளுமன்றம் அரசமைப்புக் கவுன்ஸிலாகக் கூடி, அந்த இடைக்கால அறிக்கை

பக்கம் 22

# துணைவேந்தர் பதவியைக் 'கைப்பற்ற' அரசியல்வாதிகளின் கால்களில் விழுவதா?

## யாழ். ஆயர் கடும் விசனம்

யாழ்ப்பாணம், மே 07

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தெரிவு தொடர்பாக யாழ். மறை மாவட்ட ஆயர் வண. ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை கடும் விசனம் வெளியிட்டுள்ளார்.

முதலாவதாகத் தெரிவுசெய்யப்பட்டவரை விட, அடுத்த நிலையில் உள்ளவர் அரசியல்வாதிகளின் கால்களில் விழுந்து துணைவேந்தராக வந்திருக்கின்றார் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

துணைவேந்தர்கள் இவ்வாறு அரசியல்வாதிகளின் கால்களில்வீழ்ந்துபதவிக்குவந்தால் மாணவர்கள் மதிப்பார்களா?, விரிவுரையாளர்கள் மதிப்பார்களா?, என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

அரசியல் தலையீடுகளால் புத்திஜீவிகள் புறக்கணிக்கப் படுகின்றனர். புத்தி சாதுர்யம்

பக்கம் 22



# வித்தியா கொலை வழக்கு; 'ட்ரயல் அட் பார்' மன்றில்

## பிரதம நீதியரசருக்கு சட்டமா அதிபர் விண்ணப்பம்

கொழும்பு, மே 07

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை தொடர்பான வழக்கை விசாரணை செய்வதற்கு 'ட்ரயல் அட்பார்' நீதிமன்றை நியமிக்குமாறு சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய எழுத்துமூலம் பிரதம நீதியரசர் பிரியசத் டெப்பிடம் விண்ணப்பித்திருக்

பக்கம் 22

# ஓட்டோ சாரதி மீது வாள்வெட்டு; மணிக்கட்டுடன் கை துண்டிப்பு!

## சுதுமலையில் நேற்றுப் பிற்பகல் பதற்றம்

மானிப்பாய், மே 07

ஓட்டோ சாரதி ஒருவர் மீது இடம்பெற்ற கொடூரமான வாள் வெட்டில் அவரது இடது கை மணிக்கட்டுடன் துண்டிக்கப்பட்டது. வலது கை, கால்கள் மற்றும் உடலில் பல இடங்களிலும் வாள்

பக்கம் 22

# உடுத்துறையில் புதைக்கப்பட்டிருந்த 20 கிலோ கஞ்சா மீட்பு



வடமராட்சி கிழக்கு, உடுத்துறைக் கடற்கரையில் நேற்று அதிகாலை 20 கிலோ கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

கடற்கரைப் பகுதியில் கஞ்சாப் பொதிகள் புதைத்து வைக்கப்பட்டிருந்தன என்று கடற்படையினர் தெரிவித்தனர். இதனையடுத்து மீட்கப்பட்ட கஞ்சா பளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது. சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை .

இது தொடர்பாக பளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ

# 9 மாகாண சபைகளும் ஒவ்வொரு போக்கில்; அபிவிருத்தி இலக்கை எட்டுவது எவ்வாறு?

## ஹபரணை முதலமைச்சர்கள் மாநாட்டில் ஜனாதிபதி



கொழும்பு, மே 07

ஒன்பது மாகாண சபைகளும்ஒன்பதுவிதமாகச்செயற்படுவதனால், நாட்டின் பொது அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் பெரும் சிக்கல் நிலவுகிறது என்று கூறிய ஜனாதிபதி, பொதுவான உடன்பாட்டுடன் இந்த நிறுவனங்களை இயக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் அவர் சுட்டிக் காட்டினார்.

நேற்றுமுற்பகல்ஹபரணை சினமன் லொட்ஜ் விருந்தகத்

பக்கம் 22

# மீண்டும் சீனா செல்கிறார் ரணில்

கொழும்பு, மே 07

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இம் மாத நடுப்பகுதியில் மீண்டும் சீனாவுக்கு விஜயமொன்றை மேற்கொள்ள உள்ளார்.

பக்கம் 22




எங்கடை கலாசாரம், பண்பாடு எல்லாமே சீர்கெட்டுப் போச்சு பாருங்கோ...!

# இலங்கைப் படையில் 'கடமை' முடித்து நாடு திரும்பியது அமெரிக்க நாய்!

கொழும்பு, மே 07

இலங்கை பாதுகாப்பு படையில் ஆறு வருடங்களாக பணியாற்றிய நாயொன்று மீண்டும் அமெரிக்கா சென்றுள்ளது.

இலங்கை பொறியியல் படையணியில் நிலக்கண்ணி வெடிகள் அடையாளம் காணும் குழுவுடன் இணைந்து செயற்பட்ட வீரா - யென்கி என்ற பெயருடைய ஜேர்மன் ஷெபர்ட் வகை நாய் தனது கடமையை நிறைவு செய்துள்ளது.

குறித்த காலப் பகுதியினுள் இந்த நாய் வடக்கு பிரதேசத்தில அதிக அளவிலான நிலக்கண்ணி வெடிகளை அடையாளம் காண உதவி செய்துள்ளது. 62 ஆயிரத்து 680 மீற்றர் நீளத்தைக் கண்காணிப்பதற்கு இந்த நாய் உதவியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

வீரா - யென்கி மற்றும் அந்த படையணியின் அதிகாரி இணைந்து மந்துவில்,



ஆனந்தபுரம், முள்ளிவாய்க்கால் உள்ளிட்ட பல பிரதேசங்களில் நிலக்கண்ணி வெடிகளைத் தேடும் பணியில் ஈடுபட்டிருந்தது. இதன்போது பல்வேறு வெடிபொருள்கள் மற்றும் வெடிகுண்டுகள் இந்த நாயால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

2009 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5 ஆம் திகதி பிறந்த இந்த நாய் 2011 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24 ஆம் திகதி இலங்கைக்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

2011ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதிவரை வழங்கப்பட்ட பயிற்சியின் பின்னர் இராணுவ வெடிகுண்டு கண்காணிப்புக் குழுவில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

இலங்கைக்கு மிகப்பெரிய சேவையை செய்த இந்த நாய் கடந்த வியாழக்கிழமை மீண்டும் அமெரிக்கா நோக்கி அமெரிக்கப் பிரதிநிதியுடன் புறப்பட்டுச் சென்றுள்ளது. (ஐ)

# அத்தியாவசியத் தேவைகளுக்கான இடையூறுகளைத் தடுக்க நடவடிக்கை!

*அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவிப்பு*

கொழும்பு, மே 07

அத்தியாவசியத் தேவைகளுக்கு இடையூறு ஏற்படுவதனைத்தடுக்கநடவடிக்கை எடுக்கப்படும் எனத் திறன் அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எதிர்வரும் காலங்களில் நடத்தப்படும் தொழிற்சங்கப் போராட்டங்கள் வேலை நிறுத்தப் போராட்டங்களால் பொதுமக்களுக்கு அசௌரியம் ஏற்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க அரசு ஆயத்தமாகி வருகிறது.

இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க அதிகாரங்கள் வழங்கப்பட்ட உயர்குழுவொன்று நியமிக்கப்பட உள்ளது.

குழுவைநியமிக்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும்வழங்கஅமைச்சரவை தீர்மானித்துள்ளது. எனினும் இந்தக் குழுவுக்கு இதுவரையில் எவரும் நியமிக்கப்படவில்லை.

அரசு தொழிற்சங்கங்களை அடக்குமுறைக்கு உட்படுத்தி வருவதாகச் சில தரப்பினர் போலிப் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர். - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# 'மசாஜ்' நிலையம் நடத்தி வந்த முன்னாள் ராணுவ சிப்பாய் கைது!

கொழும்பு, மே 07

பொரலஸ்கமுவ பிரதேசத்தில் மசாஜ் நிலையம் என்ற பெயரில்இயங்கிவந்தபாலியல் தொழில் நிலையம் ஒன்றை பொலிஸார் சுற்றிவளைத்த நிலையில் இதில் பாலியல் தொழில் நிலைய முகாமையாளரான முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவரும் 7 பெண்களும் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

மிரிஹான ஊழல் ஒழிப்பு பிரிவிற்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமையவே இந்த சுற்றிவளைப்பு இடம்பெற்றது.

இந்த நிலையத்தில் உள்நுழைவதற்கு 2 ஆயிரம் ரூபா அறவிடப்பட்டுள்ளது. பெண்கள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளனர் எனத் தகவல் கிடைத்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கைது செய்யப்பட்டுள்ள பெண்கள், குருநாகல், காலி, இரத்மலானை, நீர்கொழும்பு மற்றும் மாத்தறை பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் கூறினர்.

இந்த மசாஜ் நிலையமான பாலியல் தொழில் நிலையம், இரண்டு மாடி கொண்ட சொகுசு கட்டடத்தில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா மாதாந்த வாடகை அடிப்படையில் பெறப்பட்டு நடத்தப்பட்டு வந்துள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ஐ)

# மின் தடை அறிவிப்பு

நாளை திங்கட் கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.00 மணிவரை யாழ் பிரதேசத்தில் நாவற்குழி, மறவன்புலோ, தச்சன்தோப்பு, தனங்களப்பு, கோகிலாக்கண்டி, கேரதீவு வீதி, அறுகுவெளி ஆகிய இடங்களிலும் மன்னார்ப் பிரதேசத்தில்அடம்பனிலிருந்து பாப்பாமோட்டை ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# பிணை முறிகள் மோசடிகளுடன் தொடர்பானோர் மீது நடவடிக்கை

கொழும்பு, மே 07


இலங்கை மத்திய வங்கியின் பிணை முறிகள் விற்பனையில் இடம்பெற்ற மோசடிக்கு காரணமானவர்களுக்கு எதிராகத் தகுந்த நடவடிக்கையை மேற்கொள்ள சட்டமா அதிபர் திணைக்களம் எதிர்பார்ப்பதாக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் தப்புல டி லிவேரா தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி மோசடி தொடர்பான விசாரணைக்காக அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் சாட்சியமளித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் சாட்சியப் பதிவுகள் அனைத்தும் நேற்றுமுன்தினம் பிற்பகலின் பின்னர் ஆரம்பமாகின.

இதேவேளை, இந்த ஆணைக்குழு மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் மற்றும் தற்போதைய ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி உள்ளிட்ட பலரிடமும் சாட்சியப் பதிவுகளை மேற்கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# எல்லை மீறும் சந்தர்ப்பத்தில் அடக்குமுறைதான் ஆயுதம்! மஹிந்த காலம் போல் இருக்காது



பொன்சேகா கூறுகிறார்

கொழும்பு, மே 07

எல்லை மீறும் சந்தர்ப்பங்களில் அடக்கு முறையை கையிலெடுக்க வேண்டிவரும். ஆனால் அதற்காக மஹிந்த காலத்தை போல் செயற்பட மாட்டோம். மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் நடந்து கொண்டதைப் போல் ஒருபோதும் நாம் நடந்து கொள்ள மாட்டோம்.

இவ்வாறு அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

களனி பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே பொன்சேகா மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

''மஹிந்த காலத்தை போல் நடந்துகொள்வதை விட அரசியலில் இருந்து விலகி வீட்டில் இருப்பது சிறந்தது.

சிலர் ஜனநாயகத்தையும் மீறி அராஜகமாக போராட்டங்களை முன்னெடுக்கும் போது நாமும் ஜனநாயகத்தை வழங்க முடியாது.

தற்போது கூட்டு ஆட்சியாக செயற்படுகின்றோம். இதேபோல் அடுத்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தனி அரசை உருவாக்கி ஆட்சியைப் பலப்படுத்துவோம்'' - என்றார் பொன்சேகா. (ஐ)

# ஏற்றுமதி சந்தை பொருளாதாரத்தை உயர்த்தும்!

கொழும்பு, மே 07

ஏற்றுமதி சந்தை ஒன்றை உருவாக்குவதன் ஊடாகவே நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தியடையச் செய்ய முடியும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

செலுத்த வேண்டியுள்ள கடன் அளவை செலுத்தி முடிப்பதற்காக இந்த ஏற்றுமதி பொருளாதார முறை மிகவும் உதவியாக இருக்கும் என்று பிரதமர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பதுளை பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

2020 ஆம் ஆண்டாகும் போது இலகுவான முறையில் கடன்களை செலுத்துவதற்கு வசதியான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியுள்ளார். (ஐ)

# இரண்டு நாள்களாக கிளிநொச்சியில் மழை!

கடந்த நாள்களில் அதிகளவான வெப்பம் காணப்பட்ட நிலையில் கிளிநொச்சியில் நேற்று முன்தினம் தொடக்கம் மழை பெய்துவருகின்றது.

கிளிநொச்சி அக்கராயன் குளம், ஆனைவிழுந்தான், வன்னேரி, ஸ்கந்தபுரம், உள்ளிட்ட இடங்களில் தொடர்ச்சியாக மழை பெய்துள்ளதால் அந்தப் பகுதி மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இதேவேளை அக்கராயன், ஆனைவிழுந்தான் பிரதான வீதிகள் புனரமைப்பு செய்யப்படாத காரணத்தால் இவ்வாறான கால நிலையில் வீதிகளில் போக்குவரத்து செய்வதில் மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இந்த வீதிகள் பல வருடங்களாக புனரமைப்புச் செய்யப்படவில்லை எனவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனை கவனத்தில் எடுத்து இந்த வீதியை புனரமைப்பு செய்து தர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)



# வடமாகாண மீனவர்களின் ஒப்புதல் இன்றி இந்திய மீனவரை விடுவித்தால் போராட்டம்

## வடக்கு கடற்றொழிலாளர் இணையம் எச்சரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைக் கடற்படையினால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களையும் கைப்பற்றப்பட்ட இழுவைப்படகுகளையும், வடமாகாண மீனவர்களின் ஒப்புதல் பெறாமல் விடுவிக்கக் கூடாது என வடமாகாண கடற்றொழிலாளர் இணையம் மத்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது.

மீறி விடுவிக்கப்பட்டால் வடக்கில் மட்டுமல்லாமல் தெற்கிலும் பெரும் போராட்டங்கள் நடத்தப்படும் எனவும் மேற்படி இணையம் எச்சரித்துள்ளது.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் மொகமட் ஆலம் மேற்படி கருத்துக்களைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:-

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் விஜயத்தை ஒட்டி விடுவிக்கப்படவுள்ளனர் என்றும் அவர்களின் படகுகளும் ஒப்படைக்கப்படவுள்ளன என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.



கடந்த ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி மத்திய கடற்றொழில் அமைச்சர் மஹிந்த அமரவீரவைச் சந்தித்தபோது வடமாகாண கடற்றொழிலாளர்களின் ஒப்புதல் இல்லாமல் இந்திய இழுவை படகுகளும், இந்திய மீனவர்களும் விடுவிக்கப்படுகின்றமை சாத்தியம் இல்லை எனக் கூறியிருந்தார்.

இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள் விடுவிக்கப்பட்டால் அவை மீளவும் இலங்கை கடல் எல்லைக்குள் வராது என்பதற்கு உத்தரவாதம் வழங்கப்படவேண்டும் என்ற நிபந்தனை உட்பட ஆறுநிபந்தனைகள் விதிக்கப்பட வேண்டும் எனக் கேட்டிருந்தோம். அவற்றுக்கும் ஆக்கபூர்வமான பதில் வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் இந்திய இழுவைப் படகுகள் விடுவிக்கப்பட்டால் போராட்டங்களில் ஈடுபடுவோம். - என்றார்.

மேலும், இலங்கைக்கு வருகைதரும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி இந்திய மீனவர்கள் எல்லை தாண்டுவது தொடர்பாக ஆக்கபூர்வமான பதிலை வழங்கவேண்டும். - எனவும் வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் மொகமட் ஆலம் கோரிக்கை விடுத்தார். (ம)

# பயங்கரவாதம் தலைதூக்கலாம்; வடக்கில் இராணுவம் அவசியம்!

## இராணுவ இருப்பை நியாயப்படுத்துகிறார் சமரசிங்க

கொழும்பு, மே 07

பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்கும் அபாயம் காணப்படுகிறது. அதனால்தான் வட பகுதியில் தொடர்ந்தும் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர். பயங்கரவாதத்துக்குஎதிராக சர்வதேச மட்டத்திலான சட்டத்தைக் கொண்டுவருவதைப் போன்றதே இலங்கை அரசின் நடவடிக்கையும் ஆகும்.

- இவ்வாறு கூறுகிறார் அமைச்சர் மஹிந்த சமரசிங்க.

ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை தொடர்பான பேச்சுகள் இடம்பெற்றுவரும் இவ்வாறான சூழ்நிலையில் புதியவடிவிலான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பான யோசனை முன்வைக்கப்பட்டிருக்கிறது என்றும் அமைச்சர் சமரசிங்க சுட்டிக்காட்டினார்.

தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை விடவும் பல மடங்கு கொடூரமானதும் - அபாயகரமானதும் - எனக் கருதப்படும் இந்த உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பான வரைவைக் கடந்த அமைச்சரவைக் கூட்டத்தின்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் சமர்ப்பிக்கப்பட்டது தெரிந்ததே.

இந்த உத்தேச சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு இது தொடர்பில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க விளக்கம் அளித்துள்ளார்.

அமைச்சர் கூறியவை வருமாறு:-

"புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் நீண்டகாலமாக பேசப்பட்டு வந்ததொரு விடயமாகும். அவசரமாக அல்ல. ஜி.எஸ்.பி.பிளஸ் பேச்சு இடம்பெறுகின்ற சந்தர்ப்பத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்ட யோசனையிலும் இது உள்ளது.

30 வருடங்கள் யுத்தம் செய்து இந்த உலகத்திலேயே கொடிய பயங்கரவாதத்தை அழித்துள்ள சந்தர்ப்பத்தில் மீண்டும் அது தலைதூக்காமலிருக்கும் வகையிலான சட்ட திட்டங்கள் உருவாக்கப்படவேண்டும்.

எமது பாதுகாப்பு படையை முழுமையாக கீழ்ப் படுத்திவிட முடியாது. அதனால்தான் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் இராணுவத்தினரை தொடர்ந்தும் நாங்கள் தங்க வைத்திருக்கின்றோம்.

உடனடியாக அதனைச் செய்து முடித்து விட முடியாது. நல்லிணக்கத்தைப் பரந்துபட்டதாக மேற்கொள்ள சில காலம் எடுக்கும். அப்படிப்பட்ட கருத்தில் கொண்டுதான் இந்த அரசைக் கொண்டு வந்துள்ளோம்" - என்றார்.

# மஹிந்தவின் பாதுகாப்பு குறைப்பு நியாயமானது என்கிறார் சந்திரிகா

## தம்மையும் பழிவாங்கினார் என்கிறார் அவர்

கொழும்பு, மே 07

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு அதிகாரிகள் குறைக்கப்பட்டமை தொடர்பாக அவரது விசனத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என மற்றொரு முன்னாள் ஜனாதிபதியான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

மஹிந்தவின் ஆட்சிக்காலத்தில், 2007 ஆம் ஆண்டு எவ்விதமான காரணமும் இன்றித் தமது பாதுகாப்பை அவர் முன்னறிவிப்பு ஏதுமின்றி முழுமையாக நீக்கினார் எனவும் சந்திரிகா தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முழுமையாக நீக்கியமை தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சர்வதேச ரீதியாக எழுந்த அழுத்தங்கள் காரணமாகப் பின்னர் தமக்கு 40 பேர் கொண்ட பாதுகாப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர் எனவும் சந்திரிகா அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

சமகால அரசாங்கத்தால் மேலதிகமாக 8 பாதுகாப்பு அதிகாரிகள் தமக்கு வழங்கப்பட்டுள்ளனர் எனவும் தற்போது மொத்தமாகத் தமக்கு 48 பாதுகாப்பு அதிகாரிகளே உள்ளனர் எனவும் அவர் கூறினார். அனைவருக்கும் சமமான சலுகைகள் கிடைக்க வேண்டும். - எனவும் அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ம)

# காலியில் துப்பாக்கிச் சூடு! ஓட்டோ சாரதி உயிரிழந்தார்!!

## தனிப்பட்ட பகையே காரணமாம்

காலி, மே 07

காலி - இமதுவெளதிக்கும்புர சந்திக்கு அருகில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் கம்மன்பிலவத்த அந்துகொட பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய நபர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தனது பிள்ளை மற்றும் அருகிலுள்ள வீட்டைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகள் ஆகியோரை ஓட்டோவில் தனியார் வகுப்புக்கு அழைத்துச் சென்றபோதே இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

இரண்டு தரப்பினருக்கும் இடையிலான விரோதமே இந்தக் கொலைக்குக் காரணம் என பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்களைக் கைது செய்ய காலி மாவட்டத்துக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் தலைமையில் விசேட பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. (ம)

# வாகனங்கள் கொள்வனவு செய்ய 33 கோடி ரூபா தரக் கோரிக்கை

கொழும்பு, மே 07

அமைச்சர்கள் ஆறுபேர், ஆளுநர் ஒருவர் மற்றும் பிரதமரின் செயலாளர் ஆகியோருக்கு வாகனம் கொள்வனவு செய்வதற்கு 32 கோடியே 98 லட்சம் ரூபா கோரி நாடாளுமன்றத்தில் துணை மதிப்பீட்டு பிரேரணையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கக்கட்சியின் பிரதான அமைப்பாளரும், அமைச்சருமாகிய கயந்த கருணாதிலக்க இந்த பிரேரணையை நேற்று முன்வைத்திருந்துள்ளார்.

பிரதமர் செயலகத்திலுள்ள நாடாளுமன்ற விவகாரம் தொடர்பான செயலாளருக்கு 4 கோடி 30 லட்சம் பெறுமதியான வாகனமும், கிழக்கு மாகாண ஆளுநருக்கு 4 கோடியே 30 லட்சம் ரூபா பெறுமதியான வாகனமும் இந்த வேண்டுகோளில் அடங்கப் பெற்றுள்ளன.

# திறைசேரி அனுமதி விரைவாக கிடைப்பதற்கு மக்கள் பிரதிநிதிகளின் அழுத்தம் வேண்டும்

## மட்டு.பட்டதாரிகள் கோரிக்கை

*75 நாளாகவும் இரவு – பகலாக போராட்டம்*



மட்டக்களப்பு, மே 07

வேலையற்ற பட்டதாரிகளுக்கான நியமனங்களை வழங்குவதற்கு நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதும், திறைசேரி மூலம் வெற்றிடங்களை முழுமையாக நிரப்புவதற்கான அழுத்தங்களை மக்கள் பிரதிநிதிகளே கொடுக்க வேண்டும்.

- இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு வேலையற்ற பட்டதாரிகளின் சத்தியாக்கிரகப் போராட்டம் நேற்றுச் சனிக்கிழமை 75 ஆவது நாளாகவும் மட்டு. நகரில், காந்தி பூங்கா முன்பாக இரவு – பகலாக நடைபெற்று வருகிறது.

பட்டதாரிகளின் பிரச்சினைக்கு 95 வீதம் தீர்வு கிடைத்துள்ளதாகக் கிழக்கு முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இருப்பினும், 2016 ஆசிரிய ஆளணி சுற்றுநிருபத்தின் அனுமதி மட்டுமே தற்போது கிழக்கு மாகாணத்திற்குக் கிடைக்கப்பெற்றுள்ளது என்பதைப் பட்டதாரிகள் கவனத்தில் கொள்ள வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர் ரி.கிருஷாந் தெரிவித்தார்.

இவற்றுக்கான அனுமதியை ஏனைய எட்டு மாகாணங்களும் ஏற்கனவே பெற்று, படிப்படியாக வெற்றிடங்களைப் பூர்த்தி செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதனையே கிழக்கு மாகாணம் தற்போது தாமதமாகப் பெற்றுள்ளமையைப் பட்டதாரிகள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்த அனுமதி பட்டதாரிகளின் அழுத்தத்தின் காரணமாகவே பெறப்பட்டுள்ளது என்பது எமது போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றி. ஆயினும், இவ்வெற்றிடங்களை நிரப்ப கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாணப் பிரதம செயலாளர் ஊடாக மத்திய திறைசேரியின் அனுமதியைப் பெற வேண்டும்.

இதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றதும் ஆள்சேர்ப்புத் தொடர்பான நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டும். இதற்கான அனுமதி கோரல் கிழக்கு மாகாணசபையால் இன்னும் அனுப்பப்படவில்லை என்பதை அனைத்துப் பட்டதாரிகளும் கவனத்தில் கொள்ள வேண்டும். - என்றார் கிருஷாந். (இ-ச)

## ஒன்றிணைந்த எதிர்க்கட்சிக்குள் பிளவில்லை

கொழும்பு, மே 07

ஒன்றிணைந்த எதிர்க்கட்சிக்குள் எந்தவிதமான பிளவும் இல்லை என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியைப் பிரிப்பதற்கு மேற்கொள்ளப்படும் சூழ்ச்சிகள் பலிக்காது எனவும் அவர் கூறினார். நிகழ்வு ஒன்றில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார். (ம)

பூங்கன்றுகள் விற்பனை
60இற்கு மேற்பட்ட சகலவிதமான பூங்கன்றுகளும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
மீன்தொட்டிகள், மீன்கள், மீன் தொட்டிக்கு தேவையான அனைத்து பொருள்களையும் பெற்றுக் கொள்ளலாம்.
ஒவ்வொன்றும் 70/=
யாழ். அக்குவரியம் & பிளாண்ட் பரடைஸ்
917, கே.கே.எஸ் வீதி, குட்டாதெருச் சந்தி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 075 944 4608
075 991 0060

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மீறிடும் பேரினவாதம்

'யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே' என்று கூறுவார்கள்.

நாட்டில் அதிகாரப் பகிர்வுக்கான முயற்சிகள் தீர்க்கமான கட்டத்தை நோக்கி நகர முன்பே, அதற்கு எதிரான இனவாதப் பிரசாரமும், பேரினவாத மேலாண்மைத் திமிர்ப் பேச்சுகளும் வெளிவரத் தொடங்கி விட்டன. இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான்.

அரசமைப்பு வழிகாட்டல் குழுவில் இடைக்கால அறிக்கைக்குரிய நகல் வடிவம், வழிகாட்டல் குழுவின் 21 உறுப்பினர்களான எம்.பிக்களுக்கும் கடந்த புதன், வியாழக்கிழமைகளில்தான் அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால், அதற்கு இடையில் தமது தீவிர எதிர்ப்பிரசாரத்தை ஆரம்பித்து விட்டன இனவாத சக்திகள்.

அந்த இடைக்கால அறிக்கைக்கான நகல் வடிவத்தில் அதிகாரப் பரவலாக்கல் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு அளிப்பது குறித்தும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

இது ஒன்றும் புதிய விடயமல்ல. ஏற்கனவே அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழ் சட்டமாக்கப்பட்ட விடயம்தான். ஆனால், காலம் காலமாக ஆட்சி செய்த அரசுகள், அரசமைப்பில் நிறைவேற்றப்பட்டிருந்த அந்த அதிகாரத்தை மாகாணங்கள் பிரயோகிக்கக் கூடியவையாக அவற்றை நடைமுறைப்படுத்தவில்லை; அல்லது நடைமுறைப்படுத்த விடவில்லை; அதையும் தாண்டி அவ்வப்போது நாடாளுமன்றத்தில் தமக்கு இருந்த பெரும்பான்மைப் பலத்தை வைத்துக் கொண்டு, மாகாணங்களுக்குப் பரவலாக்கப்பட்ட அந்த அதிகாரங்களை மீளப்பறித்து, அதிகாரப் பரவலாக்கல் விவகாரத்தையே நீர்த்துப் போக வைத்தன.

இப்போது அரசமைப்பு வழிகாட்டல் குழுவின் கூட்டங்களில் அவ்விடயம் குறித்து விரிவாகப் பேசப்பட்டுச் சில, பல முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுகின்றமை தொடர்பான இணக்கம் எதிர்ப்பின்றி அங்கு முன்வைக்கப்பட்டிருக்கின்றது. அது மட்டுமல்ல, அவ்வாறு அதிகாரங்கள் மாகாணங்களுக்குப் பரவலாக்கப்படல் வேண்டும் என்ற யோசனையை வடக்கு, கிழக்கு மாகாண முதல்வர்கள் மட்டுமன்றி, தெற்கின் ஏனைய ஏழு மாகாண முதலமைச்சர்களும் கூட ஒரே குரலில் முன்வைத்திருக்கின்றனர்.

இத்தகைய ஓர் இணக்கப்பாட்டுடன்தான், அதிகாரப் பகிர்வு தொடர்பான யோசனை மேற்படி வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கைக்கான நகல் வடிவத்தில் இடம்பெற்றிருக்கின்றது.

ஆனால், அதனை இனவாதப் போக்கில் எதிர்க்கும் தன் கைவரிசையை ஆரம்பித்து விட்டார் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், எம்.பியுமான விமல் வீரவன்ஸ.

*"புதிய அரசமைப்பின் ஊடாக மாகாண சபைகளுக்கும் காணி, பொலிஸ் உட்பட அதிகாரங்கள் வழங்கப்படவுள்ளன. இதனால், அதிகாரங்கள் மூன்றாகப் பிரியும் ஆபத்து நேர்ந்துள்ளது."* - என அவர் எச்சரித்திருக்கின்றார்.

மாகாண சபைகள் தமக்குத் தேவையான சட்டங்களை உருவாக்குவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன என்று கூறும் அவர், அதற்கு அப்பால் தெரிவிக்கும் கதை மிகவும் வேடிக்கையானது. ஒன்றுமில்லாத விடயத்துக்காக சிங்கள மக்களை உசுப்பிவிட்டு, அமைதி முயற்சிகளைக் குழப்பும் இனவாத நோக்கம் கொண்டனவாக அக்கருத்துகள் அமைந்துள்ளன.

ஜெனீவா நிகழ்ச்சி நிரலுக்கு அமைய, இலங்கை ஒரு சமஷ்டி ஆட்சியுள்ள நாடாக அமையும் என்று கூறியுள்ள அவர், அதனால் நாடு பிரியும் ஆபத்து நேரும் எனவும் எச்சரிக்கின்றார்.

*"சமஷ்டியால் என்ன நடக்கும்? இரண்டு மாகாணங்களை ஒன்றிணைக்கவும் முடியும். ஆகவே, 13 ஆவது திருத்தத்தில் உள்ள அதிகாரங்கள், அவற்றைவிட வழங்கப்படாமல் இருக்கும் அதிகாரங்கள் மற்றும் புதிதாக முன்மொழியப்பட்டுள்ள அதிகாரங்கள் வழங்கப்பட்டு, சமஷ்டி அதிகார பிராந்திய ஆட்சி உரு வாகும் பட்சத்தில், பிரிந்து செல்வதற்கான தீர்மானத்தை அமைதியாக மேற்கொள்ள முடியும். அதற்கு ஆயுதங்கள் தேவையில்லை. அமைதியான மக்கள் போராட்டம் போதுமானது. அதனைத் தடுக்கப் பாதுகாப்புப் படையினரால் முடியாது போகும். பொலிஸாராலும் எதுவும் செய்ய முடியாமல் போகும்."*

- இப்படிக் கொதிக்கின்றார் விமல் வீரவன்ஸ.

அதிகாரப் பகிர்வுக்கான தனது முயற்சியை நல்லாட்சி அரசு சிறிது முன்நகர்த்தத் தொடங்கியதுமே தமது இனவாதப் பூதத்தைக் கட்டவிழ்த்துவிடக் கூட்டு எதிரணி தயாராக இருக்கின்றது.

தென்னிலங்கை அரசும், ஆட்சிப்பீடமும், நாட்டுக்கு நல்லது எது, நீதி - நியாயமானது எது என்று பார்த்து இயங்கப் போவதில்லை. எல்லா அரசியல் முடிவுகளும், தீர்மானங்களும் அடுத்து வரும் தேர்தலை இலக்கு வைத்தே இந்த நாட்டில் நடத்தப்படுகின்றன.

எனவே, அதிகாரப் பகிர்வு விடயத்திலும், நல்லாட்சி அரசு எது சரியானது, எது நியாயமானது என்று பார்த்துச் செயற்படப் போவதில்லை. எது அடுத்த தேர்தலில் தனது வெற்றிக்கு வழி சமைக்கும் என்று பார்த்துத்தான் செயற்படும்.

அந்தத் துரும்பை வைத்தே நல்லாட்சி அரசின் தீர்வு முயற்சியை முறியடித்து விடக் கூட்டு எதிரணி தயாராகி வருகின்றது. விமல் வீரவன்ஸவின் பேச்சு அதனைத்தான் அப்பட்டமாகக் காட்டுகின்றது.

இந்தத் தடையைத் தாண்டித் தீர்வு முயற்சியை மைத்திரி - ரணில் அரசு எப்படி நகர்த்தப் போகின்றது? அரசுக்கு அந்தத் திராணி இருக்கின்றதா? தெரியவில்லை.

# அரசு சரியான தீர்வு வழங்காவிட்டால் கடுமையான நடவடிக்கை தொடரும்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

தொழிற்சங்கநடவடிக்கைக்கு அரசு சரியான தீர்வு வழங்காவிட்டால் எதிர்வரும் நாள்களில் கடுமையான நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளது என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கூறியுள்ளது.

இது தொடர்பாக எடுக்க வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கை சம்பந்தமாக சங்கத்தின் மத்திய செயற்குழு கூடித் தீர்மானிக்கும் என்று அந்தச் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் நவீன் டி சொய்சா கூறினார்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் வைத்தியர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்த நிலையில், அரசவைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் அனுருத்த பாதெனிய விடம் சிகிச்சை பெறுவதற்காக தனியார் வைத்தியசாலையில் பதிவு செய்யப்பட்டிருந்தமை தொடர்பான தகவல்களை பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க நேற்று முன்தினம் வெளிப்படுத்தியிருந்தார்.

எனினும் அது முன்கூட்டியே பதிவு செய்யப்பட்ட ஒன்று எனவும், நேற்றுமுன்தினம் எந்தவொரு தனியார் வைத்தியசாலையிலும் தான் பணியாற்றவில்லை என்றும் அனுருத்த பாதெனிய மறுப்புத் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, நாடு முழுவதும் நேற்றுமுன்தினம் சேவை புறக்கணிப்பில் ஈடுபட்ட மருத்துவர்களின் வாகனங்களுக்கு எரிபொருள் நிலையங்களில் எரிபொருள்நிரப்பப்படவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

மருத்துவ இலச்சினைபொறிக்கப்பட்டிருந்த வாகனங்களுக்கு எரிபொருள் நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்கள் எரிபொருளை நிரப்பாது திருப்பி அனுப்பியிருந்தனர்.

பணிப்புறக்கணிப்பில் ஈடுபடும் மருத்துவர்களுக்கு எரிபொருள் நிரப்பப்படமாட்டாது என அறிவிப்புப் பலகையும் ஒரு சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வைக்கப்பட்டிருந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது.

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் பணிகள் ஸ்தம்பித்துள்ளன!

கடந்த அரசின் ஆட்சியில் நடந்ததாகக்கூறப்படும் பெரியளவிலான மோசடிகள், ஊழல்கள் மற்றும் முறைகேடுகள் சம்பந்தமான விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பணிகள் ஸ்தம்பித்துள்ளன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த அரசுக்கு எதிரான புதிய முறைப்பாடுகளை பெற்றுக் கொள்ளும் பணிகள் கடந்த மார்ச் மாதம் நிறைவடைந்தன. இந்த நிலையில், ஆணைக் குழுவின் பணிகள் ஸ்தம்பித்துள்ளன என்று பேசப்படுகிறது.

ஆணைக் குழுவின் பதவிக் காலம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. ஜனாதிபதியின் உத்தரவின்பேரில் பதவிக்காலம் நீடிக்கப்படலாம் எனவும் கூறப்படுகிறது.

(ஐ)

# முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வு; வடமாகாண சபை அமர்வில் முடிவு!

முல்லைத்தீவு, மே 07

முள்ளிவாய்க்கால் இறுதிப் போரில் படுகொலை செய்யப்பட்ட மக்களின் நினைவு நாள் எதிர்வரும் 18 ஆம் திகதி வடமாகாண சபையால் நினைவு கூருவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இது தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை இடம்பெறும் என்று வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் கூறியுள்ளார்.

2009 ஆம் ஆண்டு இறுதிப் போரில் பல ஆயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

அவர்களுடைய நினைவு நாள் வருடாந்தம் மே 18 ஆம் திகதி வட மாகாண சபையால் முள்ளிவாய்க்காலில் பலத்த நெருக்கடிகளுக்கும் மத்தியில் நினைவு கூரப்பட்டு வருகின்றது.

இதேபோல் இந்த ஆண்டும் எதிர்வரும் 18 ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் நினைவு நாள் நினைவு கூரல் தொடர்பாக மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் கருத்துத் தெரிவிக்கும் போது இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள வடமாகாண சபை அமர்வின் பின்னர் இந்த நினைவு கூரல் நிகழ்வு தொடர்பாக பேசுவதற்கும் தீர்மானித்திருக்கின்றோம்.

கடந்த வருடத்தை போல் இந்த வருடமும் நினைவு கூரல் நிகழ்வு நடக்கும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# யாழ். தமிழ்ச் சங்கம் நடத்தும் திருவள்ளுவர் விழா 13 இல்

யாழ். தமிழ்ச் சங்கம் நடத்தும் திருவள்ளுவர் விழா எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணி மண்டபத்தில் தமிழ்ச் சங்கத் தலைவர் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கான அனுசரணையை யாழ். பெரியகடை வீதி சிவகணேசன் ரெக்ஸ் ரைல்ஸ் நிறுவனத்தினர் வழங்கவுள்ளனர்.

நிகழ்வில் மங்கல விளக்கை சிவகணேசன் 'ரெக்ஸ் ரைல்ஸ்' நிறுவன உரிமையாளர் கனகசபை அருள்நேசன் ஏற்றவுள்ளார். தமிழ்த்தாய் வாழ்த்தை அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைமாமணி தெ.திருமுருகன் நிகழ்த்துவார்.

வாழ்த்துரையை கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கத் தலைவர் நா.சோதிநாதனும் வழங்குவார்.

சிறப்புரையை 'உள்ளுவதெல்லாம் வள்ளுவம்' என்னும் பொருளில் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல் வழங்குவார்.

தொடர்ந்து நல்லூர் சிவநந்தனாலய மாணவர்களின் குறள் வழிநடனநிகழ்வு இடம்பெறும்.

இதனையடுத்து 'பல்துறை வள்ளுவம்' என்னும் பொருளில் சட்டத்துறை மாணவன் ஸ்ரீ.சிவஸ்கந்தஸ்ரீ தலைமையிலான சிந்தனை அரங்க நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவி ப.கதிர் தர்சினி 'திருவள்ளுவர் ஓர் இலக்கியவாதி' என்னும் பொருளிலும் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் ப.பிரதீஸ் 'திருவள்ளுவர் ஒரு மருத்துவர்' என்னும் விடயப் பொருளிலும் 'யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறை மாணவி செல்வி கு.துளசி 'திருவள்ளுவர் ஒரு சட்டத்தரணி' என்னும் விடயப் பொருளிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவப்பீட மாணவன் சியசோதுலன் 'திருவள்ளுவர் ஒரு முகாமைத்துவவாதி' என்னும் விடயப் பொருளிலும் உரையாற்றவுள்ளனர்.

புத்தாக்க அரங்க இயக்கக் கலைஞர்களின் நடிப்பில், யாழ் மத்திய கல்லூரி நாடகத்துறை ஆசிரியர் எஸ்.ரி.குமரன், மானிப்பாய் இந்துக்கல்லூரி நாடகத்துறை ஆசிரியர் எஸ்.ரி. அருள்குமரன் ஆகியோரின் நெறியாள்கையில் 'வாழ்க தமிழ்' நாடக ஆற்றுகையும் இடம்பெறவுள்ளது.

நன்றி உரையை யாழ். தமிழ்ச்சங்க பொதுச் செயலாளர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் நிகழ்த்துவார்.

### நாளை

08.05.2017
திங்கட்கிழமை

நட்சத்திரம்: அத்தம் மு.ப. 11.04 வரை
திதி: திரயோதசி பி.இ. 12.20 வரை

சுபநேரம் : 11.55 – 1.25 வரை
இராகுகாலம் : 7.25 – 8.55 வரை

# 'சைட்டம்' பிரச்சினைக்கு விரைவில் சுமுக தீர்வு; வேலை நிறுத்தங்கள் கைவிடப்பட வேண்டும்!

## ஜனாதிபதி மைத்திரிபால வலியுறுத்து



கொழும்பு, மே 07

'சைட்டம்' தொடர்பான பிரச்சினையை சுமுகமாகத் தீர்ப்பதற்கு அரசு முயற்சி எடுத்து வரும் வேளையில், சுய அரசியல் லாபத்துக்காக வேலை நிறுத்தங்களை முடுக்கி விடச் சிலர் முயற்சிப்பது மிகுந்த வருத்தத்தைத் தருகிறது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் நிர்மாணிக்கப்பட்ட புத்தர்சிலை ஒன்றைத் திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்றுமுன்தினம் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மருத்துவக் கல்லூரி மாணவர்கள் அரசியல் சூழ்ச்சிகளுக்கு இரையாகக் கூடாது. அவர்களுக்கு நிச்சயமாக நியாயமான தீர்வு வழங்கப்படும். மாணவர்கள் தங்களது கல்வியை முறைப்படி கற்றுத் தேறவேண்டும். அது அவர்களின் தனிப்பட்ட நன்மைக்கு மட்டுமல்லாது, அவர்களது சேவை தேவைப்படும் இந்த நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் நன்மை பயக்கும்.

சைட்டம் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சில முக்கிய முடிவுகளை அரசு எடுத்துள்ளது. மருத்துவ ஆய்வுகளைக் கட்டாயப்படுத்துவது, மருத்துவ கவுன்சில் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்பன நடத்தும் பரீட்சைகளில் பங்கேற்பது, மருத்துவக் கல்விக்கான குறைந்தபட்ச தகுதிகள், தனிப்பட்ட ஒருவரின் உரிமையில் இயங்கும் தனியார் வைத்தியசாலைகளின் உரிமையைப் பகிர்ந்தளிப்பது, அவற்றைக் கண்காணிக்க ஒரு சபையை நிறுவுவது எனப் பல நடவடிக்கைகளை அரசு எடுக்கவிருக்கிறது.

வேலை நிறுத்தங்களாலும், வகுப்பு பகிஷ்கரிப்புகளாலும் மிகச்சிரமத்தின் கீழ் மருத்துவக் கல்வி கற்கும் மாணவர்கள் கடும் பாதிப்புகளுக்கு உள்ளாகிறார்கள்.

எந்தப் பிரச்சினையாக இருப்பினும் அது பற்றிப் பேச்சு நடத்தித் தீர்வு காண்பதற்கு போதிய வாய்ப்புகள் உள்ளன. எந்தவொரு தொழிற் சங்கமும் தாராளமாக அரசுடன் பேச்சு நடத்தலாம்.

மேலும், அத்தியாவசிய சேவைவழங்கும் மருத்துவர்கள் உட்பட வேறு பல தொழிற் சங்கங்களும் இணைந்து வேலை நிறுத்தங்களை நடத்திவருவதால் பொதுமக்கள் கடும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ளது.

அத்துடன், இலங்கையில் வெசாக் திருவிழாவை ஐக்கிய நாடுகள் சபை நடத்தவிருக்கும் இந்தச் சூழலில் வேலை நிறுத்தங்கள் முன்னெடுக்கப்படுவது வருத்தத்திற்குரியது.

இந்தியப் பிரதமர் மோடியின் வருகையின்போது கறுப்புக் கொடி ஏற்றச் சிலர் முயற்சிப்பதாகத் தெரிகிறது.

இலங்கைக்கு பௌத்த மதம் அறிமுகப்படுத்தப்பட்ட காலம் முதல் இலங்கை - இந்திய உறவுகள் நெருக்கம் மிகுந்ததாக விளங்குகிறது. அதைத் தொடர்ந்து பேணவே அரசு முயற்சிக்கிறது. இதை, இந்தியாவுக்குத் தலைவணங்குவதாக யாரும் அர்த்தப்படுத்திக் கொள்ளலாகாது.

நாட்டின் தலைமைப் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டது நாட்டு மக்களின் உரிமையை ரத்துச் செய்வதற்காகவோ அல்லது நாட்டைக் கூறுபோட்டு வெளிநாடுகளுக்கு விற்பதற்காகவோ அல்ல.

எனவே, நாட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு ஒப்பந்தத்திலும் நான் கையொப்பமிடப் போவதில்லை.- என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# நாம் தேர்தலில் போட்டியிடுவதை தடுப்பதற்கே புதிய சட்டத்தை இயற்றியது நல்லாட்சி அரசு!

## குற்றஞ்சாட்டுகிறார் பசில் ராஜபக்ஷ



கொழும்பு, மே 07

கோட்டாபயவும் நானும் தேர்தலில் போட்டியிடாமல் தடுப்பதற்கே நல்லாட்சி அரசு புதிய சட்டத்தைக் கொண்டு வந்தது என்று முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள நேர்காணலிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இரட்டைப் பிரஜா உரிமை இருப்பவர்கள் தேர்தலில் போட் டியிட முடியாது என்பது நல்லாட்சி அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட புதிய சட்டமாகும்.

நானும் கோட்டாபய ராஜபக்ஷவும் தேர்தலில் போட்டியிடுவதைத் தடுக்கும் வகையிலே அந்தச்சட்டம் கொண்டு வரப்பட்டது.

என்றாலும் இந்தச் சட்டத்தால் தற்போது மாட்டிக்கொண்டிருப்பது கீதா குமாரசிங்கவும் முன்னிலை சோஷலிஸக் கட்சியின் தலைவரும் தான்.

19ஆம் திருத்தம் என்பது புதிய விடயம் அல்ல.

மேலும், இரட்டைப் பிரஜா உரிமை இருப்பவர்கள் நாட்டில் இடம்பெறுகின்ற தேர்தல்களில் போட்டியிட முடியாது என தெரிவித்திருப்பது நல்ல விடயமல்ல.

இவ்வாறானவர்கள் உலகில் பலர் இருக்கின்றனர். கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இரட்டை பிரஜா உரிமை இருக்கின்றது.

இதனால், எந்தப் பாதிப்பும் அவருக்கு ஏற்படவில்லை. ஆனால், எமது நாட்டுப் பிரஜா உரிமை இல்லாத அர்ஜுன் மகேந்திரனுக்கு மத்திய வங்கி ஆளுநர் பதவி வழங்கப் பட்டிருந்தது. இது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை விடவும் பயங்கரமானதாகும்.

அத்துடன், எனக்கு அமெரிக்க பிரஜா உரிமை இருக்கின்றது. அதனை விடுவதற்கு நான் தயாரில்லை.

என்னுடைய மனைவி, பிள்ளைகள் அங்குதான் இருக்கின்றனர். அதில் மறைப்பதற்கு ஒன்றும் இல்லை. அத்துடன், அமெரிக்கபிரஜாஉரிமையுடன் தான் இலங்கையில் அரசியலுக்கு வந்தேன். அதனை அறிந்தும் கம்பஹா மாவட்ட மக்கள் எனக்கு அதிக விருப்பு வாக்குகளை வழங்கியிருந்தனர்.

மேலும், 19ஆம் திருத்தம் மூலம் அரசு எதனையும் செய்யவில்லை. ஜனாதிபதியின் அதிகாரத்தை குறைப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

அவ்வாறு முடியுமானால் செய்து காட்டட்டும். மாறாக மஹிந்த ராஜபக்ஷவுக்கும் எங்களுக்கும் தேர்தலில் போட்டியிட முடியாமல் செய்ததை மாத்திரமே மேற்கொண்டனர். வேறு எந்தத் திருத்தத்தையும் இதன்மூலம் மேற்கொள்ளவில்லை.

அத்துடன், கோட்டாபய ராஜபக்ஷ அரசியலுக்கு வருவதாக இருந்தால் அவர் அமெரிக்க பிரஜா உரிமையை இல்லாமலாக்கிக்கொள்ள நேரிடும். அவர் அரசியலுக்கு வருவது தொடர்பாக மக்களே தீர்மானிப்பார்கள்.- என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## அரியாலை அம்பாளுக்கு கும்பாபிஷேகம் இன்று

*அரியாலை வெட்டுக்குளம் ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலய 1008 சங்காபிஷேகப் பெருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. காலை 6 மணிக்கு பூசை ஆரம்பமாகித் தொடர்ந்து முற்பகல் 11.30 மணிக்கு விசேட பூசைகள் முடிவுற்று மகேஸ்வர பூசை இடம்பெறும்.*

*அதை அடுத்து மாலை 5.30 மணிக்கு விசேட பூசையுடன், வசந்த மண்டப பூசை திருவூஞ்சலைத் தொடர்ந்து இரவு 7 மணிக்கு அம்பாளின் கிராமப் பிரவேசம் இடம்பெறும். (இ)*





Yarl pardy
யாழ் பாடி
யாழ். மண்ணில் சுவையான பாரம்பரிய ஒடியல் கூழை சுவைத்து மகிழுங்கள்.
சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் முற்பகல் 10 மணி தொடக்கம்
No. 49 - 51, Amman Road, Nallur, Jaffna.
Email - tysunda@gmail.com
House Keeper - 075 9875800
Tel:- 021 222 6868/ 075 934 0026/ 077 7360353



நாகபூஷணி திருமண சேவை
டாக்டர், எஞ்ஜினியர் ,எக்கௌண்டன், அரச உத்தியோகத்தர், தனியார் துறையினர் மற்றும் வெளிநாட்டு மணமகன், மணமகள்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர். மிகத் துல்லியமாகப் பொருத்தம் பார்த்து நீங்கள் விரும்பும் மணமக்கள் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும்.
வாரத்தின் ஏழு நாள்களும் திறந்திருக்கும்.
383/14B கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் கோயில் வடக்குப் பக்கம்)
C/426
021 222 9306, 077 1387596

# 3 ஆயிரத்து 700 கோடி ரூபா வருமான வரியை இழக்கும் அரசு!

## வருமானவரி திணைக்களத்தின் தொழிற் சங்கங்கள் எச்சரிக்கை

கொழும்பு, மே 07

அரசு 3 ஆயிரத்து 700 கோடி ரூபாவரி வருமானத்தை இழக்கும் நிலையில் உள்ளது என்று உள்நாட்டு வருமான திணைக்களத்தின் தொழில் சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

கடந்த நவம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2017ஆம் ஆண்டுக்கன வரவு-செலவுத் திட்டத்திற்காக வரி யோசனைகள் செயற்படுத்த முடியாமல் போனமையால் இந்த நிலைமை ஏற்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வரி யோசனையை செயற்படுத்த வேண்டுமாயின் அதனை வர்த்தமானியில் உள்ளடக்கிச் சட்டமாக அறிவிக்கப்பட வேண்டும். அதன் பின்னரே வரி சேகரிக்கும் செயற்பாட்டுக்கு உள்நாட்டு வருமான திணைக்களத்துக்கு அதிகாரம் கிடைக்கும்.

நிதி வருடம் ஆரம்பமாகி ஒரு மாதம் நிறைவடைந்துள்ள போதிலும் இன்னமும் வரி யோசனை வர்த்தமானியில் உள்ளடக்கப்படவில்லை.

இவ்வாறான நிலைமை ஒன்று நீண்ட கால வரலாற்றில் ஏற்படவில்லை என்றும் அந்த தொழிற்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)





## மதுபான தொழிற்சாலையை மூடுக: மட்டக்களப்பு மக்கள் ஆர்ப்பாட்டம்!

மட்டக்களப்பு - கொடுவா மடு மக்கள் மதுபான தொழிற்சாலையை மூடக்கோரியும், தாக்குதலுக்கு இலக்கான ஊடகவியலாளர்களுக்கு நீதியான விசாரணையை வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

இந்த ஆர்பாட்டம் நேற்று முற்பகல் 11 மணியளவில் மட்டக்களப்பு செங்கலடி கொடுவாமடுவில் இடம் பெற்றுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரனும் கலந்து கொண்டார். (ஐ)

## அம்பாறையில் ஆலயங்களில் திருடிய பெண் உட்பட மூன்று பேர் கைதாகினர்

அம்பாறை திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இந்து ஆலயங்களில் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட ஒரு பெண் உட்பட மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று திருக்கோவில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


கடந்த திங்கட்கிழமை இரவு விநாயகபுரம் கிராமத்தில் அமைந்துள்ள படபத்திர காளியம்மன் கோயிலின் மூலஸ்தான கதவு உடைக்கப்பட்டு நகைகள் திருடப்பட்டிருந்தன. இது தொடர்பாக ஆலய தலைவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சாமந்த விஜயசேகரவின் பணிப்புரைக்கமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்தநிலையில் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தொலைபேசி தகவலையடுத்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து திருட்டுப்போன தங்க நகைகள் மீட்கப்பட்டமையுடன் அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மன்னார் புதுக்குளம் றோ. க. வின் மைதானப் புனரமைப்புக்கு நிதியுதவி



மன்னார், மே 07

மன்னார் பாலையடிப் புதுக்குளம் றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலையின் மைதானப் புனரமைப்புக்கு வடமாகாண அமைச்சர் பா.டெனிஸ்வரன் 5 லட்சம் ரூபா ஒதுக்கீடுசெய்துள்ளார்.

அண்மையில் பாடசாலையில் இடம்பெற்ற புதிய கட்டடத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடத்தைத் திறந்துவைத்தார்.

இதன்போது பாடசாலையின் மைதானப் பிரச்சினை சம்பந்தமாகப் பாடசாலையின் அதிபர் மற்றும் பழைய மாணவர்களால் சுட்டிக்காட்டப்பட்டு அதற்கான உதவியும் கோரப்பட்டிருந்தது.

மைதானத்தை நேரில் பார்வையிட்ட அமைச்சர், அதன் நிலையையும் மாணவர்களின் நலனையும் கருத்தில் கொண்டு இந்த ஒதுக்கீட்டை மேற்கொண்டுள்ளார். (ஐ)

## சிங்கப்பூரில் கடல் பாதுகாப்புக் கண்காட்சி; இலங்கைக் கடற்படைக் கப்பல்கள் பங்கேற்பு!

கொழும்பு, மே 07

இலங்கைக் கடற்படைக்குச் சொந்தமான சாகர மற்றும் நந்திமித்ர ஆகிய ஆழ்கடல் பகுதியில் கண்காணிப்புக் கடமையில் ஈடுபடும் இரு கப்பல்களும் சிங்கப்பூருக்குச் சென்றுள்ளன.

சிங்கப்பூரில் இடம்பெறும் சர்வதேச கடல் பாதுகாப்பு கண்காட்சியில் கலந்துகொள்வதற்காகவே இந்தக் கப்பல்கள் அங்கு சென்றுள்ளன. இதில் 34 அதிகாரிகளும் 290 கடற்படையினரும் சென்றுள்ளனர்.

கொழும்புத் துறைமுகத்தில் இருந்து நேற்றுமுன்தினம் இந்தக் கப்பல்கள் புறப்பட்டுச் சென்றுள்ளன என்று கடற்படைப் பிரிவு அறிவித்துள்ளது.

இந்தக் கப்பல் எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரையில் அங்கு தங்கி நிற்கும் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

## சுகாதாரத் தொண்டர்களது போராட்டம் தொடர்கிறது

நிரந்தர நியமனம் வழங்க கோரி வவுனியா சுகாதாரத் தொண்டர்கள் முன்னெடுத்து வரும் போராட்டம் நேற்று 3 ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

போராட்டத்தை முன்னெடுத்துவரும் சுகாதாரத் தொண்டர்கள் தங்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கும்வரையில் தாம் தொடர்ந்து போராட்டம் மேற்கொள்ளவுள்ளனர் என்றும் தங்களது நியாயமான போராட்டத்துக்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவை வழங்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், 15 வருடங்களுக்கு மேலாகக் கடமையாற்றி வரும் தங்களுக்கு நியமனம் வழங்கப்படவில்லை, சுகாதார தொண்டராகப் பணியாற்றிவரும் தங்களுக்கு வடமாகாண சுகாதார அமைச்சர் நியமனம் வழங்குவதாக வாக்குறுதியளித்துள்ளார். அதற்கு அவர் இன்று வரை நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

கடந்த வாரம் அவருடன் மேற்கொண்ட கலந்துரையாடலில் சாதகமான தீர்வு கிடைக்கவில்லை. அதனை அடுத்தே போராட்டம் மேற்கொள்ளத் தீர்மானித்தோம் என்று தெரிவித்துள்ளனர். (ஐ-100)




## வன்னி உயர்தர மாணவருக்கு இலவச முன்னோடிப் பரீட்சை

வவுனியா அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் அபிவிருத்தி சங்கம் மாணவர்களின் கல்வி நிலையைக் கண்டறிதலும் அதனை மேம்படுத்தலும் என்ற தொனிப்பொருளின் கீழ் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள கணித, உயிரியல் மற்றும் வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கு வருடந்தோறும் இலவசமாக நடத்தப்படும் முன்னோடிப் பரீட்சையை நடத்தி வருகின்றது.

இந்தப் பரீட்சை இந்த வருடம் நான்காம் முறையாக வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய 4 மாவட்டங்களில் நாளை 8 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரை நடத்தவுள்ளது.

கணிதம் மற்றும் உயிரியல் பிரிவுகளுக்கான பரீட்சைகளே இவ்வாறு நடைபெறவுள்ளன.

இந்த மாத பிற்பகுதியில் வர்த்தகப் பிரிவுக்கான பரீட்சை நடைபெறவுள்ளது.

வர்த்தகப் பிரிவுப் பரீட்சை வவுனியா மாவட்டத்திலும் கணித, உயிரியல் பிரிவு பரீட்சை மூன்று மாவட்டங்களிலும் நடைபெறும். மாணவர்களின் வினாத்தாள்கள் திருத்தப்பட்டு பெறுபேறுகள் வெளியிடப்படும். அத்துடன் பரீட்சைக்கான புள்ளித் திட்டமும் விடைத்தாளும் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

கடந்த காலங்களில் இந்தப் பரீட்சை உயர்ந்த பெறுபேறுகளைப்பெறுவதற்கு உதவியதாக ஆசிரியர்களும் மாணவர்களும் குறிப்பிட்ட நிலையில் இதனைத் தொடர்ந்து நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று வவுனியா அனைத்து பல்கலைக்கழக மாணவர் அபிவிருத்தி சங்கத் தலைவர் தெரிவித்தார். (ஐ-100)

## மூன்று வயதுக் குழந்தையின் உயிரைப் பறித்த பணிஸ்!

பணிஸ் தொண்டையில் சிக்கியதால் மூன்று வயதுக் குழந்தையின் உயிர்பிரிந்தது.

இந்தச்சம்பவம் நேற்றுக் காலை வேளையில் சிலாபத்தில் நடந்துள்ளது. குழந்தைக்கு காலை உணவாகப் பணிஸ் வழங்கப்பட்டுள்ளது.

பணிஸின் சிறு பகுதி தொண்டையில் சிக்கியதால் குழந்தை சுவாசிப்பதற்கு சிரமம் ஏற்பட்டுள்ளது. பின்னர் குழந்தையை பெற்றோர், சிலாபம் பொது மருத்துவமனையில் அனுமதித்துள்ள நிலையில் குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# இலங்கை வரும் இந்தியப் பிரதமரின் பாதுகாப்புக்கு 6 ஆயிரம் பொலிஸார்!


கொழும்பு, மே 07

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கான சிறப்பு பாதுகாப்பில், 6ஆயிரம் இலங்கைப் பொலிஸார் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுந்தரத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஐ.நா. வெசாக் நிகழ்வில் பங்கேற்பதற்காக இலங்கைக்கு வரவுள்ள இந்தியப் பிரதமருக்கு சிறப்பு பாதுகாப்பு வழங்க இலங்கைப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்தியப் பிரதமர் மற்றும் ஐ.நா. வெசாக் நிகழ்வு ஆகியவற்றின் பாதுகாப்புக்கு 6 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.



இதில் சாதாரண பொலிஸார், சிறப்பு அதிரடிப்படையினர் மற்றும் மிக முக்கிய பிரமுகர்களுக்கான பாதுகாப்பு பணிகளில் ஈடுபடும் சிறப்பு பயிற்சி பெற்ற அதிகாரிகளும் உள்ளடங்குகின்றனர்.

கொழும்பு, கண்டி மாவட்டங்களில், கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அத்துடன், நாடெங்கும் வெசாக் நிகழ்வுகள் நடைபெறும் விகாரைகளுக்கும் சிறப்பு பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது.

இந்தியப் பிரதமரின் வருகையின்போது எந்த நாச வேலைகளையும் மேற்கொள்ள முடியாது, இந்த விடயத்தில் சிறப்பு கவனம் செலுத்த பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கைக்கு எதிர்வரும் 11 ஆம் திகதி விஜயம் செய்யவுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியின் பயண நிகழ்ச்சி நிரல் குறித்த தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

எதிர்வரும் 11 ஆம் திகதி பிற்பகல் 5.30 மணிக்கு இந்தியப் பிரதமர் நரேதந்திர மோடிகட்டுநாயக்க சர்வதேச வானூர்தி நிலையத்தை வந்தடையவுள்ளனர் என்று அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதையடுத்து, 12 ஆம் திகதி காலை 9 மணிக்கு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ள சர்வதேச வெசாக் பண்டிகை நிகழ்வில் பங்கேற்கவுள்ளார்.

பின்னர் டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலை திறப்பு விழா நிகழ்வில் முற்பகல் 11.15 மணி அளவில் மோடி பங்கேற்க உள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கண்டியில் இடம்பெறும் நிகழ்வொன்றிலும் மோடி பங்கேற்கவுள்ளார்.

இவ்வாறாக தமது இரண்டு நாள்கள் இலங்கை விஜயத்தில் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்கும் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி, 12 ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் இந்தியாநோக்கி புறப்பட உள்ளார் என்று அரசாங்க தகவல் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

## இந்தியப் பிரதமர் மோடிக்கு ஜனாதிபதி மைத்திரி பாராட்டு!



கொழும்பு, மே 07

இலங்கை உட்பட சார்க் நாடுகளின்பொதுத்தொலைத் தொடர்பாடலுக்குப் பயன்படுத்தக் கூடிய செய்மதியை இந்தியா நேற்றுமுன்தினம் விண்ணுக்கு ஏவியது.

இதனையிட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

அனுராதபுரம் ஜனாதிபதி மாளிகையில் இருந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தியப் பிரதமருடன் செய்மதி ஊடாகத் தொடர்பு கொண்டு தனது பாராட்டைத் தெரிவித்துள்ளார்.

பிராந்திய நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பு, அபிவிருத்தி என்பனவற்றுக்காக ஏவப்பட்ட செய்மதி வரலாற்றின் மைல் கல்லாகும் என்றும் ஜனாதிபதி சுட்டிக் காட்டியுள்ளார்.

சார்க் பிராந்திய நாடுகளுக்கு இடையிலான உறவுகளை மேம்படுத்த இந்திய பிரதமர் எடுக்கும் நடவடிக்கைகளையும் அவர் பாராட்டிப் பேசியுள்ளார்.

## பாரிஸில் இரண்டரைக் கோடி ரூபாவை செலவுசெய்தார் சிராந்தி ராஜபக்ஷ!

### வெளி விவகார அமைச்சர் மங்கள குற்றச்சாட்டு



கொழும்பு, மே 07

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவின்மனைவி சிராந்தி ராஜபக்ஷ பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் யுனெஸ்கோவின் ஏற்பாட்டில் நடைபெற்ற வெசாக் பண்டிகையில் கலந்து கொள்வதற்காக சென்ற செலவு இரண்டுகோடி 50 லட்சம் ரூபா என்று வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும் பொழுதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 2014 ஆம் ஆண்டு பாரிஸ் சென்ற பொழுது சிராந்தி ராஜபக்ஷவின் ஹோட்டலுக்கு வழங்கிய தொகை இரண்டுகோடி 50 லட்சம் ரூபா ஆகும்.

குறிப்பாக, சிராந்தி தங்கியிருந்த ஹோட்டலின் அறை ஒன்றுக்கு ஒரு நாள் வாடகையாக, 63, 945.50 யூரோ ஆகும். இவர்களின் உறவினர்களுக்கு 6, 924 யூரோ செலவானது. ஒரு நாளைக்கு மட்டும் இவர்கள் 1, 350 யூரோ செலவு செய்துள்ளனர்.

இதேவேளை, இவர்களுக்காக மினி பார் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்கு நாள் ஒன்றுக்கு 970 யூரோ. தொலைபேசி அழைப்புக் கட்டணம் 1, 200 யூரோ.இவை அனைத்தையும் அன்றைய ஆட்சியில் இருந்த அரசு தான் வழங்கியிருக்கிறது.- என்றும் அவர் சபையில்சுட்டிக்காட்டியுள்ளார்.

## ரொசான் ரணசிங்க எம்.பியின் பாதுகாப்பு வாகனம் மீது தாக்குதல்!

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொலனறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரொசான் ரணசிங்கவின் பாதுகாப்பு வாகனம் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினருடன் பயணம் செய்தபாதுகாப்பு வாகனத் தொடரணியில் பயணித்த வாகனம் ஒன்றின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு வெலிக்கந்த பிரதேசத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.இந்த சம்பவம் தொடர்பில் வெலிக்கந்த பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரொசான் ரணசிங்க, வெலிக்கந்த பிரதேசத்தில் மரண வீடு ஒன்றுக்கு சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த போது இடையில் மறைந்திருந்த சிலர் கற்களால் தாக்குதல் நடத்தியுள்ளனர்.


## பிரபல நடிகையை சந்தித்தார் மஹிந்த!

கொழும்பு, மே 07

பிரபல நடிகையும், ஐக்கிய தேசிய கட்சியின் தென் மாகாண சபை உறுப்பினருமான நதீஷா ஹேமமாலியை, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சந்தித்துள்ளார்.

கொழும்பின் பிரபல ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற திருமண நிகழ்வின்போதே இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

அந்த சந்தர்ப்பத்தில் மஹிந்தவுடன் எடுக்கப்பட்ட புகைப்படம் ஒன்று நடிகை நதீஷா தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.



இதேவேளை, விரைவில் நதீஷா, மஹிந்த தலைமையிலான பொதுஜன பெரமுன கட்சியில் இணையவுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?



ஏவிளம்பி வருஷம் 2017 ஆம் ஆண்டு சித்திரைத்திங்கள் 24 ஆம் நாள் துவாதசி இரவு 9.42 வரை. பின்னர் திரயோதசி. நட்சத்திரம் உத்தரம். காலை 7.44 வரை பின்னர் அத்தம். அமிர்த சித்தயோகம் முழுவதும். ராகுகாலம் மாலை 4.47 முதல் 6.21 வரை. சுபநேரம் காலை 8.54 முதல் 10.22 வரை. திவசம் செய்ய வேண்டிய திதி: சித்திரை மாத வளர்பிறை துவாதசி.

**சந்திராட்டமநாள்:** அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்களில் ஜனித்தவர்கள் இந்நாளில் நற் கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும்.

## 07.05.2017 இல் இருந்து 13.05.2017 வரை



**மேஷம்:** மேஷராசியினருக்கு நன்மையான வாரம். வருமானம் வளமாக இருக்கும். இதுவரை எதிரியாய் எண்ணியவர்கள் இணக்கமாக நடந்து கொள்வார்கள். தொட்ட காரியம் யாவும் துலங்கும். புதிய உறவு, புதிய நட்பு என்று பெருமிதமாய் வளைய வருவார்கள். இதுவரை தொந்தரவு தந்த நோய்கள் நீங்கி ஆரோக்கியம் நன்றாக இருக்கும். படித்து முடித்த சிலருக்கு உயர்ந்த பதவி தேடி வரும். மாணவர் சிலர் உயர் கல்வியின் பொருட்டு வெளியூர் செல்வார்கள். இதுவரை மன உளைச்சலைத் தந்த வழக்குகள் சாதகமாக முடியும்.



**ரிஷபம்:** இடபராசியினருக்கு அனுகூலமான வாரம். பணப்புழக்ககம் சரளமாக இருக்கும். புதிய இல்லத்தில் குடியேறும் பாக்கியம் உண்டாகும். பூர்வீகச் சொத்தும் இவர்கள் வசம் வருவதால் திட்டமிட்டபடி இல்லத்தின் வசதிகளைப் பெருக்கிக் கொள்ள முடியும். சவாலான காரியங்களையும் சட்டென்று முடிக்கும் வல்லமை உண்டாகும். வேலை கிடைக்காமல் ஏங்கிக் கொண்டிருந்தவர்கள் நல்ல பதவியில் அமருவார்கள். வியாபாரிகளின் விளம்பர யுக்தியால் வாடிக்கையாளரின் ஆதரவும் வரவும் அதிகமாகும்.



**மிதுனம்:** மிதுன ராசியினருக்கு சஞ்சலமான வாரம். தொழிலில் பல நெருக்கடிகள் தோன்றி இவர்களை அலைக்கழிக்கும் இவர்களின் உழைப்புக்குரிய பலனை பிறர் அனுபவிப்பார்கள். சொந்த விடயங்களுக்காக பிறர் தயவை நாட வேண்டி இருக்கும். வியாபாரிகள் எதிர்பார்த்த இலாபம் குறையும். வாகனங்களில் தனியாகப் பயணம் செல்வதைக் குறைப்பது நல்லது. குடும்பத்தில் அடுத்தவரின் தலையீட்டால் குழப்பங்கள் உருவாகும். பணப்புழக்கத்தில் ஏற்றத்தை விட இறக்கங்கள் அதிகமாகக் காணப்படும்.



**கடகம்:** கடகராசியினருக்கு மத்திமமான வாரம். வருமானம் சுமாராக இருக்கும். செலவீனங்கள் அதிகமாகும். நண்பர்கள் எதிரிகளாக மாறுவார்கள். தொழிலில் பிரயாசை, அலைச்சல் அதிகமாகும். வியாபாரிகளுக்கு போட்டிகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இவர்களுக்கு கிடைக்க வேண்டிய நல்லதை சிலர் தடுக்க முயல்வார்கள். உயரதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகமாகும். முன்பின் யோசிக்காமல் எந்த வேலையிலும் இறங்க வேண்டாம்.



**சிம்மம்:** சிங்க ராசியினருக்கு ஆக்கபூர்வமான வாரம். பணம் தாராளமாகப் புழங்கும். நண்பர்கள், உறவினர்கள் அனுசரணையாக நடந்து கொள்வார்கள். வெளிநாட்டு உறவுகளிடமிருந்து புதிய பொருள்கள் வந்து சேரும். வேலை புரியும் பெண்களுக்கு சொல்லுக்குரிய மதிப்பும், மரியாதையும் இருக்கும். வியாபாரிகள் புதிய யுக்திகளை மேற் கொள்வதன் மூலம் லாபம் கணிசமாய் அதிகரிக்கும். சகோதர உறவு மேம்படும்.



**கன்னி:** கன்னி ராசியினருக்கு யோகமான வாரம். தனலாபம் பெருகும். உத்தியோகத்தர்களுக்கு உயர் பதவிக்கான விண்ணப்பம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். சிலருக்கு வெளிநாட்டில் தொழில்புரியும் வாய்ப்புகள் அமையும். வெளி வட்டாரப் பழக்கம் மூலம் காரியங்கள் சாதகமாய் முடியும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறும். வாய்ப்பு க்னிந்து வரும். புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும்.



**துலாம்:** துலாராசியினருக்கு கவலையான வாரம். பணவரவு குறையும். குடும்பத்தில் வீண் வாக்குவாதங்கள் உண்டாகும். செய்யும் தொழிலில் ஆதாயம் குறையும். வீண் அலைச்சல் உண்டாகும். பண விடயங்களில் யாருக்கும் கொடுப்பதோ, வாங்குவதோ கூடாது. உத்தியோகத்தர்கள் தொழிலில் கவனக் குறைவால், மேலதிகாரிகளின் கோபத்துக்கு ஆளாக நேரும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல்கள் உண்டாகும்.



**விருச்சிகம்:** விருச்சிக ராசியினருக்கு இன்பமான வாரம். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். நண்பர்கள், உறவுகள் அன்பு ஆதரவாக இருப்பார்கள். வேலை தேடுபவர்களுக்கு வெற்றிச் செய்தி கிடைக்கும். சிலர் வெளிநாடு செல்ல நேரும். கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்த குடும்பங்கள் ஒன்று சேர்வார்கள். தொழில் பயிற்சி பயிலும் மாணவர்கள் ஏற்றம் காண்பார்கள்.



**தனுசு:** தனுசு ராசியினருக்கு மத்திமமான வாரம். வருமானம் சுமாராக இருக்கும். உடல் நலம் பாதிப்புண்டாகும். நண்பர்களுடன் அநாவசியமான மனத் தாங்கல் ஏற்படும். தொழிலில் கடின உழைப்பு காணப்படும். வீண் அலைச்சல்களால் உடல் சோர்வடையும். குடும்பத்தில் செலவுகள் அதிகமாகும். எவ்வளவு பொருள் வரவு இருந்த போதிலும் முதலீட்டுக்கு பற்றாக்குறை உண்டாகும். புதிய முயற்சியில் தேவையற்ற தடங்கல் உண்டாகும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை.



**மகரம்:** மகர ராசியினருக்கு இனிமையான வாரம். சரளமான பணப்புழக்கம் உண்டாகும். புதிய முயற்சி வெற்றி தரும். வியாபாரிகள் புதிய தொழில் யுக்திகளைக் கடைப்பிடித்துச் சாதனை படைப்பார்கள். தாமதம் ஆகி வந்த பதவி உயர்வு கிட்டும். உத்தியோகத்தர்களுக்கு தன ஆதாயமுடன் கூடிய இடமாறுதல் கிடைக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடைபெறும். பிரிந்தவர்கள் மீண்டும் இணைவார்கள். கொடுக்கல், வாங்கலில் திருப்தி உண்டாகும்.



**கும்பம்:** கும்ப ராசியினருக்கு துன்பமான வாரம். வருமானம் குறையும். மனதில் சஞ்சலம் உண்டாகும். சுற்றத்தாரும், நண்பர்களும் பகை கொள்வார்கள். தொழில் நிமித்தம் குடும்பத்தை விட்டுப் பிரிய நேரும். தொழிலில் பல இடையூறுகள் ஏற்படும். உத்தியோகத்தில் வேலைப்பளு கூடும். பணம் கையாள்வதில் எச்சரிக்கை தேவை. வரவுக்கு மீறிய செலவுகளால் கடன்பட நேரும். கொடுக்கல் வாங்கலில் பிரச்சினை உண்டாகும்.



**மீனம்:** மீன ராசியினருக்கு விருத்தியான வாரம். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். செய்தொழிலில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். புதிய முயற்சிகள் வெற்றி தரும். குடும்பத்திரல் கலகலப்பும், சந்தோஷமும் மிகுந்து காணப்படும். சமூகத்தில் செல்வாக்கும், புகழும் கூடும். அவர்கள் சொல்லுக்கு மதிப்பு அதிகரிக்கும். குடும்பத்தில் சுபகாரிய நிகழ்வுகள் உண்டாகும். சகோதர உறவுகள் மேம்படும். சிறுதொழில் செய்வோரும் சிறு உத்தியோகம் வகிப்போரும் பெரும் நன்மை அடைவார்கள்.

## முள்ளிவாய்க்கால்

# நினைவுகூர்தலும் சமூக குணமாதலும்

மனநல மருத்துவ நிபுணர்
எஸ். சிவதாஸ்



> நான் அண்மையில் வன்னிப் பிரதேசத்தில் நடைபேற்ற ஒரு நிகழ்வில் உரையாற்றும் போது முள்ளிவாய்க்கால் நினைவு கூரலை அரசியலாக்காதீர்கள் என்று விநயமாகக் கேட்டுக்கோண்டது பல அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. அது திரிவுபடுத்தப்பட்ட பிழையான கண்ணோட் டத்தில் எடுத்துக்கோள்ளப் பட்டதால் இந்தக் கட்டுரையை வரைய வேண்டிய தேவை எனக்கு ஏற்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் என்பது ஓர் உரிமைப் போரில் ஆக்ரோஷமாக ஈடுபட்ட ஓர் இனத்தின் பேரவலம். தொடர்ச்சியாக அவலத்தைச் சந்தித்து வந்த சமூகத்தின் ஒரு குறியீடு. இந்த அவலத்திற்குப் பல காரணங்கள் ஏதுவாக அமைந்து விட்டன. போராட்டத்தின் வடிவத்தில் ஏற்பட்ட பிறழ்வுகள், விவேகமான முடிவுகளை தீர்க்கதரிசன கண்ணோட்டத்தில் தலைமைகள் எடுக்க முடியாமை, சர்வதேச உதவியினுடனான வினைத்திறனான இராணுவப் புலனாய்வுக் கட்டமைப்பு, இலங்கைத் தீவின் புவிசார் அமைவிடமும் அதன் அரசியல் முக்கியத்துவமும் எனப் பல காரணங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். இத்தகைய காரணிகளில் எது முக்கியமான பங்கை ஏற்படுத்தியது என்பதை காலம்தான் கணித்திட வேண்டும்.

எது எவ்வாறாக இருந்தபோதிலும் இந்த போரவலம் அந்த இனத்திற்கு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது என்பது மட்டும் விவாதத்திற்கப்பாற்பட்ட உண்மை. இந்த காயத்தினைச் பலர் தற்கால பின்னடைவு என ஒருவித மறுதலிப்புடன் பார்க்கின்றனர். சிலர் இப்படியாகத்தான் இந்த உரிமைப் போர்முடியும் என முன்பே எதிர்பார்த்ததாகக் கூறுகின்றனர். இன்னும் சிலரோ இதனை கூட்டு மனக்காயம் அல்லது அதனிலும் பார்க்க வீரியமாக ''கூட்டு மனவடு'' என விவரிக்கின்றனர்.

பொதுவாகக் குறிப்பிட்டால் இந்தப் போரவலம் அதை எதிர்கொண்ட இனத்துக்கு மாபெரும் இழப்பு எனலாம். அந்த இனத்தின் புற அடையாளங்களான உடைமைகள், சொத்துக்கள், பெருநிலப்பரப்புக்கள், ஆளணிகள் என்பனவும் அக அடையாளங்களான தேசியம், சுதந்திரம், மானம், உரிமை, குழும அடையாளம், கலாசார பண்பாடு போன்றவற்றின் இழப்பாகவும் அமைந்து விட்டது. இதனை வெறும் கூட்டு மனக்காயம் என்றோ கூட்டு மனவடு என்றோ பாகுபடுத்திவிட முடியாது. இதனை ஒரு கலாசார பண்பாட்டு கழிவிரக்கம் (Cultural Bereavement) என்கின்ற ஒன்றாகவே பார்க்க முடியும். போரவலத்திற்கு முகம் கொடுத்தல் என்பது வெறும் தனிமனித அனுபவம் அல்ல. ஒரு கூட்டு எதிர்கொள்ளல் என்றால் மிகையாகாது. அப்படிப் பார்ப்பதனூடாகவே அதிலிருந்து மீள்தல் சாத்தியமாகும். அல்லாவிடின் ஒருவித தேக்கத்தில் அல்லது நாள்பட்ட புண்ணாகவே இந்த அவலப் பாதிப்பு தொடரும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படும்.

இதை வெறுமனே தற்காலிக பின்னடைவு எனக் கூறுபவர்கள் எந்தவிதமான முன்னெடுப்புக்களையும் மேற்கொள்வதாக தெரியவில்லை. இப்படித்தான் இது முடியும் என்றவர்களிடமோ செயல்திறனுடன்கூடிய மாற்று மார்க்கம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. சமூக மனவடு எனப் பெயரிட்டவர்களிடம் அரசியல் நீக்கம் செய்யப்பட்ட மருத்துவ மாதிரிகள் (models) மட்டுமே எஞ்சியுள்ளன. பொருளாதார நிதியிழப்பு எனக் கூறுபவர்களிடம் பொருத்தமற்ற பண முதலீடுகளுக்கான திட்டங்கள் மட்டுமே இருக்கின்றன. இத்தகையவர்களால் இந்தப் பாதிப்பிலிருந்து சமூகம் மீளும் என எண்ணுதல் வெறும் பகற்கனவே. எனினும் இத்தகைய பாதிப்புக்களுக்கு எதுவுமே செய்யாமல் இருப்பது என்பது சமூகத்தின் அமைதிநிலை, இணைவு வாழ்க்கை, செயற்றிறன் அல்லது உற்பத்தி திறன் என்பனவற்றைப் பாதித்து செழிப்பினை இழந்து அடுத்த நகர்வுக்குச் செல்லாது உரிமை இழப்புடன் உற்பத்தியாக்கமும் இழந்த சமூகமாக மாறிவிடும் அபாயம் உருவாகும். அதைவிட விழுமியங்களைத் தொலைத்த வன்முறை சார்ந்த எதிர்காலச் சந்ததியினை உருவாக்கி அதனைத் தீர்க்க முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்க வேண்டியேற்படும். இவற்றையெல்லாம் முழுமையாக இல்லாமல் செய்துவிட முடியும் என கற்பனை உலகில் இருந்து நான் வாதிட விரும்பவில்லை. ஆனாலும் இத்தகைய தாக்கங்களைக் குறைத்து சமூகத்தை முன்னோக்கி நகர்த்தி விட குணமாக்கும் செயற்பாடுகளை விட வேறு எந்த வழியும் இல்லை என்பதே சமூக யதார்த்தம். அதற்கு ஆரோக்கியமான குணமாக்கும் வெளி (Healing Space) ஏற்படுத்தப்பட வேண்டும். அதன் பின் குணமாகும் திசையை நோக்கி ஒருங்கிணைக்கப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

எனவே, ஒரு சமூகத்தின் கலாசார பண்பாட்டுக் கழிவிரக்கத்தில் இருந்து விடுபடுவது என்பது பல நிறுவனமயப் படுத்தப்பட்ட அமைப்புக்கள் சமூக நோக்குடன்கூடி செயற்றிட்டங்களை நீண்ட கால நோக்குடன் வகுத்து அதனை சமூகமயப்படுத்தி தொடர்ச்சியாக இணைப்புடன் செயற்படுவதன் மூலமே சாத்தியமாகும். அரசியல் தலைமைகள், தொண்டு நிறுவனங்கள், மருத்துவ சங்கங்கள், ஆசிரியர் ஒன்றியங்கள், மத அமைப்புக்கள் எல்லாம் முரண்பட்டு தங்களுடைய நிறுவனத்தின் எதிர்காலத்திற்காகவும் அடுத்தமுறை வரப்போகும் தேர்தலுக்காகவும் திட்டங்களை வகுத்து நிற்கும் நிலை சமூகத்தை பேதலிக்க செய்வதை விட வேறெந்த ஆக்கபூர்வமான விளைவுகளையும் ஏற்படுத்தப் போவதில்லை. அத்துடன் அந்தச் சமூகத்தின் கழிவிரக்கம் மீள மீள அதிகரிப்பதற்கான ஏதுநிலையே ஏற்படுவதுடன் அது குணமாவதற்குரிய வெளியையும் குறைத்து விடும்.போரிற்குப் பின்னான எமது சமூகத்தில் இதுதான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதே யதார்த்தமாகும். ஒருசில பொருள்களைத் தானம் செய்துவிட்டு அடுத்த தேர்தலுக்கு காத்திருக்கும் அரசியல்வாதிகள் ஒருபுறம். சமூக பிரக்ஞை அற்று வினைத்திறன் இழந்து நிற்கும் அரச அதிகாரிகள் இன்னொருபுறம். இந்த எட்டு வருடகால போருக்குப்பிந்திய இந்த யதார்த்தநிலை வேதனைக்குரியது மட்டுமல்ல சமூகத்திற்கு கேடு விளைவிக்கக் கூடியதுமே. இத்தகைய நிலையை விளங்கிக் கொள்வதற்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நல்ல உதாரணமாக அமைகின்றது.

(மிகுதி நாளை...)

''உயிரிழை'' எனப்படும் முள்ளந்தண்டு வடம் பாதிப்புற்றோருக்கான அமைப்பின் புதிய கட்டடத் தொகுதியின் திறப்புவிழா 30.03.2017 அன்று மாங்குளத்தில் நடைபெற்றது. ''உயிரிழை'' என்ற அமைப்பின் உருவாக்கம் 2010இல் கருக்கொண்டு 2011இல் உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. அன்று முதல் அதன் போசகராக இருப்பதால் என்னை அன்றைய நிகழ்வில் சிறப்புரையாற்றும்படி அந்த அமைப்பினர் வேண்டியிருந்தனர்.

அங்கு நான் உரையாற்றும் போது ''இங்கு பல தலைவர்களுக்கும் நான் கூற விரும்புவது என்னவென்றால் தயவுசெய்து வடுக்களை வலிகளாக்காதீர்கள். எங்களுக்கு வடுக்களும், வலிகளும் மாறி மாறி வருகின்றன. பல சந்தர்ப்பங்களில் ஆறிப்போன வடுக்களையும் நாங்களே குத்திக் கிளறிக் கொண்டிருக்கின்றோம் என்பதுதான். இதுதான் இன்றைய வன்னியின் நிலை. இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டாக இன்னும் சில நாள்களில் முள்ளிவாய்க்கால் நினைவு தினம் வரப்போகின்றது. இந்நிகழ்வை தயவுசெய்து அரசியல் சார்ந்ததாக ஆக்காதீர்கள். இங்கு பல மதத் தலைவர்கள், சமூக ஆர்வலர்கள் போன்றோர் இருக்கின்றார்கள். அவர்களுடன் சேர்ந்து ஒரு சமய கலாசார பண்பாடுகள் நிறைந்த நிகழ்வாக நிகழ்த்துங்கள். இந்நிகழ்வு மனக்காயத்தை ஆற்றும் நிகழ்வாக இருக்க வேண்டுமே தவிர வடுக்களை வலிகளாக்குவதாக அமையக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் எனக்கு நல்ல ஞாபகம், இறுதி யுத்தத்தில் முள்ளிவாய்க்காலில் தனது இரு புதல்வர்களையும் தொலைத்துவிட்டு மனவேதனையுடன் வந்த மல்லாவியைச் சேர்ந்த தாய் பல சிகிச்சைகளின் பின் தேறியிருந்த சந்தர்ப்பத்தில் இப்படியான ஒரு மே 18இல் வவுனியாவில் நடைபெற்ற நினைவுகூரல் நிகழ்வில் மீளப்பாதிப்புக்குட்பட்டதை இங்கு நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

அன்று அந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்த அரசியல்வாதிகள் அந்த மேடை நிகழ்வில் அவர்கள் காண்பித்த ஒரு வீடியோக் காட்சியை பார்த்தவுடன் இந்த தாய் பழைய வடுக்கள் கிளறப்பட்ட நிலையில் அழுது புலம்பி எங்கள் மனநல விடுதியில் அனுமதிக்கப்பட்டார். அதன் பின் அவர் பல உபாதைகளுக்கு உட்பட்டு நீண்ட சிகிச்சைகளை பெறுவதற்கு தள்ளப்பட்டார். ஆகவே இவ்வாறான நிகழ்வுகள் பாதிக்கப்பட்டவர்களை தேற்றுவதாக மட்டும் அமையவேண்டுமே தவிர, அக்காயத்தைக் கிளறிவிடும் செயற்பாடாக அமையக் கூடாது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.'' எனக் குறிப்பிட்டிருந்தேன்

தொடர்ந்துஉரையாற்றுகையில், ''உயிரிழை'' என்ற இந்த அமைப்பு எனக்கு முக்கியமான ஒன்று. அதன்மீது எனக்கு அக்கறையும் கருணையும் இருக்கின்றது. இந்த வன்னி மண்ணை ''தாய்மடி'' என்றுதான் நான் கூறுவேன். அந்தத் தாய் மடியில் இந்தக் குழந்தை தவழ வேண்டும் என்பதை உளமாற விரும்பியவன் என்ற வகையிலே இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருக்கின்றேன். 2009இல் இந்த வன்னியில் வாழ்ந்தவர்களுக்கு இருந்த பிரச்சினைகள் வேறு. இன்று அவர்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகள் வேறு. அன்று இந்தப் பிரச்சினைகளை ஆற்றுவதற்கான வெளி வேறு. இன்று அதே பிரச்சினைகளை ஆற்றுவதற்கான வெளி வேறு. இந்த கள யதார்த்தத்தை அறிந்து கொள்ளாமல் பலர் பல வேலைகளை செய்து கொண்டிருக்கிறார்கள்.

அண்மையில் ஒரு நாள் நான் கிளிநொச்சிக்குச் சென்றிருந்தேன். அங்கு காணாமல் போகச்செய்யப்பட்டவர்களுடைய அம்மாமார் பலர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். அதேவேளை, மறுபுறம் வட்டக்கச்சியில் நலிவடைந்த மக்களை வளப்படுத்துவதற்கான ஒரு பயிற்சி பட்டறை நடைபெற்றுக்கொண்டிருந்தது. எல்லா உளவளத்துணையாளர்கள், உளசமூக உத்தியோகத்தர்களும் அந்த நிகழ்வில் பங்கெடுத்திருந்தனர். ஆனால் நூற்றுக்கணக்கான நலிவடைந்தவர்கள் அதேநேரத்தில் உண்ணாவிரதத்தில் பங்கெடுத்துக்கொண்டிருந்தனர். இந்த அம்மாக்களுடன் கதைத்து அவர்களின் துயரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு அந்த உளவளத்துணையாளர்களுக்கு நேரம் இருக்கவில்லை. எவ்வளவு காலத்துக்குத்தான் இந்தப் பயிற்சியை அளிப்பது? என்னைப் பொறுத்தவரை மாற்றங்கள் ஏற்படாமல் பயிற்றுவிப்பதால் ஒரு பயனும் இல்லை. மாற்றங்கள் ஏற்பட வேண்டுமென்றால் இன்றைய களநிலை எங்களுக்குத் தெரிய வேண்டும். எனக்கு நல்ல நினைவிருக்கிறது 21 ஜூலை 2009 ஆடி அமாவாசை தினத்தை மெனிக்பாம் முகாமில் இராணுவத்தினரின் எதிர்ப்பின் மத்தியிலும் நாம் மக்களோடு சேர்ந்து நினைவுகூர்ந்தோம். ஆனால் இன்று எதுவுமே செய்ய முடியாத நிலையில் இருக்கின்றோம் என்றால் நாம் வேறொரு விதமான பிரச்சினையை எதிர்நோக்கிக்கொண்டிருக்கின்றோம் என்பதுதான் அர்த்தம்.

இனி சமூகத் தலைவர்கள், சமயத் தலைவர்கள் போன்றோரே இப் பிரச்சினைகளுக்கான வெளியை ஏற்படுத்த வேண்டும். ''மக்களின் கொதிநிலையைப் புரிந்து கொண்டு குணமாக்குகின்ற வெளியைக் கொடுக்க வேண்டும். முதலில் மக்களைக் காயப்படுத்தும் செயற்பாட்டை நிறுத்த வேண்டும். இதற்கு ஒரு நிபுணத்துவ ஆலோசனை, கூட்டிணைவு என்பன அவசியமானது. இதில் மிக முக்கியமானது, மற்றவர்கள் துன்பப்படும் போதும் அல்லது காயப்பட்டிருக்கும் போதும் அவர்களுடன் இருத்தல் ஆகும். அது அவர்களுக்குள் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தி அதிலிருந்து அவர்கள் மீள்வதற்கும் அதன் பிறகு சுயமாக இயங்கும் நிலைக்கு வந்துவிடுவார்கள். நான் வெறுமனே மனநல மருத்துவராக இதைத்தான் செய்ய முடியும்.'' என்ற குறிப்பிட்டிருந்தேன். அந்த நீண்ட உரையை முழுமையாக தர விரும்பாமல் இத்துடன் முடிக்கின்றேன்.

# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




138

## புலிகளின் போரியல் வளர்ச்சியும் நோர்வேயின் சமாதான முயற்சியும்

### விமானத் தளம் தாக்கி அழிப்பு

ஓர் அரசுடன் எதிர்த்துப் போராடும் ஒரு விடுதலை இயக்கம் என்ற வகையில், விடுதலைப் புலிகள், இராணுவ மற்றும் பொருளாதார இலக்குகளுடன் இந்தத் தாக்குதலுக்குத் திட்டமிட்டிருந்தனர். இராணுவ ரீதியாக, உந்து விசைப் போர் விமானங்களும், தாக்குதல் உலங்கு வானூர்திகளும் போரரங்குகளில் பலத்த உயிர் ஆபத்தை விளைவிப்பனவாக இருந்தன. அத்தோடு, 'பயங்கரவாதத்துக்கு எதிரான போர்' என்ற போர்வையில், சாதாரண பொதுமக்களை இலக்கு வைத்துத் தாக்குவதற்கும் சிறிலங்கா அரசு தனது வான் படையைத் தாராளமாகப் பாவித்து வந்தது. அது மட்டுமல்லாது, ஒரு கவலைக்குரிய விடயம் என்னவென்றால், எதிரியிடமிருந்து வான் வழியாக எதிர்கொண்ட ஆபத்தைக் கட்டுப்படுத்தும் அளவுக்குப் போதுமான படைக்கல வசதிகளையும் விடுதலை புலிகள் கொண்டிருக்கவில்லை. அதனால், சிறிலங்கா வான்படையின் இந்தப் பாதக வலிமையை மட்டுப்படுத்துவதற்காக, அதன் தலைமைத் தளம் மீது ஒரு தரைவழித் தாக்குதலைத் தொடுக்கப் புலிகளின் தலைமை தீர்மானித்தது. அதற்கான திட்டத்தையும் மிக நுட்பமாக வரைந்திருந்தது. கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம், புலிகளின் கணிப்பில் ஒரு தவிர்க்க முடியாத பொருளாதார இலக்காகும். சிறிலங்கா அரசின் சொத்துக்களை நிர்மூலம் செய்வதன் மூலம் நாட்டில் ஒரு பாரதூரமான பொருளாதாரத் தாக்கத்தை விளைவிப்பது புலிகளின் நோக்கம். சிறிலங்கா அரசுக்குச் சொந்தமான இராணுவ மற்றும் பயணிகள் விமானங்களை அழித்து, 500 கோடி டொலர்கள் பெறுமதியான உடனடி இழப்பை ஏற்படுத்தியதன் மூலம், புலிகளின் இந்தத் தாக்குதல் தனது மூலோபாய இலக்கை முழுமையாக எய்து விட்டிருந்தது.

இந்தத் தாக்குதலில், மிகவும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய புலிகளின் சாதுர்யம் என்னவெனில், எந்தவொரு வெளிநாட்டு உல்லாசப் பிரயாணியோ அல்லது பொதுத் தனிநபரோ, கொல்லப்படுவதையோ அல்லது காயத்துக்கேனும் உள்ளாவதையோ தவிர்த்தமைதான். விமான நிலைய வளாகத்திலும், கட்டடங்களுக்குள்ளும் சிறிலங்காப் படையினருடன் கடும் சண்டையில் ஈடுபட்ட போதும், பொது மக்கள் பாதிக்கப்படுவதைப் புலிகள் மிகத் திறம்படத் தவிர்த்திருந்தனர்.

எதிர்பார்க்கப்பட்டதைப் போலவே - விமான நிலையம் மற்றும் வான் படைத்தளம் மீதான இந்தத் தாக்குதல், மிக மோசமான ஒரு பாதிப்பை ஏற்படுத்தி, சிறிலங்காவின் பொருளாதாரத்தையே முடக்கியது. தேசிய வருமானத்தின் ஒரு பிரதான கொடையாளியான, நாட்டின் உல்லாசப் பிரயாணத்துறையை அது செயலிக்கச் செய்தது. விமான நிலைய வளாகத்துக்குள் நிகழ்ந்த கடும் சண்டையையும், அந்தத் தாக்குதலின் இராணுவப் பரிமாணம் சர்வதேச செய்தியூடகங்களில் பெற்ற பரவலான முக்கியத்துவமும் - வெளிநாட்டவர்களின் உல்லாச வருகையைத் தடுத்தது. நீண்டுகொண்டிருந்த போரால் வர்த்தகத்துறை ஏற்கனவே நம்பிக்கையிழந்து போயிருந்த ஒரு புறச்சூழலில், இந்தத் தாக்குதல்,





வெளிநாட்டு முதலீட்டின் மீதும் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. இலங்கை மத்திய வங்கியின் 2001 ஆம் ஆண்டின் நிதியறிக்கை, ''உயர்ந்து செல்லும் பணவீக்கத்தாலும், தாழ்ந்து செல்லும் உலகப் பொருளாதாரத்துடனான சமநிலையாலும், 1948 இற்குப் பின்-சுதந்திர சிறிலங்காவில் ஏற்பட்ட மிகப் பெரிய 'பொருளாதார வீழ்ச்சி'' என விளக்கி, 1.4% எதிர்மறை நிகர வளர்ச்சியை அறிவித்தது. இவ்வாறாக, நாட்டுப் பொருளாதாரத்தின் அதிர்ச்சி அளிக்கும் நிலைமையை விளக்கிய மத்திய வங்கியின் அந்த ஆண்டு அறிக்கை, சிறிலங்காப் பொருளாதாரத்தின் எதிர்கால வளர்ச்சி, நாட்டில் 'சமாதானத்தை நிலை நாட்டுவதிலேயே தங்கியுள்ளது' என்று குறிப்பிட்டது. அந்த ஆண்டறிக்கையின் குறிப்பு இவ்வாறாக உள்ளது.

*''நாட்டில் சமாதானத்தை நிலைநாட்டுவதிலேயே பொருளாதார முன்னேற்றம் நிச்சயமாகத் தங்கியுள்ளது. நீண்டு செல்லும் போர், மனித வள மற்றும் பொருள் வள வகைகளில், நாட்டின் பொருளாதாரத்தை விழுங்கிச் செல்கின்றது. மேலும் பொருளாதார வளர்ச்சிக்கான ஏது நிலைகளை அது கடுமையாகப் பாதித்து விட்டது. பொருளாதார ரீதியாக, இந்த நீண்ட போரின் சுமையாகத் தாங்கிக் கொள்ளக் கூடிய சக்தியை நாடு இழந்தே விட்டது. அதனால், பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண்பது அத்தியாவசியமானது.''*

### கொழும்பில் புதிய ஆட்சியமைப்பு

சந்திரிகா அரசு அரசியல், இராணுவ, பொருளாதார ரீதியாகப் பெரும் நெருக்கடிக்கு முகம் கொடுத்து நின்றது. 'சமாதானத்திற்கான யுத்தம்' என்ற சந்திரிகாவின் கோட்பாட்டை புலிகள் இயக்கம் தனது போர் வலுவால் தவிடு பொடியாக்கியது. இராணுவ அணுகுமுறையால் அரைகுறையான அரசியல் தீர்வு ஒன்றைத் தமிழ் மக்கள் மீது திணித்துவிடலாம் என்ற சிங்கள மேலாண்மைவாதிகளின் கற்பனைக் கோட்டையும் இடிந்துபோனது. வன்னிப் பெரும் சமர்களில் புலிகள் ஈட்டிய திகைப்பூட்டும் சாதனைகளும் சிறிலங்காவின் படைத்துறை சந்தித்த பேரிழப்புகளும் இராணுவத்தின் முதுகெலும்பை முறித்து, மீள முடியாதவாறு முடக்கியது. இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த பின்பு முதற் தடவையாக, தமிழர் மீதான இராணுவ மேலாதிக்க வலுவைச் சிறிலங்கா அரசு இழந்தது. விடுதலைப் புலிகள் அமைப்பு இராணுவச் சமபலத்தை வென்றெடுத்தமையுடன் தமிழர் தாயகத்தின் எழுபது வீதம் நிலப்பரப்பை மீட்டெடுத்து அங்கு தமது ஆட்சியதிகாரத்தை நிலைநாட்டியது. புலிப்படை வெற்றிகொள்ள முடியாத ஒரு போராட்ட சக்தி என்பதை சிங்கள அரசும், அதற்கு இராணுவ ரீதியாக முண்டு கொடுத்த உலக நாடுகளும் உணர்ந்து கொண்டன. எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்ததைப் போன்று கட்டுநாயக்காவில் விழுந்த மரணஅடி, வான்படையின் சிறகுகளைக் கத்தரித்து விட்டதுடன் சிறிலங்காவின் பொருளாதாரத்தைச் செயலிழக்கச் செய்து முடக்கியது.

மீள முடியாத பெரும் நெருக்கடியைச் சந்தித்து நின்ற சந்திரிகாவின் அரசுக்கு புலிகளுடன் சமரசம் செய்து, தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வுகாண முயற்சிப்பதைத் தவிர வேறு மார்க்கம் இருக்கவில்லை. இதனையே மேற்குலக எஜமான்களும் சந்திரிகா அரசுக்குப் போதிக்கத் தொடங்கினர். புலிகளின் போர் வலு இறுதியில் இராணுவத்தின் ஆணவத்தைப் பணியவைத்து, சிங்களத்தைச் சமாதான வழிக்குத் தள்ளியது. இந்தச் சூழ்நிலையில்தான் புலிகளின் சமாதானக் கதவைத் தட்டிப்பார்க்க விரும்பினார் சந்திரிகா. அம்மையாரின் சொல்வழிக்கு அமைய, அவரது ஆலோசகரும் வெளிவிவகார அமைச்சருமான லக்ஷ்மன் கதிர்காமர் கொழும்பிலுள்ள நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்ட்போர்க்கை அணுகி, சமாதான முயற்சியை மீளத் தொடங்கும் சாத்தியம் பற்றி வினவினார். புலிகளுடன் மோதி மூக்குடைபட்டு வருகிறார் கதிர்காமர் என்பதைப் புரிந்து கொண்ட நோர்வே தூதுவர், 'சமாதானத்தில் புலிகள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். ஆனால், சந்திரிகா அரசின் நேர்மையில் அவர்களுக்கு நம்பிக்கை இருக்கவில்லை' என்பதை இராஜதந்திர மென்மொழியில் வெளிநாட்டு மந்திரிக்குக் குத்தலாகச் சொன்னாராம். நான்கு மாதங்களாகப் போருக்கு ஓய்வுகொடுத்த பிரபாகரன், அமைதித் தவம் இருந்து ஏமாந்துபோன தருணத்தில் புலிகள் மீது 'அக்கினிச் சுவாலையை' ஏவி விட்டமையால், விடுதலைப் புலிகளின் தலைமைக்குச் சந்திரிகா அரசு மீது நம்பிக்கை செத்துப் போனதாக நோர்வே தூதுவர் விளக்கினாராம். பேச்சுகளை ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகள் இப்போது சில முன்கோரிக்கைகளை முன்வைக்கிறார்கள் என்று கூறிய நோர்வே இராஜதந்திரி, தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்கும் பொருளாதாரத் தடையை முற்றாக நீக்கி, பயங்கரவாத முத்திரை குத்திப் புலிகள் இயக்கம் மீது அரசு விதித்த தடையை அகற்றி, இரு தரப்பும் இணங்கிய ஒரு நிலையான போர் நிறுத்தப் பிரகடனம் செய்த சமரச சூழ்நிலையில்தான் புலிகள் பேச்சுக்கு வருவார்கள் எனத் தெளிவுபடுத்தினார். சமரசப் பேச்சுகளுக்கு விடுதலைப் புலிகள் முன்நிபந்தனைகள் விதிக்கிறார்கள் எனக் கதிர்காமர் இந்தச் சந்திப்பின் கருத்தாடல் பற்றி அம்மையாருக்கு வியாக்கியானம் அளிக்க, நிபந்தனைகள் எதையுமே ஏற்கமுடியாதெனச் சமாதானக் கதவை மூடினார் சந்திரிகா.

(தொடரும்...)




# ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...? 171

பொன்.வேணு கிருஷ்ணா

இந்த வாரம்(12-19.April.2017) மத்திய கிழக்கில் பாதுகாப்புச் செயலர் ஜேம்ஸ் மாட்டிஸ் பேசுகையில், ''வட கொரியா அதன் நடத்தையை மாற்றிக்கொள்ளவேண்டும்'' என வலியுறுத்தினார். இந்த வாரம் பென்ஸ் இதையே எதிரொலித்ததுடன் அவர், ''கடந்த இரண்டு வாரங்களில் மட்டும், சிரியாவிலும், ஆப்கானிஸ்தானிலும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் எங்களது புதிய ஜனாதிபதியின் வலிமையையும், உறுதிப்பாட்டையும் இந்த உலகம் கண்டது. இந்த பிராந்தியத்தில் அமெரிக்காவின் ஆயுத படைகளின் வலிமையையும், உறுதிப்பாட்டையும் வடகொரியா சோதித்துப் பார்க்க முனைவது நல்லது அல்ல'' எனவும் எச்சரித்தார்.

சிரியா மீதான அமெரிக்க நடுத்தர கப்பல் ஏவுகணைத் தாக்குதல் மற்றும் அமெரிக்கா அதன் பெரும் வெடிமருந்து வான் வெடி குண்டு வெடிப்பை (Massive Ordnance Air Blast - MOAB) ஆப்கானிஸ்தானில் பயன்படுத்தியது தொடர்பான குறிப்புக்கள், உண்மையில் அமெரிக்க ஏகாதிபத்தியம் வடகொரியாவுடன் போரிட விரும்புகிறதேயொழிய, சமாதானமாகப் போக விரும்பவில்லை என்பதை மட்டுமே அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. மத்திய கிழக்கு, மத்திய ஆசியா, பால்கன் மற்றும் வடக்கு ஆபிரிக்கா ஆகிய பகுதிகளில் நிகழ்த்தப்பட்ட ஒரு கால் நூற்றாண்டு கால இராணுவத் தலையீடுகள் மற்றும் போர் ஆக்கிரமிப்புகளுக்குப் பின்னர், அமெரிக்கா, பூகோள மேலாதிக்கத்திற்கான அதன் முனைவில், அணு ஆயுதமேந்திய சக்திகளுக்கிடையே ஈடுபடுத்துகின்றதான ஒரு போரைத் தோற்றுவிக்கும் மோதலின் விளிம்பில் உள்ளது.

## அமெரிக்கப் போர்க் கப்பல் அச்சுறுத்துகிறது

கொரிய தீபகற்பத்தில் ஏற்கனவே பதற்றங்கள் கூர்முனையில் இருக்கையில், அமெரிக்கா அப்பிராந்தியத்திற்கு அணு ஆயுதமேந்திய நீர்மூழ்கிக் கப்பல் USS மிச்சிகனை அனுப்பி உள்ளது. 1,500 கிலோமீற்றருக்கும் அதிக தூரத்தில் இருந்து 150 டோமாஹாக் போர்கப்பல் ஏவுகணைகளைச் செலுத்தும் தகைமை கொண்ட இந்த நீர்மூழ்கிக் கப்பல், தென்கொரியாவின் புஷன் (Busan) துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

USS மிச்சிகன் வந்தடைந்திருப்பதானது, வட கொரியா அதன் இராணுவ ஸ்தாபக தினத்தைக் குறிப்பதற்காக ஓர் அணுகுண்டு சோதனையை அல்லது தொலைதூர ஏவுகணைச் சோதனையை நடத்தும் என்ற தீவிர ஊடக அனுமானங்களுடன் பொருந்தி உள்ளது. அமெரிக்க பெருநிலத்தைத் தாக்க தகைமை கொண்ட கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்கும் ஓர் அணு ஆயுதமேந்திய தொலைதூர ஏவுகணையை பியொங்யாங் அபிவிருத்தி செய்வதைத் தடுக்க, அமெரிக்கா ''சகலவாய்ப்புகளையும்'' பயன்படுத்தும் என்பதை ட்ரம்ப் நிர்வாகம் மீண்டும் மீண்டும் அறிவித்துள்ளது.

அதே நேரத்தில், அணு ஆயுத விமானந்தாங்கி போர்க்கப்பல் USS கார்ல் வின்சன், குறிவைத்துத் தாக்கும் ஏவுகணை அழிப்பான்கள் மற்றும் சிறு போர்க்கப்பல்களைக் கொண்ட அதன் முழு தாக்கும் குழுவுடன், கொரிய தீபகற்பத்தின் கடற்கரையை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. கார்ல் வின்சன் கடைசியாக பிலிப்பைன்ஸ் கடலில் இரண்டு ஜப்பானிய சிறுபோர்க்கப்பல்களுடன் முன்நகர்ந்து கொண்டிருந்ததாகவும், அது வடக்கு நோக்கி நகர்ந்ததும் தென் கொரிய போர்கப்பல்களுடன் இணையும் என்றும் செய்திகள் தெரிவித்தன. அமெரிக்க மற்றும் தென் கொரிய விமானப் படைகளும் கூட்டு போர் ஒத்திகைகளில் தற்போது இணைந்தியங்கி வருகின்றன.



USS றொனால்ட் ரீகன் மற்றும் அதன் விமானந்தாங்கி தாக்கும் குழுவும் ஜப்பானின் யொகொசுகா (Yokosuka) துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ளன.

இம்மாத தொடக்கத்தில், ஜனாதிபதி ட்ரம்ப் வட கொரியாவை எச்சரிக்கையில் அமெரிக்கா வடகிழக்கு ஆசியாவிற்கு ''ஓர் அர்மடாவை அனுப்புவதாக'' எச்சரித்தார்.'' நம்மிடம் நீர்மூழ்கிக் கப்பல்கள் உள்ளன. மிகவும் சக்தி வாய்ந்தவை. விமானந்தாங்கி போர்க்கப்பல்களைவிட மிகவும் சக்தி வாய்ந்தவை. இதை என்னால் உங்களுக்கு கூற முடியும்'', என்றவர் Fox Business Net work இற்கு தெரிவித்தார்.

> அடிப்படை மட்டத்திலும் ஆற்றல் குறைந்த பியொங்யாங்கின் அணு ஆயுத தளவாடங்களை ''உலகிற்கான ஒரு நிஜமான அச்சுறுத்தல்'' என்றும், ''இறுதியில் நாம் தீர்க்க வேண்டிய'' ''ஒரு மிகப்பெரிய உலக பிரச்சினை'' என்றும் முத்திரை குத்தினார்.

ட்ரம்ப் நேற்று ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் அங்கத்தவர்களின் தூதர்களைச் சந்தித்தபோது அதே அச்சுறுத்தலை மீண்டும் பலமாக வலியுறுத்தினார், உள்ளது உள்ளவாறே வட கொரியாவில் விட்டு வைப்பதை ''ஏற்க முடியாது'' என்றார். ஐக்கிய நாடுகள் சபை இன்னும் கூடுதலாக கடுமையான தடையாணைகளை நடைமுறைப்படுத்த வேண்டுமென அழைப்புவிடுத்த அவர், அடிப்படை மட்டத்திலும் ஆற்றல் குறைந்த பியொங்யாங்கின் அணுஆயுத தளவாடங்களை ''உலகிற்கான ஒரு நிஜமான அச்சுறுத்தல்'' என்றும், ''இறுதியில் நாம் தீர்க்க வேண்டிய'' ''ஒரு மிகப் பெரிய உலக பிரச்சினை'' என்றும் முத்திரை குத்தினார்.

ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்க தூதர் நிக்கி ஹேலே கூறுகையில், வொஷிங்டன் வட கொரியாவின் ஆயுத சோதனைகளைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிடாது என்று கூறி எச்சரித்தார்: ''அமெரிக்கா ஒரு சண்டையை எதிர்நோக்கி இருக்கவில்லை ஆகவே, அதுபோன்ற ஒன்றுக்காக எங்களிடம் காரணத்தை உருவாக்கி கொடுக்காதீர்கள்'', என்றார். வட கொரியா அதன் கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்கும் ஓர் அணு ஆயுத தொலைதூர ஏவுகணைதிட்டங்களை நிறுத்துவதற்கு சீனா அழுத்தமளிக்க வேண்டுமென அப் பெண்மணி மீண்டும் சீனாவுக்கு அழைப்புவிடுத்தார்.

ட்ரம்ப் கடந்த வாரயிறுதி(20-25 April 2017) ட்வீட் சேதி ஒன்றில், பியொங்யாங்கிற்கு எதிராக பெய்ஜிங் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மீண்டும் வலியுறுத்தினார். ''வட கொரியாவிற்கு சீனா தான் பொருளாதார வாழ்வாதாரமாக விளங்குகிறது. ஆகவே, எதுவும் சுலபமானதில்லை என்றாலும், வட கொரிய பிரச்சினையைத் தீர்க்க அவர்கள் விரும்பினால் அவர்களால் முடியும்.'' - என்றார்.

ஞாயிறன்று(April 2017) ட்ரம்ப் உடனான ஒரு தொலைபேசி அழைப்பில் ஜனாதிபதி ஜி ஜின்பிங் எச்சரிக்கையோடு நடந்து கொள்ளுமாறு வலியுறுத்தினார். வட கொரியாவால் ஐ.நா. தீர்மானங்கள் எதுவும் மீறப்பட்டிருக்கின்றமையை ''விடாப் பிடியாக மறுத்த'' அதேவேளையில், ஜி, ''எல்லா தரப்பும் கட்டுப்பாட்டைக் கடைபிடிக்குமென நம்புவதாகவும், தீபகற்பத்தில் பதட்டங்களைத் தூண்டிவிடும் விடயங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்குமென நம்புவதாகவும்'' செய்திகள் குறிப்பிட்டன.

> ''எல்லா தரப்பும் அவற்றின் பொறுப்புகளைப் புரிந்து கொண்டு, எல்லா திசையிலிருந்தும் ஒருங்கிணைந்து வந்தால் மட்டுமே, தீபகற்பம் மீதான அணுசக்தி பிரச்சினையை எந்தளவிற்குச் சாத்தியமோ அந்தளவிற்கு விரைவாக தீர்க்க முடியும்'', என்று ஜி தெரிவித்தார் எனச் செய்திகள் குறிப்பிட்டன.

சீன அரசு அதன் வாசற்படியில் அமெரிக்கா ஒரு போரைத் தூண்டிவிடுமென ஆழமாக கவலை கொண்டுள்ளமையால், அமெரிக்கா மற்றும் வடகொரியா இரண்டும் விட்டுக்கொடுப்புகளுடன் பேச்சுகளைத் தொடங்குவதற்கு அழுத்தமளித்து கொண்டிருக்கிறது. ''எல்லாத் தரப்பும் அவற்றின் பொறுப்புகளைப் புரிந்து கொண்டு, எல்லா திசையிலிருந்தும் ஒருங்கிணைந்து வந்தால் மட்டுமே, தீபகற்பம் மீதான அணுசக்தி பிரச்சினையை எந்தளவிற்குச் சாத்தியமோ அந்தளவிற்கு விரைவாகத் தீர்க்க முடியும்'', என்று ஜி தெரிவித்தார் எனச் செய்திகள் குறிப்பிட்டன.

ட்ரம்ப் ஜப்பானிய பிரதமர் ஷின்ஜோ அபே உடனும் தொலை பேசியில் பேசினார், அபே செய்தியாளர்களிடம் கூறு கையில், ''வடகொரியாவுக்கு விடையிறுப்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றமையால், உயர் மட்ட கண்காணிப்பு மற்றும் உளவு தகவல் பரிமாற்றங்களுடன் நாங்கள் அமெரிக்காவுடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணுவோம்.'' என்றார். ''வடகொரியா'' கட்டுப்பாட்டைக் கடைபிடிக்க வேண்டுமென ''பலமாக கோருவதில்'' ட்ரம்ப் உடன் அவர் அரசு உடன்பட்டிருப்பதாகத் தெரிவித்த அபே, ''மீண்டும் மீண்டும் அபாயகரமாக மற்றும் ஆத்திரமூட்டும் வகையில்'' இருப்பதற்காக பியொங்யாங்கைக் கண்டித்தார்.

(கேள்வி தொடரும்...)



காலைக்கதிர்



# சிறிய வயதில்... பெரிய மனுஷி!

சின்னஞ்சிறு மொட்டாக இருக்கிற ஒரு பூ, மலர்வதற்கு இயற்கை ஒரு காலத்தை நிர்ணயித்திருக்கிறது. அதேபோல ஒரு பெண்ணும் பூப்பெய்த ஒரு குறிப்பிட்ட காலத்தை இயற்கை நிர்ணயித்திருக்கிறது. ஆனால் இயற்கைக்கு மாறாக சில பெண் பிள்ளைகள் மிக இளம் வயதிலேயே பருவமடைந்து விடுகிறார்கள். இருபதாண்டுகளுக்கு முன்பு வரை பெண்கள் பருவமடைவது 14 வயதுக்கு மேல்தான் நிகழ்ந்தது. ஆனால் இன்றைய விஞ்ஞான யுகத்தில் பெண்களின் வளர்ச்சி அபரிமிதமாக போய்விட்டது. இதன் காரணமாக பல பெண்கள் 11, 12 வயதுகளிலேயே பூப்பெய்தி விடுகிறார்கள். இதற்கு இன்றைய காலகட்ட நவ நாகரிக உணவுப்பழக்கம், சத்துக்கள் இல்லாத இரசாயன மயமாகிவிட்ட உணவும், நொறுக்குத் தீனிகளும், சில குறிப்பிட்ட ஹோர்மோன்களின் மாற்றங்களுமே காரணங்களாகும்.

மனித மூளையானது - விசித்திரமானது. ஹோர்மோன்களின் கட்டுப்பாட்டில் வளர்ச்சி மாற்றத்தை, பாலுறுப்புகளின் வளர்ச்சி நிலையை மூளை அடக்கியே வைத்திருக்கும். பத்து வயதுக்கு மேல் ஹோர்மோன்களின் திருவிளையாடலால்தான் பெண் குழந்தைகள் பருவத்தை எய்துவார்கள். ஆனால் சில பெண் குழந்தைகளுக்கு என்ன காரணம் என்று கண்டறிய முடியாமலே ஹோர்மோன்களின் ஆக்கிரமிப்பு அதிகமாகி பத்து வயதுக்குள் பூப்பெய்தி விடுகின்றனர். தைரோய்ட் குறைபாடுகளால்கூட இப்படி நிகழலாம்.

இப்படி மிக இளம் வயதில் பூப்பெய்தி விடுவதற்கு மக்யூன் ஆல்பிரைட்சின்ட்ரோம் என்கின்ற ஒருவகை பாதிப்புத்தான் காரணம் என்று அண்மைக் கால மருத்துவ அறிவியல் கண்டுபிடித்துள்ளது. இது நோயா? இல்லை முன் கூட்டியே ஹோர்மோன்கள் தங்கள் செயல்களை ஆரம்பித்துவிடுவதுதான் காரணமா? என தீவிரமாக மருத்துவ உலகம் ஆராய்ந்து வருகின்றது. மரபணுக்களின் பாதிப்பினால் கூட இப்படி நிகழலாம் என்கின்ற ஒரு கருத்தும் நிலவுகிறது.

கொஞ்சக் காலம் தள்ளி பருவமடைய வேண்டியவள் முன்கூட்டியே பருவம் எய்தி விட்டாள்... அவ்வளவுதான் என்று எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர, இதற்கு போய் ஏன் அலட்டிக் கொள்ள வேண்டும் என்று சிலர் கேட்கலாம்.

இப்படி இயற்கைக்கு மாறாக மிக இளம் வயதிலேயே வயதுக்கு வரும் பெண்களுக்கு எலும்பில் உள்ள கல்சியத்தில் குறைபாடு ஏற்படலாம். இதனால் இவர்கள் பல இயற்கை உபத்திரவங்களுக்கு உள்ளாக நேரிடும். இத்தகைய பெண்களுக்கு மாதவிடாய் கோளாறு, அதிக இரத்தப்போக்கு, பிரசவ சமயத்தில் குறைபாடுகள், போன்ற சிக்கல்கள் ஏற்படலாம். இவ்வாறு இளம் வயதில் பூப்பெய்திவிடுகிற பெண்கள் ஹோர்மோன் மருத்துவர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வது நல்லது. பால், முட்டை, மற்றும் காய்கறிகள், கனிகள், தானியங்கள் போன்றவற்றை இவர்கள் பருவ வயதில் நிறைய உட்கொள்ள வேண்டும். தாய் மிக இளம் வயதில் பூப்பெய்தி இருந்தால் அவர்கள் தங்கள் பெண்குழந்தைகளுக்கு பருவ வயதிற்கு முன்பாக மருத்துவ ஆலோசனை பெறுவது நல்லது.



*இருபதாண்டுகளுக்கு முன்பு வரை பெண்கள் பருவமடைவது 14 வயதுக்கு மேல்தான் நிகழ்ந்தது. ஆனால் இன்றைய விஞ்ஞான யுகத்தில் பெண்களின் வளர்ச்சி அபரிமிதமாக போய்விட்டது. இதன் காரணமாக பல பெண்கள் 11, 12 வயதுகளிலேயே பூப்பெய்தி விடுகிறார்கள்.*

## இல்லறம் சிறக்க...

★பெண்கள், நித்திரை விட்டு எழுந்து வீட்டின் வாசல் கதவைத் திறக்கும்போது அஷ்டலட்சுமிகளின் திருநாமத்தை உச்சரித்தபடி திறக்க வேண்டும். அவ்வாறு செய்வதால் அஷ்டலட்சுமிகளும் வீட்டுக்குள் நுழைவார்கள் என்பது நம்பிக்கை.

★அதிகாலை 4 மணியில் இருந்து 5.30 மணி வரையிலான நேரத்தை 'பிரம்ம முகூர்த்தம்' என்பார்கள். இந்த நேரத்தில் எழுந்து காரியங்களைத் தொடங்குவது மிக நல்லது.

★வீட்டுக்கு வரும் சுமங்கலிகளுக்கு எப்பொழுது குங்குமம் கொடுத்தாலும், முதலில் நீங்கள் நெற்றியில் இட்டுக் கொண்டு பின்னர் வந்தவர்களுக்கு கொடுக்க வேண்டும்.





உடல் நல அபாயங்கள்!!!

# மணிக்கணக்கில் உட்கார்ந்தே வேலை செய்பவரா நீங்கள்?

பல மணித்தியாலங்கள் உட்கார்ந்து வேலை பார்த்தால் தான் காசு நிறைய கிடைக்கிறது. காசு கிடைக்கிறது என்றாலும் அதைவிட அதிகளவில் வலியும் கிடைக்கிறது. இப்போது உட்கார்ந்தே வேலை செய்வது எவ்வளவு தவறு என்று பத்து ஆண்டுகள் கழித்து தெரியவரும்.

### இதய பாதிப்புகள்

உடல் உழைப்பின்றி நாம் வேலை செய்வதால் பெரிதும் பாதிக்கப்படுவது நமது இதயம் தான். ஒரே இடத்தில் கதிரையை விட்டு நகராமல் நாம் வேலை செய்து கொண்டிருப்பதால், உடலில் சேரும் கொழுப்பு கரைவதில்லை. இதனால் இதயத்தைச் சுற்றி உருவாகும் கொழுப்பு அமிலங்கள் இதய நலனை சீர்குலையச் செய்கிறது.

### கணையத்தில் கோளாறு

நீண்ட நேரம் உட்கார்ந்தே வேலை செய்யும் முறையானது, உடலில் ஹோர்மோன் சமநிலையை கெடுக்கிறது. இதனால் நீரிழிவு நோய் ஏற்படும் அபாயம் இருக்கிறது.

### பெருங்குடல் புற்றுநோய்

உட்கார்ந்தே வேலை செய்வதால் ஏற்படும் உடல்நல அபாயத்தில், பெருங்குடல் புற்றுநோயும் ஒன்று. இதுமட்டுமின்றி, நீண்ட நேரம் உட்கார்ந்தே வேலை செய்வது மார்பகப் புற்றுநோய் மற்றும் கருப்பை புற்றுநோய் ஏற்படவும் காரணியாக இருக்கிறது.

### இடுப்பு வலி

ஓர்நாளில் நாற்காலியில் 6-7 மணித்தியாலம் உட்கார்ந்தே வேலை செய்வது உங்கள் இடுப்பு எலும்பை வலுவிழக்கச் செய்கிறது. இது அபாயகரமான விளைவுகளை ஏற்படுத்தலாம்.

### கால்களில் பிரச்சினை

கால்களை தொங்கவிட்டபடி மணிக்கணக்கில் வேலை செய்வது உங்கள் கால் பகுதிகளுக்கு இரத்த ஓட்டம் சீராக செல்லாமல் தடை செய்கிறது. இதனால், கால்களில் பிடிப்பு, வலி, அசௌகரியமாக உணர்தல் போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம்.

### கழுத்து வலி


நீங்களே இதை உணர்ந்திருக்கலாம், ஒரே இடத்தில் கதிரையை விட்டு நகராமல் வேலை செய்துக் கொண்டிருக்கும் போது திடீரென கழுத்தைத் திருப்பக் கூட முடியாத அளவு கடினமான வலி ஏற்படும்.

### தண்டுவட வலி

பெரும்பாலும் மணிக்கணக்கில் உட்கார்ந்தே வேலை செய்பவர்களுக்கு ஏற்படும் முதல் பாதிப்பு இந்தத் தண்டுவட வலி தான். இதிலிருந்து மீண்டுவர நீங்கள் அறுவை சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படலாம்.

### தோள்பட்டை வலி

கணினியில் வேலை செய்யும் நபர்களுக்கு, கையை அசைக்காமல் ஒரே நிலையில், தட்டச்சுப் பலகையுடன் வேலை செய்யும் போது இது போன்ற தோள் பட்டை வலி அதிகமாக ஏற்படும் வாய்ப்புகள் இருக்கின்றன.



# கார்ப் பந்தய தடத்துடன் முதலாவது உல்லாசக் கப்பல்!



உலகிலேயே முதல் முறையாக உல்லாசக் கப்பல் ஒன்றில் கார் பந்தயத் தடம் அமைக்கப் பட்டுள்ளது.

அமெரிக்காவின் மியாமி நகரைச் சேர்ந்த 'நோர்வீஜியன் க்ரூஸ் லைன்ஸ்' என்ற சொகுசுக் கப்பல் இயக்கும் நிறுவனத்தினரால் இந்த ஆடம்பரக் கப்பல் தயாரிக்கப்பட்டுள்ளது.

சீன சந்தைக்காக கட்டமைக்கப்பட்டுள்ள இந்தக் கப்பலுக்கு 'நோர்வீ ஜியன் ஜாய்' என்று பெயரிட்டுள்ளனர். இந்தக்கப்பலின் மேல்தளங்களில் இரண்டு அடுக்கு பந்தயத் தடம் அமைக்கப் பட்டுள்ளது.

இந்தப் பந்தய தடம் உலகின் தலைசிறந்த பெராரி நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இரண்டு அடுக்கு பந்தயத் தடத்தில் 10 எலெக்ட்ரிக் கோ-கார்ட் கார்களை ஒரே நேரத்தில் பயன்படுத்த முடியும் என்பது விஷேட அம்சமாகும்.

ஜேர்மனியில் உள்ள உலகப் புகழ் பெற்ற 'மேயர் வெர்ப்ட்' என்ற கப்பல் கட்டும் நிறுவனத்தினரால் இந்தக் கப்பல் கட்டுமானம் செய்யப்பட்டுள்ளது. நோர்வீஜியன் ஜாய் கப்பலில் மொத்தம் 3 ஆயிரத்து 850 பயணிகள் பயணிக்கலாம். ஜேர்மனியில் இருந்து ஷாங்காய் நோக்கி எதிர் வரும் ஜூன் மாதம் 27 ஆம் திகதி இந்தக் கப்பல் தனது முதல் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளது.

# பிரிட்டனில் நிலக்கீழ் மர்ம மாளிகை

*சுமார் 4 லட்சத்து 60 ஆயிரம் சிப்பிகள் மூலமாக இந்த இரகசிய சுரங்கம் அழகிய வேலைப் பாடுகளுடன் கட்டப்பட்டுள்ளது.*

பண்டைய காலத்தில் அமைக்கப்பட்ட ஒரு சில மாளிகைகள் இன்று வரை மர்மங்களுக்கு பெயர்பெற்றுத்திகழ்கின்றன.

அவ்வகையில் பிரிட்டனில், கிரோட்டே பகுதியில் உள்ள நிலத்தின் கீழ் உள்ள மாளிகை ஒன்று இன்றும் மர்மமாகப் பேசப்படுகின்றது.

இந்த மாளிகை ஆச்சரியம் மிக்க வகையில் முற்று முழுதாக சிப்பிகள், மற்றும் அரிய வகை சங்குகள் போன்றவற்றால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

1835 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட இந்த மர்ம மாளிகையின் உண்மையான வரலாறு மற்றும் கட்டப்பட்டதற்கான நோக்கம் போன்றவை கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது.

நிலத்தின் கீழ் ஓர் சுரங்க வடிவில் அமைக்கப்பட்டுள்ள குறித்த இடம் யாரால், ஏன் அமைக்கப்பட்டது?

வெளி உலகத்துக்குத் தெரியாத வகையில் இத்தனை கலைநயம் மிக்கதாக இதனை அமைத்தவர்களின் நோக்கம் என்ன? இதற்கு (உண்மையான) பதில்கள் கண்டறியப்படவில்லை என்று கூறப்படுகின்றது.

சுமார் 4 லட்சத்து 60 ஆயிரம் சிப்பிகள் மூலமாக இந்த இரகசிய சுரங்கம் அழகிய வேலைப் பாடுகளுடன் கட்டப்பட்டுள்ளது.

வித்தியாசமான கலைப் பார்வை, அமைப்பு முறை என்பவற்றோடு ஏன்? இப்படி யாருக்காக அமைக்கப்பட்டது, அத் தனை சிப்பிகளைச் சேகரித்து இதனை அமைத்ததன் நோக்கம் என்ன?

இந்தக் கேள்விகளுக்கு விடைகள் கூறப்படாத காரணத்தால் இது மர்மத் தளமாகக் காணப்படுகின்றது. என்றாலும் தற்போது இது சிறந்த தொரு சுற்றுலாத்தளமாக மாற்றம் பெற்றுள்ளது.

பண்டைய காலத்தில் தொழில்நுட்ப அறிவு இல்லாதபோது இத்தனை நேர்த்தியாக கலைஅம்சங்களுடன் அமைக்கப்பட்டுள்ள இந்த மாளிகை உண்மையில் அதிசய மாளிகையே.







# பலாக்கொட்டையிலும் சொக்லேட் தயாரிக்கலாம்


கொக்கோவில் இருந்து சொக்லேட் தயாரிக்கப்படுவது தான் வழமை. ஆனால், பலாக்கொட்டையில் இருந்தும் சொக்லேட் தயாரிக்கலாம் என்று ஆய்வில் கண்டறியப் பட்டுள்ளது.

சர்வதேச அளவில் சொக்லேட் தயாரிக்க 45 லட்சம் தொன் கொக்கோ தேவைப்படு கிறது. ஆனால், அந்தளவு கொக்கோ பயிரிடப்படுவதில்லை. வெறும் 37 லட்சம் தொன் கொக்கோ மட்டுமே பயிரிடப் படுகிறது. எதிர் காலத்தில் சொக்லேட்டின் தேவை அதிகரிக்கக்கூடிய நிலையில், கொக்கோவுக்கான தேவையும் அதிகரிக்கும்.

இந்த நெருக்கடியைக் கருத்திற்கொண்ட பிறேஸிலைச் சேர்ந்த பாவ்லோ பல்கலைக் கழக நிபுணர்கள், கொக்கோவின் நறுமணத் துடனும், சுவையுடனும் மாற்று வழியில் சொக்லேட் தயாரிக்க முடியுமா என ஆய்வு செய்யத் தொடங்கினர்.

பலாக்கொட்டையில் இருந்தும் சொக்லேட் தயாரிக்க முடியும் என்று தற்போது அவர்கள் கண்டறிந்துள்ளனர். பலாக்கொட்டையில் சொக்லேட்டின் நறுமணம் மற்றும் சுவையுடன் கூடிய ஒரு பொருள் இருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர்.

அதிலிருந்து சொக்லேட் தயாரிக்கப் பயன்படும் மூலப் பொருளை உருவாக்க முடியும் எனவும் இதன் மூலம் கொக்கோ பற்றாக் குறையால் சொக்லேட் தயாரிப்பில் ஏற்படும் பாதிப்பைக் குறைக்க முடியும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.



# ஒரு நாளில் 40 சிகரெட்டுகளை புகைத்த குழந்தை

இந்தோனேஷியாவின் சுமத்ராத் தீவைச் சேர்ந்த ஆர்டி ரிசால் என்ற 2 வயதுக் குழந்தை ஒரு நாளைக்கு 40 சிகெரட்ப் புகைப்பதாக 2010 ஆம் ஆண்டு புகைப்படத் துடன் செய்தி வெளியானது.

இதனையடுத்து அதிர்ச்சி அடைந்த இந்தோனேஷிய அரசு, குழந்தைகள் புகைப் பிடிக்கும் பழக்கத்துக்கு எதிராக விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

குழந்தை ஆர்டி ரிசாலுக்கு புகைப்பிடிக்கும் பழக்கத்தை நிறுத்த, சிறப்பு மறுவாழ்வு சிகிச்சை அளிக்கத் தொடங்கியது.

தலைநகர் ஜகர்த்தாவுக்கு அனுப்பப்பட்ட சிறுவனுக்கு பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இதனிடையே புகைப்பிடிக்கும் பழக்கத்தில் இருந்து 2013 ஆண்டு விடுதலையான ஆர்டி, பின்னர் உணவுக்கு அடிமையானார்.

அதிகப்படியான உணவைச் சாப்பிட்டதால் ஐந்து வயதில் ஒரு குழந்தையின் பரிந்துரைக்கப்பட்ட எடையை விட 6 கிலோவுக்கும் அதிகமாக 24 கிலோவாக காணப்பட்டுள்ளார்.

எனினும் சிறப்பு மருத்துவர்களின் ஆலோசனையுடன் தற்போது ரிசாலுக்கு உணவு கட்டுப்பாடு மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

இதே வேளை புகைப்பழக்கம் மற்றும் முறையற்ற உணவுப்பழக்கம் ஆகியவற்றில் இருந்து விலகி, ஆரம்பப் பாடசாலையில் கல்வி கற்று வரும் ரிசால், பாடசாலையில் ஏனைய மாணவர்களை விட சிறப்பாகக் கல்வி கற்பதாகவும் ஏனைய மாணவர்களுக்கு முன்மாதிரியாக விளங்குளவதாகவும் பாடசாலை ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

# தொழில்நுட்பக்கதிர்

## தலைக்கவசத்தில் வயர்லெஸ் பிரேக் லைட் தொழில்நுட்பம்!




வாகனங்களில் பயணிக்கும்போது சமிக்ஞை விளக்குகள் தேவைக்கு ஏற்றவாறு கண்டிப்பாக ஒளிர வேண்டும்.

இதனால் விபத்துக்களை அதிக அளவில் தவிர்க்க முடியும்.

இதேபோன்றே பிரேக் லைட் ஒளிரும்போதே முன்னால் செல்லும் வாகனம் நிறுத்தப்படவுள்ளமை அல்லது வேகம் குறைக்கப்படவுள்ளமை தொடர்பான தகவல் பின்தொடர்ந்து பயணிப்பவரைச் சென்றடையும்.

அவ்வாறு சென்றடையும் சந்தர்ப்பத்தில் பின்தொடர்பவர் தனது வாகனத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்தி விபத்தைத் தவிர்க்க முடியும்.

இச் செயன்முறையை மேம்படுத்தும் நோக்கில் F3HA3 எனும் நிறுவனம் புது முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

இதன்படி தலைக் கவசத்தில் வயர்லெஸ் பிரேக் லைட் தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளது.

இத் தொழில்நுட்பம் வாகனத்தின் பிரேக்கைப் பயன்படுத்தும்போது தலைக்கவசத்திலுள்ள மின் விளக்கிற்கும் சமிக்ஞையை அனுப்புகின்றது. இதனால் தலைக்கவசத்தில் உள்ள மின்விளக்கு ஒளிர ஆரம்பிக்கின்றது.

இதனைக் கொண்டு பின்தொடர்பவரை மேலும் எச்சரிக்கை செய்து விபத்துக்களை தவிர்க்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## facebook பேஸ்புக் மெசஞ்சர் அறிமுகம் செய்யும் புதிய வசதி



பிரபல சமூக வலைத்தளமான பேஸ்புக் உலகளவில் ஏறத்தாழ 1.8 பில்லியன் பேர் பயன்படுத்தி வருகின்றனர்.

இத் தளத்தில் பயனர்களுக்காக ஒன்லைன் 'கேம்'களும் வழங்கப்பட்டு அவை வெகுவாக பிரபல்யமடைந்தமை தெரிந்ததே.

இவ்வாறான நிலையில் 1.2 பில்லியன் வரையானவர்கள் பயன்படுத்தி வரும் பேஸ்புக் மெசஞ்சர் அப்பிளிக்கேஷனில் இன்ஸ்டன்ட் கேமை அறிமுகம் செய்யவுள்ளதாக பேஸ்புக் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதேவேளை இவ் வசதி உலகளவில் ஒரே நேரத்தில் அறிமுகம் செய்யப்படவுள்ளமை விசேட அம்சமாகும்.

இவ் வசதியின் ஊடாக பேஸ்புக் மெசஞ்சர் பாவனையாளர்களின் எண்ணிக்கை மேலும் பன்மடங்கு அதிகரிக்க வாய்ப்புக்கள் உள்ளன.

## விரைவில் அறிமுகமாகின்றது HTC U 11 ஸ்மார்ட் கைபேசி!



முன்னணி ஸ்மார்ட் கைபேசி வடிவமைப்பு நிறுவனங்களுள் ஒன்றாகத் திகழும் HTC விரைவில் தனது புதிய கைபேசி ஒன்றை அறிமுகம் செய்கின்றது.

HTC U 11 எனும் இந்தக் கைபேசி 5.5 அங்குல அளவுடைய QHD தொடுதிரையைக் கொண்டுள்ளது.

இதனுடன் Qualcomm Snapdragon 835 Processor, பிரதான நினைவகமாக 3GB RAM, 64GB அல்லது 128GB சேமிப்பு நினைவகம் என்பவற்றைக் கொண்டுள்ளது.

தவிர 16 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 12 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா, நீடித்து உழைக்கக்கூடிய 4000 mAh மின்கலம் என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## குழந்தையை தாலாட்டி தூங்க வைக்கும் நவீன தொட்டில் உருவாக்கம்



பிரபல கார் தயாரிப்பு நிறுவனமான ஃபோர்ட் மோட்டார், குழந்தையை தாலாட்டி தூங்கவைக்க நவீன படுக்கை ஒன்றை உருவாக்கியுள்ளது. ஐரோப்பிய நாடுகளில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள இந்த நவீன படுக்கை விரைவில் உலக அளவில் சந்தைக்கு வருகிறது.

குழந்தைகள் வீட்டில் தூங்குவதை விட, கார் பயணங்களில் இயல்பாகவே உறங்கிவிடும். இந்தப் பழக்கம் பெரும்பாலான குழந்தைகளிடம் உண்டு. இந்த வழக்கத்தை வைத்து குழந்தைகளுக்கென நவீன படுக்கை ஒன்றை பிரபல கார் தயாரிப்பு நிறுவனமான ஃபோர்ட் உருவாக்கியுள்ளது.

தெருவிளக்குகள் போன்ற உணர்வை ஏற்படுத்தும் எல்.இ.டி விளக்குகள், காரின் ஒலியை மிமிக் செய்யக்கூடிய அமைப்புகள் இந்த நவீனத் தொட்டிலில் உள்ளன. குழந்தைகளுக்கான படுக்கையாக மட்டுமில்லாமல், இதன்மூலம் குழந்தை எதுபோன்ற பயணத்தில் உறக்கத்தை எட்டும் என்பதை பெற்றோர்கள் அறிந்துகொள்ளும் வகையில் செயலி ஒன்றும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

கவனிக்கத்தக்க பல சிறப்புகளைப் பெற்றுள்ள மேக்ஸ் மோட்டார் ட்ரீம்ஸ் கிரிப் தற்போது சோதனைக்குட் படுத்தப்பட்டு வருகிறது. எதிர்காலத்தில் இந்த நவீனத் தொட்டிலுக்கு பெரியளவிலான வரவேற்பு கிடைக்கும் என்பது ஃபோர்ட் நிறுவனத்தின் நம்பிக்கை.

## கூகுள் மேப்பில் புதிய வசதி அறிமுகம்!



பிரபல நிறுவனமான கூகுள் தனது பல்வேறு தயாரிப்புகளில் புதிய புதிய மாற்றங்களை ஏற்படுத்தி அதனை சந்தையில் அறிமுகப்படுத்தி வருகிறது.

சமீபத்தில் குறைந்த இணைய வேகத்தில் வீடியோக்கள் பார்க்கும் வண்ணம் தனது யூடியூப் பயன்பாட்டில் சில மாற்றங்களை செய்து 'யூடியூப்-கோ' என்னும் புதிய தொழில்நுட்பத்தை சந்தையில் அறிமுகப்படுத்தியது.

இது மட்டுமல்லாது குறைவான இணைய வேகத்தில் இயங்கும் வண்ணம் கூகுள் மேப்-பில் சில மாற்றங்களை செய்துள்ளது. பயனாளர் தனது விருப்பத்திற்கு ஏற்ப திரையின் கீழ் உள்ள டூல் பாரில் ஒப்ஷன்களை சேர்த்துக் கொள்ள முடியும்.


மேலும், ஒவ்வொரு திரையினையும் மொபைலில் சேமித்து வைத்து கொள்ளும் வசதியும் தரப்பட்டுள்ளதால் இணைய வசதி இல்லாத போதும் சேமித்து வைக்கப்பட்டுள்ள மேப்பைப் பயனாளர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

# இலங்கையில் பாரதி

25

● முருகபூபதி – ஆஸ்திரேலியா

''வறுமை, கவிஞனின் தனி உடைமை. கவிஞனுக்கு இந்த மண்ணுலகில் இன்பம் அளிப்பது கவிதை. ஆனால், வயிற்றுக்குஉணவுதேடிவாழும் வகையை அவன் மனைவி தான் கண்டுபிடிக்க வேண்டி வருகிறது. காதல் ராணியாக மனைவியைப் போற்றும் கவிஞன், அவளுக்குச் சாதமும் போடவேண்டும் என்ற நினைவேயின்றிக் காலம் கழிப்பானேயானால், என்ன செய்ய முடியும்...?



நீலாவணன்

கவிஞன் விசித்திரமான தன்மை நிறைந்தவன். அவனுக்கு எதுவும் பெரிதில்லை. ஆனால், கவலை நிறைந்த வாழ்நாளைக் கழிக்க வேண்டும் என்று எந்தப் பெண்தான் நினைக்க முடியும்...? சிறு வயதில் ஆசாபாசங்களும் அபிலாஷைகளும் ஒவ்வொரு பெண்ணின் மனதிலும் நிறைந்திருப்பது இயற்கைதானே...? சுகமாக வாழுவதற்கு சொர்க்கலோகம் சென்றால் தான் முடியும் என்ற நிலை கவிஞன் மனைவிக்கு ஏற்பட்டு விடுகிறது. அந்த நாளிலிருந்த சத்திமுத்தப் புலவரின் மனைவியிடமிருந்து இன்று என்வரை சுகவாழ்வு ஒரே விதமாகத்தான் அமைந்திருக்கிறது. ஏகாந்தத்தில் அமர்ந்துவிட்டால் முனிவரும்கூட அவரிடம் பிச்சைதான் வாங்கவேண்டும். ஆனால், மனைத் தலைவியாகிய நான் அவ்வாறு நிஷ்டையிலிருக்க முடியுமா...?'' இவ்வாறு மனம் திறந்து பேசியவர் யார் தெரியுமா...?

1897 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தனது ஏழு வயதில், 14 வயது நிரம்பிய பாரதிக்கு வாழ்க்கைப்பட்டவரான செல்லம்மாள்தான் அவர். 1951 ஆம் ஆண்டு திருச்சி வானொலியில் ''**என்கணவர்**'' என்ற தலைப்பில் அவர் இவ்வாறு உரையாற்றினார்.

செல்லம்மாள், தனது கணவர் பாரதியுடன் எத்தகைய வாழ்க்கையைத் தொடர்ந்தார் என்பதை பாரதியின் வரலாற்றின் பக்கங்களிலிருந்தும் செல்லம்மாள் எழுதியிருக்கும், பேசியிருக்கும் குறிப் புகளிலிருந்தும் தெரிந்து கொள்கின்றோம்.

மேலும் தெரிந்துகொள்ள வேண்டுமானால் ஞான ராஜசேகரன் இயக்கிய **பாரதி** படத்தைப்பார்க்கலாம்.

செல்லம்மாள் திருச்சி வானொலியில் மேலும் தெரிவித்திருப்பதைப்பாருங்கள்.

*''கவிஞர்களில் பல்தரப்பட்டவர்கள் இருக்கிறார்கள். கடவுளைப் பக்தி செய்யும் கவிஞன், காவியம் எழுதும் கவிஞன், இவர்களைப் புற உலகத் தொல்லைகள் சூழ இடமில்லை. எனது கணவரோ கற்பனைக் கவியாக மட்டுமல்லாமல் தேசியக் கவியாகவும் விளங்கியவர். அதனால் நான் மிகவும் கஷ்டப்பட்டேன். கவிதை வெள்ளத்தை அணை போட்டுத் தடுத்தது அடக்கு முறை. குடும்பமே தொல்லைக்குள்ளாகியது. ஆனால், நுங்கும் நுரையுமாகப் பொங்கிவரும் புது வெள்ளம் போல அடக்குமுறையை உடைத்துக் கொண்டு பாய்ந்து செல்லும் அவர் கவிதை.*

*''காலையில் எழுந்ததும் கண்விழித்து, மேலைச்சுடர் வானை நோக்கி வீற்றிருப்பார். ஸ்நானம் ஒவ்வொருநாள் ஒவ்வொரு விதத்தில் அமையும். சூரிய ஸ்நானம்தான் அவருக்குப் பிடித்தமானது. வெளியிலே நின்று நிமிர்ந்து சூரியனைப் பார்ப்பதுதான் வெய்யிற் குளியல். சூரியகிரணம் கண்களிலேயுள்ள மாசுகளை நீக்கும் என்பது அவர் அபிப்பிராயம். காலைக் காப்பி, தோசை பிரதானமாயிருக்க வேண்டும் அவருக்கு. தயிர், நெய், புது ஊறுகாய் இவைகளைத் தோசையின் மேல் பெய்து தின்பார்.*

*''அவருக்குப் பிரியமான பொருளைச் சேகரித்துக் கொடுத்தால், அவரது நண்பர்களான காக்கையும் குருவியும் அதில் முக்கால் பாகத்தைப் புசித்து விடுவார்கள். எதை வேண்டுமானாலும் பொறுக்க முடியும். ஆனால், கொடுத்த உணவைத் தாம் உண்ணாமல் பறவைகளுக்குப் போட்டுவிட்டு நிற்கும் அவருடைய தார்மிக உணர்ச்சியை மட்டும் என்னால் சகிக்கவே முடிந்ததில்லை. சிஷ்யருக்குக் குறைவு இராது. செய்திகளுக்கும் குறைச்சல் இல்லை. கானாமுதமோ காதின் வழியே புகுந்து உடல் எங்கும் நிறைந்துவிடும். களிப்பை மட்டும் பூரணமாக அனுபவிக்க முடியாமல் உள்ளிருந்து ஒன்று வாட்டும். அதுதான் கவலை!*

இச்சகம் பேசி வாழும் உலகத்தில் எப்பொழுதும் மெய்யே பேச வேண்டும் என்பது அவரது கட்டளை. எக்காரணத்தைக் கொண்டும் பொய் பேசக் கூடாது. இது எத்தனை சிரமமான காரியம் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம்தான்.

புதுவை எனக்குச் சிறைச்சாலை ஆகியது. சிறைச்சாலை என்ன செய்யும்...? ஞானிகளை அது ஒன்றும் செய்ய முடியாதுதான். எதையும் ஏற்றுக்கொள்ளும் மனத் திண்மை அவர்களுக்கு உண்டு. ஆனால் என்னைப்போன்ற சாதாரணப் பெண்ணுக்கு, இல்லறத்தை நல்லறமாக்க வேண்டும் என்ற ஒரே விஷயத்தை லட்சியமாகக் கொண்ட ஒருத்திக்குச் சிறைச்சாலை நவநவமான துன்பங்களை அள்ளித்தான் கொடுத்தது. புதுவையில்தான் புதுமைகள் அதிகம் தோன்றின. புது முயற்சிகள், புதிய நாகரிகம், புதுமைப் பெண் எழுச்சி, புதுக்கவிதை இவை தோன்றின. இத்தனை புதுமைகளும் எழுவதற்கு நான்தான் ஆராய்ச்சிப் பொருளாக அமைந்தேன். பெண்களுக்குச் சம அந்தஸ்து வழங்க வேண்டுமா? வேண்டாமா? என்று வெகு காலம் ஆராய்ந்த பின்னரே, பெண் விடுதலை அவசியம் என்ற முடிவு கண்டு, நடைமுறையில் நடத்துவதற்குத் துடிதுடித்தார் என் கணவர். இந்த முடிவை அவர் காண்பதற்குள் நான் பட்டபாடு சொல்லுந்தரமன்று.

புதுவையில் அரசியலில்



சில்லையூர் செல்வராசன்

கலந்துகொள்ள ஒரு வசதியும் இல்லாதிருந்த போதிலும், தமிழ் இலக்கியத் தொண்டு செய்தமையால் ஒருவாறு மன அமைதி பெற்றிருந்தார். நமது பொக்கிஷங்கள் என்று கருதத் தகும்படியான அவரது கவிதைகள் எல்லாம் அங்குதான் தோன்றின. மனிதரை அமரராக்க வேண்டும் என்று தவித்த என் கணவர், எத்தனை இடையூறுகளும் எதிர்ப்புகளும் ஏற்பட்ட போதிலும், அவற்றையெல்லாம் மோதி மிதித்துவிட்டுத் தம் லட்சியத்தில் முன்னேறும் துணிவு கொண்டு செயலாற்றினார்.

மகாகவி நாட்டுக்காக, அதன் சுதந்திரத்துக்காக வாழ்ந்தார். தமிழ் பண்பாட்டில் சிறந்த அவர் ஈகை, அன்பு, சகிப்புத்தன்மை முதலான பண்புகளைக் கடைப்பிடித்து வாழ்ந்தமை ஓர் அதிசயமன்று. தூங்கிக் கிடந்த தமிழரை விழிப்புறுத்தியமையும் அதிசயமன்று. ஆனால், இன்று அவரது பூத உடல் மறைந்த பின்பும் தமிழ் பேசும் ஒவ்வோர் உயிரினிடத்தும் அவர் கலந்து நிற்கின்றமைதான் அதிசயம் என்று எனக்குத் தோன்றுகிறது. ''*விண்டுரைக்க மாட்டாத விந்தையடா!*'' என்று அவரது கவிதை மொழியில்தான் இந்த மகிழ்ச்சியைத் தெரிவிக்க வேண்டியிருக்கிறது.

(ஆதாரம் ''என்பாரதி'' உரை - செல்லம்மாள் பாரதி)

பாரதியின் உள்ளும் புறமும் எவ்வாறு இருந்தன என்பதை உடனிருந்து உள்வாங்கியிருக்கும் செல்லம்மாளின் வாக்குமூலம் இவ்வாறு பதிவாகியிருக்கும் அதேசமயம், பாரதியை பலகோணங்களில் பார்க்கும், ஆராயும் பாரதிக்குப்பின்னர் வந்தவர்கள் பாரதியால் கருத்துமோதல்களிலும் ஈடுபட்டு வந்திருக்கின்றனர். பாரதியே சொல்லியிருக்கின்றமைபோன்று ''**விண்டுரைக்க மாட்டாத விந்தை**'' தான் அவர் எம்மவரிடத்தில் ஏற்படுத்தியிருக்கும் பெரும் தாக்கம்.

கடந்த அங்கங்களில் தமிழகப்பேச்சாளர்களின் இலங்கை விஜயம் குறித்து எழுதியிருந்தோம். அவர்களின் கருத்துக்களால் இலங்கையில் உருவான எதிர்வினைகளையும் இந்தத் தொடரில் பதிவுசெய்ய வேண்டியது அவசியம் எனக் கருதுகின்றோம்.

கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற எழுத்தாளர்கள் சந்திப்பில் ரகுநாதன் நிகழ்த்திய உரையில் அவர் குறிப்பிட்ட கருத்தால் வெகுண்டவர் இலங்கையில் கவிதை மற்றும் வானொலி, பத்திரிகை ஊடகத்துறையில் பிரபல்யம் பெற்றிருந்த **சில்லையூர் செல்வராசன்**. இவர் கலை, இலக்கியத்துறையில் பன்முக ஆற்றல் கொண்டிருந்தமையால் **பல்கலைவேந்தன்** என்ற பட்டத்தையும் பெற்றவர்.

**தான்தோன்றிக்கவிராயர்** என்ற புனைபெயரிலும் எழுதியிருப்பவர்.

பம்பலப்பிட்டி சரஸ்வதி



பாரதியும் செல்லம்மாவும்

மண்டபத்தில் ரகுநாதன் பேசுகையில், இலங்கையில் பாரதியின் கவிதைகளின் தாக்கத்தை இலங்கைக்கவிஞர்களில் தான் காண்பதாகவும், அத்துடன் தாம் இருபத்தியைந்து வருடங்களின் முன்னர் எழுதிய கவிதைகளின் தாக்கம் இலங்கையிலும் இருப்பதாகவும் சொன்னார்.

அதற்கு எதிர்வினையாற்றும் சந்தர்ப்பம் சில்லையூர் செல்வராசனுக்கு அந்த நிகழ்வின் பின்னர், கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் நடைபெற்ற இரண்டு நூல்களின் வெளியீட்டு விழாவில் கிடைத்தது.

இதனை ஒழுங்குசெய்திருந்தவர்கள், சில்லையூர் செல்வராசன், இந்நிகழ்வில் எதிர்வினையாற்றுவார் என்பதை முற்கூட்டியே தெரிந்து கொண்டு மிகவும் சாதுரியமாகவும் புத்திசாலித்தனமாகவும் அன்றைய நிகழ்விற்கு ரகுநாதனை அழைக்காமல் இலங்கை வந்திருந்த மற்றும் ஒரு பேச்சாளரான பேராசிரியர் இராமகிருஷ்ணனை அழைத்துப் பேச வைத்தனர்.

கவிஞர்கள் நீலாவணனின் வேளாண்மை, கல்வயல் குமாரசாமியின் சிரமம் குறைகிறது ஆகிய நூல்களின் வெளியீட்டில் பேசிய சில்லையூர் செல்வராசனுக்கு தான்தோன்றிக்கவிராயர் என்ற புனைபெயரும் இருக்கிறது என்பதை முன்னர் சொல்லியிருக்கின்றோம்.

ரகுநாதன் அதற்கு முன்பே, தமிழகத்தில் தமக்கு திருச்



மகாகவி பாரதியார் கவிதைகள்

**சிற்றம்பலக் கவிராயர்** என்ற புனைபெயரைச் சூட்டிக் கொண்டு கவிதைக்ளை வரவாக்கியிருப்பவர்.

ரகுநாதன் சொல்லியிருக்கின்றமை போன்று, இலங்கையில் பாரதியின் கவிதைகளின் தாக்கம் இருப்பதாகச் சொல்ல முடியாது என்பதுதான் சில் லையூர் செல்வராசனின் வாதமாக அன்றைய நிகழ்வில் அமைந்தது. அவரது உரை இவ்வாறு அமைந்திருந்தது.

கடந்த வாரம் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற பாரதி நூற்றாண்டு கருத்தரங்கில் நானும் கலந்து கொண்டேன். நான் முதலிலேயே பேசிவிட்டேன். எனக்குப்பிறகு பேசிய ரகுநாதன், ''இலங்கையில் இருக்கும் கவிஞர்களுக்கு பாரதியின் தாக்கமும் தனது கவிதைகளின் பாதிப்பும் இருக்கின்றன எனச் சொன்னார். அதனை ஏற்கமுடியாது. ரகுநாதன் திருச்சிற்றம்பலக் கவிராயர் என்ற புனைபெயரில் எழுதிய கவிதைகளில் சிலவற்றைத்தான் இலங்கைக் கவிஞர்கள் படித்திருப்பார்கள். எமது கவிஞரான அமரர் நீலாவணன், மிகவும் எளிய தமிழில் அதாவது வீட்டுத் தமிழில், ''*வாடா தம்பி, குடிடா சோடா, பத்துடா பீடி*'' என்ற ரீதியில் மரபு இலக்கணத்தில் நின்றுகொண்டு கவிதை எழுதியிருக்கிறார். இத்தகைய எளிய தமிழில் தமிழகத்தில் எவரும் எழுதியிருப்பதாகத்தெரியவில்லை. தமிழகத்தவர்கள், ''*இலங்கை எழுத்தாளர்களுக்கு எழுதத்தெரியாது, இலக்கியம் தெரியாது*'' என்று சொன்ன காலமும் முன்பிருந்தது. அங்கிருந்து வந்த கங்கை இதழின் ஆசிரியர் பகீரதன், இலங்கை எழுத்தாளர்கள்.

இலக்கியத்தில் பத்தாண்டுகள் பின்னிற்பதாகச் சொன்னார்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

### ஆண்டவர் கல்லாலான இதயத்தை சதையாலானதாக மாற்றுபவர்

சட்டத்திற்குப் புறம்பாக, இருப்பவர்களைக் கண்டனம் செய்யும் கடின இதயங்களை மென்மையாக ஆக்குபவர் நம் ஆண்டவர். கடவுளின் கனிவு பற்றியும் கல்லாலான இதயங்களை அகற்றி அவற்றில் சதையாலான இதயங்களை வைக்கும் கடவுளின் வல்லமை பற்றியும் கடின இதயத்தவர்க்குத் தெரியாது என்கிறார் திருத்தந்தை.

காலைக்கதிர்
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.


### ஒருமைப்பாடு, பகிர்ந்து வாழும் பண்பு குறித்து திருத்தந்தை டுவிட்டரில் வெளியிட்டுள்ள செய்தி

'ஒருமைப்பாடு மற்றும் பகிர்ந்து வாழும் பண்புகள் அதிகரிப்பதற்கு நாம் ஒன்று சேர்ந்து உழைப்போம்; நல்லதொரு மற்றும் அமைதி நிறைந்த சமூகங்களை அமைப்பதற்கு ஒத்துழைப்பு உதவும்' என்ற வார்த்தைகளை தன் டுவிட்டர் செய்தியாக வெளியிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

# கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலரான புனித யூதாததேயுவின் அருளைப் பெறுவோம்



1971 ஆம் ஆண்டு முதல் கடந்த 47 வருடங்களாக யாழ் நகரின் நுழைவாயிலில் அமர்ந்திருந்து அருள் பாலிக்கும் அரியாலை புனித யூதாததேயுவின் ஆலய திருவிழா பங்குத்தந்தை யோண் மவுலீஸ் அடிகளாரின் ஒழுங்கமைப்பில், யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் கலாநிதி ப.யோசவ்தாஸ் ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் அண்மையில் கொண்டாடப்பட்டது. திருப்பலியில் மறையுரையாற்றிய யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார் புனித யூதாததேயு தானே கைவிடப்பட்ட ஒரு புனிதர். இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாசின் பெயரை கொண்டிருந்தமையால் தன்னிடம் யாரும் வருவதில்லை, தான் தனிமைப்படுத்தப்பட்டுள்ளேன் என்ற எண்ணம் கொண்டவர். எனவே தன்னிடம் கைவிடப்பட்ட நிலையில் வருவோரின் மனநிலையை நன்கு புரிந்தவராக இருக்கிறார். அவரிடம் கைவிடப்பட்டவர்களாக நாம் செல்லும் போது அவர் நம்மை நன்கு புரிந்து ஏற்று துணை புரிவார் என்றார். நாம் நமது கைவிடப்பட்ட நிலையில் அவரிடம் சென்று அவரின் அருள்வரங்களைப் பெற்று வாழ்வோம் என தொடர்ந்து தனது மறையுரையின் ஒரு பகுதியாகத் தெரிவித்தார்.



## உண்மையின் எண்ணங்கள்

யாழ் மறைமாவட்டத்தில் கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலரான புனித யூதாததேயுவின் பக்தி எழுபதுகளில் ஆரம்பித்து வேகமாக வளர்ந்துள்ளது. புனித யூதாததேயுவின் பெயரில் அரியாலை - சுதுமலை - இளவாலை - கிளிநொச்சி - கனகபுரம் - செல்வபுரம் - உடையார்கட்டு - செம்பியன்பற்று - வெல்லை நெடுந்தீவு ஆகிய இடங்களில் ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன என திருவழிபாட்டு நாட்காட்டியின் பதிவுகள் தெரிவிக்கின்றன. யாழ் மறைமாவட்டத்தை மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை 1992 இல் பொறுப்பேற்ற பின்னர் அரியாலை புனித யூதாததேயு ஆலயப் பங்கு முதற் தடவையாக தனிப் பங்காக்கப்பட்டது. புதிய அரியாலை புனித யூதாததேயு ஆலய பங்கின் முதற் பங்குத் தந்தையாக ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் 1992 - 1994 காலப்பகுதியில் பணியாற்றினார். அரியாலை புனித யூதாததேயு ஆலயத்துடன் பூம்புகார் புனித பிலிப்பு நேரியார் ஆலயம் - கிழக்கு அரியாலை வேளாங்கன்னி ஆலயம் என்பனவும் தீவுப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து இங்கு வந்து தங்கி இருந்த சாம்சன் - செல்லக்கிளி - நாவலடி ஆகிய அகதி முகாம்களும் இணைக்கப்பட்டிருந்தன. அரியாலை புனித யூதாததேயு ஆலயப் பங்கு கொய்யாத் தோட்டப் பங்குடன் இணைக்கப்பட்டு றெக்ஸ் சவுந்தரா அடிகளார் பங்குத் தந்தையாகப் பணியாற்றிய 2005 முதல் 2010 வரையிலான ஆண்டு காலப்பகுதியில் போரினால் தரைமட்டமாக இருந்த இவ்வாலயம் கட்டி எழுப்பப்பட்டு இப்போது புதுப்பொலிவுடன் காட்சி தருகிறது. கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலரான புனித யூதாததேயுவின் பக்தியை வளர்ப்போம்.

## மே 3 - உலகச் செய்தித்துறை விடுதலை நாள்




உண்மையைக் கடந்து போலிச் செய்திகளை உருவாக்கும் போக்கு அதிகரித்து வரும் இன்றைய சூழலில் செய்தியாளர்கள் தங்கள் பணியை நம்பகத்தன்மையுடன் ஆற்றுவது மிக முக்கியமாக மாறிவருகிறது என்று ஐ.நா.சபை அறிக்கை வெளியிட்டுள்ளது.

'நெருக்கடியான நேரங்களில், தெளிவான சிந்திக்கும் திறன்கள்' என்ற மையக்கருத்துடன், உலகச் செய்தித்துறை விடுதலை நாள் இவ்வாண்டு சிறப்பிக்கப்பட்டது.

உண்மையைப் பகரும் செய்தியாளர்கள், எளிதில் கொல்லப்படுகின்றனர் என்பதை கவலையுடன் எடுத்துரைத்த யுனெஸ்கோ தலைமை இயக்குநர் இரீனா பொக்கோவா அவர்கள் 2016 ஆம் ஆண்டு, 102 செய்தியாளர்கள் கொல்லப்பட்டனர் என்பதை நினைவு கூர்ந்தார்.

உலகச் செய்தித்துறை விடுதலை நாள் இவ்வாண்டு இந்தோனேஷியாவின் ஜகார்த்தாவில் மே முதலாம் திகதி முதல் 4 ஆம் திகதி வரை யுனெஸ்கோ நிறுவனத்தால் கொண்டாடப்பட்டது என்பதும் நியூயோர்க் ஐ.நா. தலைமையகத்தில் இந்நாளையொட்டி ஒரு சிறப்பு நிகழ்ச்சி நடத்தப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அணு ஆயுதங்களிலிருந்து விடுதலை பெற்ற உலகை உருவாக்க முயல்வோம்!

அணு ஆயுதங்களிலிருந்து முற்றிலும் விடுதலை பெற்ற ஓர் உலகை உருவாக்க திருப்பீடம் தன் முழு ஆதரவை அளிக்கும் என திருப்பீட உயர் அதிகாரி ஒருவர் கூறினார். அணு ஆயுதங்களைக் கட்டுப்படுத்தும் ஒப்பந்தம் 1971 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட போது நீதி, உடன்பிறந்த உணர்வு என்ற விழுமியங்களின் அடிப்படையில் இந்த ஒப்பந்தத்தை திருப்பீடம் ஏற்றுக்கொண்டது.

இந்த ஒப்பந்தம் உருவாகி 40 ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் அணு ஆயுத அழிவு குறித்த அச்சுறுத்தலிலிருந்து உலகம் விடுதலை பெறவில்லை. கொரிய தீபகற்பத்தில் தற்போது நிலவி வரும் இறுக்கமான சூழல் குறித்து திருப்பீடம் மிகுந்த கவலை கொண்டுள்ளது என்பதை தன் உரையில் குறிப்பிட்ட அவர் இந்தப் போர்ச் சூழலை பேச்சுகளின் வழியே தீர்ப்பதற்கு அனைத்துலக சமுதாயம் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார். போரற்ற உலகம் என்பதைக் காட்டிலும், அமைதியும் உடன்பிறந்த உணர்வும் நிலவும் உலகத்தை வளர்ப்பதில், திருத்தந்தையர் எப்போதும் கவனம் செலுத்தி வந்துள்ளனர் என்பதைச் சிறப்பாகக் குறிப்பிட்ட அவர், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் உலக அமைதி நாளுக்கென வெளியிட்ட செய்தியிலிருந்து ஒரு சில மேற்கோள்களை எடுத்துரைத்தார்.

## கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் சர்வமதத் தலைவர்களின் ஒன்றுகூடல்



யாழ் கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் இயக்குநர் எஸ். இயூஜின் பிரான்சிஸ் அடிகளாரின் தலைமையில் சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான; சர்வமதங்களின் கலந்துரையாடல் ஒன்று - பௌத்த - இந்து - கிறிஸ்தவ மற்றும் இஸ்லாம் மதங்களின் தலைவர்கள் மத்தியில் அண்மையில் நடைபெற்றது. அங்கு, உரையாற்றிய எஸ். இயூஜின். பிரான்சிஸ் அடிகளார் மதங்களும் அதன் விழுமியங்களும் மனிதவாழ்க்கையை நெறிப்படுத்தி சமூகநலனை மேம்படுத்த வேண்டும். அப்போது தான் சமாதானம் நிறைந்த சக வாழ்வில் நல்லிணக்கம் மலரும். எனவே சர்வமதங்களின் தலைவர்கள் ஒன்று கூடி தொடர்பாடல்களையும் கலந்துரையாடல்களையும் மேற்கொள்வது அனைத்து சமய மக்களுக்கும் நம்பிக்கையும் சமாதானத்திற்காக உழைக்கும் மனவலிமையையும் கொடுக்கும் என்றார்.

## மியன்மாரின் ஆங் சான் சூகி திருத்தந்தையைச் சந்தித்துப் பேச்சு

மியன்மார் அரசின் முதன்மை ஆலோசகரும் அந்நாட்டின் ஆளுங்கட்சியான தேசிய சனநாயகக் கட்சியின் தலைவருமான ஆங்சான் சூகி அவர்கள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை திருப்பீடத்தில் சந்தித்துப் பேசினார். 20 நிமிடங்கள் நீடித்த இச்சந்திப்பில் மியான்மார் நாட்டிற்கும், திருப்பீடத்திற்கும் இடையேயான உறவுகளை வலுப்படுத்தும் கருத்துக்கள் குறித்தும் அந்நாட்டில் தலத்திருஅவை ஆற்றி வரும் பணிகள் குறித்தும் பேசப்பட்டது.

மேலும் திருப்பீடத்திற்கும் மியான்மார் அரசுக்கும் இடையே தூதரக உறவுகளைத் துவங்கும் விருப்பத்துடன் இவ்விரு நாடுகளும் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டன என்று வத்திக்கான் செய்தித்துறை அறிவித்துள்ளது.

பிசப் சவுந்தரம் மீடியா சென்றர்; 891 அடைக்கலமாதா கோவில் வீதி, யாழ்ப்பாணம். 0777165147, info@tcnlnet.com

# உளர்வம்பு

■ குருவியார்
thamizhkaalaikathir@gmail.com

''இனிமேல் சந்திகளிலை பொலிஸ்காரருக்குப் பதிலாக, காவல்துறையினர்தான் நிற்பினம் போல இருக்கு'' என்றபடி ஜீவனுடன் சந்தியடியில் வந்தமர்ந்தான் ரூபன்.

''இதென்னடா நடக்காத விசயத்தை சொல்லுகிறாய். நாங்கள் சிறிலங்கா அரசாங்கத்தின்றையைப் 'பொலிஸ்' என்று சொல்லுறனாங்கள். புலிகளின்றையைத் தானே 'காவல்துறை' என்று சொல்லுறனாங்கள்.'' என்று அதிர்ந்து போய்க் கேட்டார் ஏரம்பர்.

அவரின் பதற்றத்தைக் கண்ட செல்லாச்சி, ''ரூபன், விசயத்தை உடனை சொல்லிப் போடு. இல்லாட்டி அவருக்கு மாரடைப்பு வந்திடும்'' என்று சிரித்தபடி சொன்னாள்.

''அதொன்றும் பெரிய விசயமில்லை, சிறிலங்கா பொலிஸார் இப்போது காக்கிநிறத்திலைதானே சீருடை அணிகிறார்கள். அதனை மாற்றி, நீல நிறச் சீருடையாக்கப் போகினமாம். உலகில் பல நாடுகளிலும் பொலிஸாருக்கு நீல நிறத்திலைதான் சீருடை இருக்காம்'' என்று ஊடகங்களில் பார்த்ததைச் சொன்னான் ரூபன்.

''இப்பதான் எல்லாப் பக்கத்தாலையும் பெயர் கெட்டுக்கிடக்கு. ஆனபடியால் காவல்துறை மாதிரி நீலத்திலை உடுப்புப் போட்டாலாவது நல்ல பெயர் கிடைக்கும் என்று நம்புகினமாக்கும்'' என்று பழைய நாள்களை எண்ணி, பெருமிதத்துடன் சொன்னாள் செல்லாச்சி.

''எல்லோரும் விழுந்த வழத்துக்கு குறிசுடுவீங்களே தவிர, பிரச்சினைக்கு என்ன காரணம் என்று ஆராயமாட்டீங்கள்'' என்று கைபேசிய விட்டுக் கண்ணை எடுக்காமலேயே சொன்னான் ஜீவன்.

''அப்பிடி என்ன ஆராய்ச்சி செய்து சொல்லுறாய்?'' என்று இளக்காரமாகக் கேட்டாள் செல்லாச்சி.

அதற்கு ஜீவன் கைபேசியைப் பார்த்துக் கொண்டே ''பொலிஸ்காரர் ஒருவர் முகப்புத்தகத்தில் தங்களுடைய நிலை பற்றி எழுதியிருக்கிறார். அதிலை அவர் 'நாங்கள் நல்ல தந்தையாகவோ மகனாகவே கணவனாகவோ இருக்கமுடிவதில்லை காலப்போக்கில் நல்ல மனிதர்களாகவும் தான்....! மக்களுக்கு சேவை செய்வது எப்படி என்று கற்றுத் தரப்பட்டதைவிட அதிகாரிகளுக்குச் சேவை செய்வது எப்படி என்றுதான் அதிகமாகக் கற்றுத் தரப்பட்டது...!

''பயிற்சியின் அடிப்படையே வெள்ளையர்கால அடிமை முறைகள்தான்....நாங்கள் மக்களுக்கான காவலர்களா இல்லை அதிகாரத்தின் அடிமைகளா என்று எண்ணிய துண்டு....!

''சமூகமும் எங்கள் நிலை அறியாது...!' என்று அவர் மனம் வெதும்பிச் சொல்லியிருக்கிறார்.'' என்றான் ஜீவன்.

''ஜீவனுக்கு என்ன பொலிஸ்காரராலை ஏதும் காரியம் ஆக வேண்டியிருக்கோ. அவைக்காக இப்பிடி வக்காலத்து வாங்கிறாய்?'' என்று சிடுசிடுத்தாள் செல்லாச்சி.

அதனைக் காதில் வாங்காமல், கைபேசிக்குள் மூழ்கினான் ஜீவன். இதனைக் கண்ட வாத்தியார் தொண்டையைச் செருமியபடி கதைக்கத் தொடங்கினார்.

''இதிலை உண்மை இருக்குத்தானே செல்லாச்சி. அந்தப் பொலிஸ்காரர் தங்கடை துறை ஏன் இப்படி ஆகிப்போனது என்பதற்கான ஒரு அடிப்படை விசயத்தை சொல்லியிருக்கிறார் தானே'' என்று கேட்டார்.

''அப்பிடியென்ன சொல்லியிருக்கிறார்?'' என்று அவசரமாகக் கேட்டான் ரூபன்.

விறைத்த கால்களை மாற்றிப் போட்ட வாத்தியார் ''இலங்கை சுதந்திரமடைந்து எத்தினை வருசமாச்சு?'' என்று கேட்டார்.

''இந்தாள் இப்பவே சம்மந்தா சம்பந்தம் இல்லாமல் கதைக்கிறார். படிப்பிக்கேக்கை பிள்ளைகளை என்ன பாடு படுத்தியிருப்பார்.'' என்று மெதுவாகச் சொல்லிச் சிரித்தாள் செல்லாச்சி.

அதைகேட்டு தானும் சிரித்த வாத்தியார் ''சம்பந்தம் இருக்கோ இல்லையோ என்று பிறகு பார்ப்பம். இப்ப பதிலைச் சொல்லுங்கோ'' என்று உறுக்கினார்.

''சரி, சொல்லுறம்'' என்ற ஏரம்பர்'' 1948 ஆம் ஆண்டு மாசி மாதம் 4 ஆம் திகதி இலங்கை சுதந்திரம் அடைந்தது'' என்றார்.

''இலங்கை பொலிஸ்திணைக்களம் போன வருசம் எத்தனையாவது ஆண்டுநிறைவு விழாவைக் கொண்டாடியது என்று ஞாபகம் இருக்கோ?'' என்று அமைதியாகக் கேட்டார் வாத்தியார்.

''150ஆம்ஆண்டுநிறைவைக் கொண்டாடியது'' என்று பதில் சொன்னான் பேப்பர்தம்பி.

''அதெப்படித்தம்பி, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பொலிஸ்துறை, நாடு சுதந்திரமடைந்த பிறகுதானே உருவாகியிருக்க வேணும். அதுக்கு முதல் உருவாக்கப்படதென்றால், அது இந்த நாட்டின் துறையாக இருக்காதுதானே'' என்று சொல்லிவிட்டு எல்லோரையும் பார்த்தார் வாத்தியார்.

''அதுதானே'' என்று ஆச்சரியப் பட்டார் ஏரம்பர்.

''வாத்தியார் சொல்வது சரிதான். இலங்கையைக் கைப்பற்றி ஆட்சி புரிந்து வந்த ஆங்கிலேயர்கள் தங்களின் பாதுகாப்புக்காகவும், தங்கள் ஆட்சிக்கு எதிராகப் போராடுபவர்களையும் எதிர்ப்பவர்களையும், எதிர்த்துக் கருத்து கூறுபவர்களையும் , கொடுமையான சட்டங்கள் போட்டு, அந்தச் சட்டங்களின் மூலம், மக்களைக் கைது செய்து அடித்து, உதைத்து, அடக்கி ஒடுக்குவதற்காக 1866 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட படைதான் போலீஸ் படை. அது தான் சுதந்திரத்துக்குப் பிறகு 'சிறிலங்கா பொலிஸாக' பெயர் மாறி தொடர்ந்து இயங்குகிறது'' என்று சொல்லி முடித்தான் பேப்பர்தம்பி.

''அதுதான் எல்லாப் பிரச்சினைகளுக்கும் அடிப்படை. அந்நியரின் அடிமைகளாக இருந்து கொண்டு, தனது சகோதர சகோதரிகளை வதைத்த மனப்பான்மை, அந்தத் துறையை விட்டு இன்றும் போகவில்லை'' என்று விளக்கினார் வாத்தியார்.

''அதுதான் புலிகளின்றை காவல்துறைக்காரர் ஐயா, அம்மா, அண்ணை, அக்கா என்று உறவு முறை சொல்லித்தானே கதைச்சவை. காவல்துறையிட்டை வாறவை தங்கடை உறவுகள் என்று நினைச்சதாலைதான், இலங்கை நாடாளுமன்றத்திலை கூடப் பெருமையாக கதைக்கப்பட்டவை'' என்று மகிழ்ச்சி பொங்கச் சொன்னாள் செல்லாச்சி.

கிழவியின் குதூகலத்தை ரசித்த பேப்பர்தம்பி ''எப்பிடியிருந்தாலும், இலங்கைப் பொலிஸாரின் சீருடை நிறத்தை மாற்றுவதைவிட, அவர்களின் மனதை மாற்றுவதுதான் முக்கியமானதும் அதே நேரம் மிகவும் கடினமானதுமான காரியம்'' என்றான்.

''ஆனாலும் அவையின்றை கதை பேச்சை மாத்தினாலும், இலஞ்ச ஊழலை எப்பிடி மாத்திறது?'' என்று விசனத்துடன் கேட்டார் ஏரம்பர்.

இதனைத் தலையாட்டி மறுத்த வாத்தியார் ''பொத்தாம் பொதுவாகக் கதைக்கக் கூடாது ஏரம்பர், இந்தியாவோடை ஒப்பிடும் போது இலங்கையிலை இலஞ்சம் என்பது புரையோடிப் போகவில்லை. அதுக்காக இல்லையென்றும் சொல்லவில்லை. அதேநேரம் இலஞ்சத்துக்கு வாங்கிறவன் மட்டுமில்லை, கொடுக்கிறவனும் காரணம். வீடு கட்ட மண் வேணுமென்றால் கள்ள மண் இறக்கத் தயாராக இருக்கிறம். அப்போ மட்டும் வழிதெருவாலை இந்த மண் இவ்வளவு தொலைவுதாண்டி எப்பிடி வந்தது என்று யோசிக்க மாட்டம். வாகனங்களிலை ஆவணங்கள் இல்லாமல் போவம். பிடிபட்டால் காசு கொடுத்துத் தப்புவோம். இதற்குள் முன்னுக்கு பொலிஸ் நிற்கிறான் என்று வாகன விளக்கைப் போட்டுக் காட்டி மற்றவர்களை எச்சரிப்பம். இவ்வளவும் செய்து போட்டு பொலிஸ்காரனில் மட்டும்தான் பிழை என்ற மாதிரி கத்திக் குழறுவோம். இது எப்பிடி நீதியாகும்'' என்று சலித்துக் கொண்டார் வாத்தியார்.

''உண்மைதான் வாத்தியார்'' என்று ஆமோதித்த பேப்பர்தம்பி ''எனக்குத்தெரிஞ்ச பொலிஸ் அதிகாரி சொன்னார், 'ஒருத்தன் தவறு செய்யிறான் என்பதற்காக அவன் மீது எங்களால் உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியாது. அவனுக்குப் பின்னால் இருக்கிற கூட்டம் உடனே வீதிக்கு இறங்கி விடும். அதுக்குப் பிறகு அரசியல்வாதிகள் எங்களைத்தான் பலிகடா ஆக்குவார்கள். இதனால் ஏற்படுகிற மன அழுத்தங்கள் எல்லாம் சேர்ந்துதான் கிடைக்கிற ஏமாளியிடம் கோபத்தையெல்லாம் காட்ட வேண்டியிருக்கு' என்று சொன்னார்'' என்று முடித்தான்.

''சரிவாத்தியார், தமிழகத்தோடை ஒப்பிடும் போது இலஞ்சம் குறைவாக இருக்கலாம். ஆனால் பொலிஸ்துறையில் இலஞ்சம் அதிகம்தானே. இங்கு நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்லுறன்'' என்று சொன்ன ரூபன், கைகளை பின்புறமாக ஊன்றியபடி சொல்லத் தொடங்கினான்.

''எனக்குத் தெரிஞ்ச ஒருத்தர் தெற்கிலை இருக்கிற தனது நண்பர் ஒருவரின் வங்கிக் கணக்குக்கு இருபத்தைஞ்சாயிரம் ரூபா அனுப்ப வேண்டியிருந்தது. பணம் பெறுபவர் சிங்களவர். யாழ்ப்பாணத்திலை இருக்கிற வங்கியிலை பணம் செலுத்தும்படிவத்தை நிரப்பி, அதோடை உரிய பணத்தையும் காசாளரிடம் நீட்டியிருக்கிறார். காசாளர் அவருக்கு அறிமுகமானவராம். அதாலை அவர் சிங்களப் பெயரைப் பார்த்திட்டு 'என்ன பிரச்சினையிலை மாட்டினீங்கள்?'' என்று முதல் கேட்டாராம். இவருக்கு எதுவும் விளங்காமல் நின்றிருக்கிறார். அப்ப பெரிய தொகை எழுதியிருந்ததைப் பார்த்துப் போட்டு காசாளர் 'என்ன இது, பெரிய பிரச்சினையிலை மாட்டுப்பட்டிட்டீங்களோ?'' என்று மீண்டும் கேட்டிருக்கிறார்.'' என்று கூறிவிட்டு மூச்சு வாங்குவதற்காக நிறுத்தினான் பேப்பர்தம்பி.

அப்போது ஏரம்பர் ''அப்ப இந்தமாதிரி அடிக்கடி முதலிலை வங்கிக் கணக்கிலை காசு போடுற விளையாட்டு நடந்து கொண்டுதான் இருக்குதோ?'' என்று கேட்டார்.

''எனக்குத் தெரிஞ்சவருக்கும் அதே சந்தேகம்தான் வந்ததாம். அதனாலை காசாளரிடம் விசாரிச்சிருக்கிறார். அதற்குக் காசாளர், 'வாகனங்களிலை ஆவணங்கள் இல்லை, தலைக்கவசம் போடேல்லை என்று வருவாங்கள். வந்து இப்பிடித்தான் ஏதேனும் வங்கிக் கணக்குகளில் ஐந்நூறு, ஆயிரம் என்று போட்டுட்டு, நாங்கள் குடுக்குற சிட்டையை வாங்கிக் கொண்டு போவாங்கள்.' என்றாராம் என்று சொல்லி முடித்தான் ரூபன்.

''இதையெல்லாம் கண்டுபிடிக்கிறது இலகுதானே, வங்கிக் கணக்குகளை ஆராய்ந்தாலேயே, தவறு செய்தவர்களை பிடிக்கலாமே. முன்னர் வெளிநாடுகளிலை இருந்து திடீரென்று யாருக்காவது அதிகமாக வங்கிகளுக்குப் பணம் வந்தால் அதுபற்றி விசாரிக்கிறவைதானே. அதுபோல இதையும் விசாரித்தால் பொலிஸாருக்கு ஏற்பட்ட அவதூறு நீங்கும்தானே?'' என்று சொல்லி விட்டு மீண்டும் கைபேசிக்குள் மூழ்கினான் ஜீவன்.

''இதுக்கு இன்னொரு வழியிருக்கு, புலிகளின் காவல்துறையிலை பணியாற்றியவையை அழைத்து, போக்குவரத்து பிரிவிலை வேலை கொடுங்கோ. போக்குவரத்தும் சரியாகும் இலஞ்சமும் இருக்காது'' என்றாள் செல்லாச்சி.

''இதெல்லாம் நடக்கிற காரியமில்லை. எப்பிடியோ ஆங்கிலேய பொலிஸ் துறை இனிமேலாவது இலங்கைப் பொலிஸ்துறையாக மாறினால் எல்லோருக்கும் நல்லது. அதுக்கு கடவுளைக் கும்பிடுவம்'' என்றார் வாத்தியார்.

''யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலை புதுத் துணைவேந்தர் பதவியேற்றிருக்கிறார். பழசுகளை மறந்து இனிமேல் பல்கலைக்கழகத்தின் முன்னேற்றத்துக்கு எல்லோரும் சேர்ந்து உதவினால் சமூகத்துக்கு நல்லது'' என்று கைபேசியைப் பார்த்துச் சொன்னான் ஜீவன்.

''நடக்கிறதுகளைப் பார்த்தால் அப்பிடித் தெரியவில்லை'' என்று கவலையுடன் சொன்னான் பேப்பர்தம்பி.

''ஏன்?'' ஒற்றைச் சொல்லால் கேட்டார் வாத்தியார்.

''படிச்சவை சமூகத்துக்கு முன்மாதிரியாக இருக்க வேணும். துணைவேந்தர் பதவியேற்பு என்பது ஆடம்பரம் இல்லாமல் நேரடியாக அலுவலகத்தில் நடக்க வேண்டியது. அதனை மேள தாளத்துடன் ஊர்வலமாக ஏற்பாடு செய்ததே பல்கலைக் கழகம் மீண்டும் பழைய பாதையிலைதான் போகும் என்று காட்டுதாம்'' என்றான் பேப்பர் தம்பி.

''அங்கே வால்பிடிக்கிறவை செய்த ஏற்பாடுகளுக்குத் துணைவேந்தர் என்ன செய்ய முடியும்?'' என்றார் ஏரம்பர்.


''ஆனால் இதிலை உறுத்திற விசயமும் இருக்கு. துணைவேந்தர் பதவிக்கு பலர் போட்டியிடலாம். ஆனால் ஒருவர் மட்டுமே தெரிவு செய்யப்படுகிறார். அவர் பதவியேற்கும்போது, போட்டியிட்ட மற்றவர்களும் வந்து வாழ்த்தினால்தானே சாதாரண சனத்துக்கு முன்னுதாரணமாக இருக்கும். அதற்கு மற்றவர்களுக்கு உறுத்தாமல், வெடிகொளுத்திக் கொண்டாடாமல், படித்தவர்களுக்கே உண்டான நாகரிகத்துடன் பதவிசாக பதவியேற்றிருந்தால் இன்னும் அழகாக இருந்திருக்கும் என்று சனம் கதைக்குது'' என்று பேப்பர்தம்பி சொல்ல, குறுக்கிட்ட ரூபன் ''பேராசிரியர் மிகுந்தன் பதவியேற்புக்கு வந்தவர்போலை இருக்கு'' என்றான்.

மேலும் அவனே தொடர்ந்து 'விடுமுறை நாளைத் தவிர்த்து, வேலைநாளில் பதவியேற்றிருந்தால் பல்கலைச் சமூகம் கூடி நின்றிருக்குமே? இதைப்பார்த்தால் யாருமே நெருங்க முடியாத நிர்வாகம்தான் நடக்கும் போல இருக்கு'' என்றான் ரூபன்.

''அதிலையும் நீண்டகாலமாக இருக்கின்ற கல்விசாரா ஊழியர்களின் தொழிற்சங்கத்துக்கு அழைப்பு அனுப்பாமல், டக்ளஸ் தேவானந்தா அமைச்சராக இருந்த காலத்தில் வேலைக்கு எடுபட்டவர்கள் உறுப்பினராக இருக்கிற தொழிற்சங்கத்துக்கு மட்டும் அழைப்பு அனுப்பப் பட்டதாம். இத்தனைக்கும் முன்னைய தொழிற்சங்கத்தினர் மேதின கூட்டத்துக்காகப் பல் கலைக்கழகத்திலைதான் நின்றிருந்தார்களாம். அதனால்தான் துணைவேந்தரின் பதவியேற்பு யாரோ சிலரின் சுய விருப்பு வெறுப்புகளின் அடிப்படையில் ஒழுங்கமைக்கப் பட்டது என்று சொல்லுகினம். துணைவேந்தர் இனிமேல் சிலரை மட்டும் தன்னைச் சுற்றி வைத்துக் கொண்டு நிர்வாகம் நடத்தப் போகிறாரா. அல்லது தற்துணிவோடு தனியாக நிர்வாகம் நடத்துவாரா என்று போகப் போகத்தானே தெரியும்'' என்றான் பேப்பர்தம்பி.

''பேராசிரியர் துரைராஜா இருந்தபோது புனிதமாக இருந்த கதிரை. இப்போது எவர் வேண்டுமானாலும் இருக்கலாம் என்று ஆகிவிட்டது. மூன்று வருடங்களால்' பேராசிரியர் விக்னேஸ்வரன் இருந்த போது புனிதமாக இருந்த கதிரை' என்று சொல்லுகின்ற காலம் வருமா? என்று பாக்கலாம்'' என்றபடி எழுந்து நடந்தார் வாத்தியார்.

கச்சான் கடையைக் கட்டினாள் செல்லாச்சி.



## சீருடையின் நிறம் மாறுவதை விட பொலிஸாரின் மனம் மாற வேணும்!

# இந்திய மீனவர் அத்துமீறலைக் கட்டுப்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## யாழ். இந்தியத் துணைத்தூதுவரிடம் ஈ.பி.டி.பி. வலியுறுத்து



யாழ்ப்பாணம், மே 07

இந்திய மீனவர்களின் அத்து மீறிய மீன்பிடி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த இந்திய மத்திய அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

-இவ்வாறு இந்தியத் துணைத் தூதுவர் நடராஜனிடம் ஈ.பி.டி.பி. வலியுறுத்தியது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதுவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நிர்வாகச் செயலாளர்களுக்கும், துணைத் தூதுவர் நடராஜனுக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பின்போது, ஈ.பி.டி.பி சார்பில் பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று ஈ.பி. டி.பி. வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கை இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இருந்து நிரந்தரத் தீர்வு நோக்கி முன்னேற்றம் காண்பதே நடைமுறைச் சாத்தியமானது என்பதை நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகிறோம்.

13 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சர்வஜன வாக்கெடுப்போ, நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையோ தேவையில்லை.

வடக்கு மாகாண சபையைப் பொறுப்பேற்றவர்கள் அதை செயல் திறனோடு நிர்வகிக்காததால் வடக்கு மாகாணம் நிர்வாக ரீதியாக முடக்கப்பட்டுள்ளது. மாகாண சபை ஊடாக எமது மக்களுக்கு கிடைக்க வேண்டிய பலாபலன்கள் மக்களைச் சென்றடையாமல் உள்ளன.

அத்துடன் இன்னமும் மீள் குடியேறவுள்ள எமது மக்களுக்கு வீட்டுத் திட்டம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில், இந்திய அரசு இன்னும் அதிகமாக உதவ வேண்டும்.

மாகாணசபை கவனிக்க வேண்டிய உள்ளூராட்சி சபை நிர்வாகச் செயற்பாடுகள் முறையாகச் செயற்படாமையால், மக்கள் எதிர்கொண்டுள்ள சுகாதாரம் மற்றும் சுத்தம் மற்றும் அத்தியாவசியத் தேவைகள் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், சமகால அரசியல் சூழல் தொடர்பாகவும், பலாலி விமான நிலையத்தைச் சர்வதேச தரத்துக்கு புனரமைப்புச் செய்து தருவதற்கு இந்திய அரசு அக்கறை செலுத்த வேண்டும் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்திய மீனவர்களின் அத்து மீறிய மீன்பிடி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த இந்திய மத்திய அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் துணைத்தூதுவர் நடராஜனிடம் ஈ.பி.டி.பி. வலியுறுத்தியது.-என்றுள்ளது.

இந்தியத் துணைத் தூதுவருடனான சந்திப்பில், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நிர்வாகச் செயலாளர் ஜெகன், மாவட்ட உதவி நிர்வாகச் செயலாளர் ஜீவன், மாவட்டத்தின் மேலதிக நிர்வாகச் செயலாளர் ரங்கன் ஆகியோர் கலந்து கொண்டனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ)

# செப்புகிறார்... சின்னப்பு!



வணக்கமுங்கோ!

கன நாளா இஞ்சாலிப் பக்கம் வரவேணுமெண்டு இருந்தனான். நேரமில்லாமல் போச்சுது பாருங்கோ! அந்தளவுக்கு வீட்டில் வேலை விராயள் கூடிப் போச்சுது. சண்டை முடிஞ்சு மீள் குடியேற்றமெண்டு ஊருக்கு வந்த நாளையில இருந்து இண்டுவரைக்கும் ஓய்வொழிச்சல் இல்லாத வேலையாளாத்தான் கிடக்குது.

பின்னை! இருக்காதே... ஊரைவிட்டு வெளிக்கிட்டுப் போயிட்டு, பிறகு வந்து பார்த்தால் ஊர் ஊர் மாதிரியே கிடந்தது. சுடுகாடு; இடுகாடுகளைவிடக் கேவலம். இருந்தாலும், நாங்கள் மனம் தளரேல்லைப் பாருங்கோ! விழ... விழ எழுவம் எண்டதை நிரூபிச்சுக் காட்டியிருக்கிறம்; காட்டிக் கொண்டும் வாறம்.

அரசியல் பிரச்சினை ஒரு பக்கம் இருக்கட்டும். இப்ப எமக்கான அடிப்படைத் தேவையளை மற்றவையிட்டை எதிர்பார்த்துக் கையேந்துறதைவிட, நமக்கு நாமே சுயமாகச் சிந்தித்து முடிவு எடுக்க வேணும் கண்டியுளோ!

மீள்குடியேற்றம் எண்டு வந்தாப் போல... நான் சும்மாயிருக்கேல்லை. ஐயோ... இப்படியெல்லாம் அழிஞ்சு போயிட்டுதே... எண்டு அழுது புலம்பேல்லை. இருந்து பாருங்கோடா! செய்து காட்டுறன்... எண்டு எனக்குள்ள ஒரு மூர்க்கம் கொண்டு நல்லாப் பிரயாசப்பட்டன். இப்ப என்ர வளவுக்குள் சொல்லப்பட்ட அத்தனை பயிர் பத்தாடையள் எல்லாம் விளைஞ்சு நிக்குது. பட்டி மாடுகள்... கோழி வளர்ப்பு... எண்டு என்ரை வளத்தை நான் அபிவிருத்தி செய்து கொண்டு வாறன்.

இது ஒரு புறமிருக்கட்டும்!

இப்ப நாட்டு நடப்புகள் அவ்வளவு நல்லாத் தெரியுதில்லை. எங்கை திரும்பவும் ஒருசண்டை வந்து பெட்டி படுக்கையளோடை ஓடவேண்டி வருமோ எண்டு எங்கட சனத்தில கொஞ்சப் பேருக்குப் பயம் இருக்குது. அதுகளுக்கு இருக்கத்தானே செய்யும். அனுபவங்கள் ஒரு நாளும் செத்துப்போகாது பாருங்கோ.

நாங்கள் இழந்து போனவை கொஞ்சம் நஞ்சமே! உயிர்ப்பலியள்ளையிருந்து உடைமையள்வரை... எத்தனைபேர் இப்பவும் அதைக் கணக்குப்போட்டுக்கொண்டு அரசியல் செய்யினம்.

சண்டை முடிஞ்சு எட்டு வருசமும் முடியப்போகுது. எங்களுக்கான இழப்புக்களுக்கு இன்னமும் நீதி கிடைக்கேல்லை. நியாயம் கிடைக்கேல்லை. ஆட்சிக்கு வாறவை எங்கட அவலத்தையும் அந்தரிப்பையும் வைச்சுக் கொண்டு இப்பவும் அரசியல் செய்யப்பார்க்கினம்.

எங்கட அடிப்படைத் தேவையளுக்கு நாங்கள் உடல் வருத்திப் போராடுகிறது ஒரு புறமிருக்க, இந்த அரசியல்வாதியளின்ரை செய்கை காரியங்களோடையும், அவையள் பேசிற பேச்சுக்களோடையும்தான் இப்ப போராட வேண்டிக்கிடக்குது.

என்ன செய்யிறது... போராட்டமே வாழ்க்கையெண்டு வாழ்ந்த ஒரு காலம் போய், இப்ப வாழ்க்கையே ஒருபோராட்டமாக மாறிப் போச்சுது.

போராடத்தான் வேணும்...! எங்கட இனம் சனம் போராடாமல் இருக்கேலாது; இருக்கவும் கூடாது. வாழும்வரை போராடு! வழியுண்டு என்றே பாடு... எண்டு போராட வேணும்.

நாங்கள் எங்களுக்கான அடிப்படைத் தேவையளுக்கு ஆரம்பத்தில் எப்படிப் போராடி வெற்றிகண்டோமோ, அதே மாதிரித்தான் வேறு தேவையளுக்கும் போராட வேணும்...

எப்படிப் போராட வேணும் எண்டதைக் கடந்தகால வரலாறுகள் எங்களுக்குக் கற்றுத் தந்திருக்குதுதானே!

பிறகென்ன!

போராடினால் வெற்றி நிச்சயம்... எண்ட நம்பிக்கையோடை போராடுவோம்.

சரி நேரமாகுது! பிறகு இஞ்சாலிப் பக்கம் வந்தால், இப்பிடிக் கொஞ்சம் மனம் விட்டுக் கதைப்பம். மனசில உள்ள பாரமும் கொஞ்சம் குறையுமல்லோ!

பிறகு சந்திப்போம்!

## இலங்கையில் பாரதி...

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்த ரீதியில் இன்று இங்கு வந்திருக்கும் ரகுநாதன் எமது கவிஞர்களிடம் பாரதியினதும் தமதும் தாக்கம் இருப்பதாகச் சொல்கிறார்.

நான் வீரகேசரி வாரவெளியீட்டில் பணியாற்றிய காலத்தில், கைலாசபதி, சிவத்தம்பி, சிவகுருநாதன் ஆகியோர் கல்லூரி மாணவர்கள். அச்சமயத்தில் ஒவ்வொரு வாரமும் இலங்கை கவிஞர்களின் கவிதைகளுக்கு வீரகேசரி வார வெளியீட்டில் நல்ல களம் கொடுத்து வளர்ந்தவர்கள்தான் பின்னாளில் பிரபல்யம் பெற்றவர்கள். கவிஞர்கள் முருகையன், நீலாவணன் போன்றோர் இப்படித்தான் அன்று இங்கு வளர்க்கப்பட்டார்கள். எமது கவிஞர்களின் வளர்ச்சி மிகவும் வேகமானது.

பாரதியாருக்கு ''பாரதி'' பட்டத்தைச் சூட்டியவரே ஒரு இலங்கைக் கவிஞர்தான். ஆனால், துரதிஷ்டவசமாக அவரது பெயரை அறியமுடியாதவர்களாக நாம் இருக்கின்றோம். சுப்பிரமணியம் என்ற 12 வயது சிறுவனுக்கும், சோமசுந்தரம் என்ற சிறுவனுக்கும் முறையே சுப்பிரமணிய பாரதி, சோமசுந்தரபாரதி என்ற பெயர்களை வழங்கியவர் எமது தாயகத்தைச் சேர்ந்தவரே என்று, சோம சுந்தர பாரதியார் தமது கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த அந்தக் கவிஞரின் பெயரைத் தாம் மறந்துவிட்டார் எனவும் அதில் அவர் தெரிவித்துள்ளார். இது இவ்விதமிருக்க ரகுநாதன் வந்து பாரதியினதும் தமதும் தாக்கம் இலங்கையிலிருப்பதாகச்சொல்கின்றமை நகைப்புக்குரியது.

இந்த விழாவில் உரையாற்றிய தமிழகப் பேச்சாளர் பேராசிரியர் ராமகிருஷ்ணன், ''மரபுக்கவிதை - புதுக்கவிதை சர்ச்சைகள் தமிழகத்தில் ... யிலும் உச்சக் கட்டத்திலிருப்பதை என்னால் அவதானிக்க முடிகிறது. புதுக்கவிதையும் கவிதைதானா என்று என்னிடம் எவரும் கேட்டால், கவிதையில் கருத்து இருந்தால், எழுச்சி இருந்தால், உணர்ச்சி இருந்தால் மக்களின் பிரச்சினை இருந்தால் அதனை நான் கவிதை என்பேன். மரபுக்கவிதைக்குப் பாரம்பரியம் இருக்கிறது. புதுக்கவிதை ஆங்கில இலக்கியத்திலிருந்து பிறந்தது. மேனாட்டில் முதலாளித்துவாதிகளதும் தொழிலாளி வர்க்கத்தினரதும் பக்கங்கள் சாராமல் நடு நிலையில் நின்று பிறந்தது புதுக்கவிதை. அதிலும் அழகியல் அம்சங்கள் இருக்கின்றன.

இன்று தமிழ்நாட்டில் புதுக்கவிதை உச்சத்தில் கொடி கட்டிப் பறக்கிறது. ஆனால், முன்னர், புதுக்கவிதையை குப்பைத்தொட்டியில் போடுங்கள் என்ற குரலும் கேட்டது. கவிஞர்கள் எதனை எழுதினாலும் அதில் மக்களின் பிரச்சினைகள் சொல்லப்படல் வேண்டும். அதற்குத்தான் வரவேற்பிருக்கும்.'' எனத் தெரிவித்தார்.

இந்த வாதங்கள் 1970களில் உக்கிரம் பெற்றிருந்தன. இன்று மரபுக்கவிதை - புதுக்கவிதை என்று பார்க்காமல் கவிதை என்றே பார்க்கும் நிலை வந்துவிட்டது. இவற்றுக்கு மத்தியில் ஹைக்கூ கவிதை என்ற வடிவமும் வந்திருக்கிறது.

கவிஞர்கள் - எழுத்தாளர்களிடையேயான மோதல்கள் இன்று நேற்றல்ல, நக்கீரன் - சிவபெருமான், கம்பர் - ஒட்டக்கூத்தர் காலத்திலிருந்தே தொடங்கிவிட்டது.

பாரதி பட்டத்தை சுப்பிரமணியனுக்கு யார் கொடுத்தது...? என்ற கேள்வியை எழுப்பி, சோமசுந்தர பாரதியின் கட்டுரையிலிருந்து ஆதாரம் சொன்ன சில்லையூர் செல்வராசனுக்கு அன்றைய நிகழ்வில் எவரும் எதிர்வினையாற்றவில்லை.

ஆயினும், பாரதி பட்டத்தை சுப்பிரமணியன் என்ற பால்ய காலத்து சுப்பையாவுக்கு அவரது 11 வயதில் 1893 ஆம் ஆண்டில், எட்டயபுரத்தின் அரண்மனையில் அன்றைய சமஸ்தானப்புலவர்கள் தான் வழங்கினார்கள் என்றுதான் இற்றைவரையில் பாரதியின் வரலாறு பேசுகின்றது.

அந்தச் சபையில் பாரதியின் கவிபுனையும் ஆற்றலை நன்கு சோதித்துவிட்டே பாரதி பட்டத்தை அளித்திருப்பதாக பல பதிப்புகளில் தொடர்ச்சியாக வெளியாகிக் கொண்டிருக்கும் மகாகவி பாரதியார் கவிதைகள் நூலில் பதிவாகியிருக்கிறது. கலைமகளின் மறுபெயர் பாரதி.

உண்மையிலேயே பாரதி பட்டத்தை யார் வழங்கினார்கள்...? என்பதைச் சொல்வதற்கு இன்று எட்டயபுரம் சமஸ்தானமும் இல்லை. பாரதியும் இல்லை. சோமசுந்தர பாரதியாரும் இல்லை. சில்லையூர் செல்வராசனும் இல்லை. சோமசுந்தரபாரதியார் குறிப்பிடும் ஈழத்தின் அந்த மூத்த கவிஞரின் பெயரும் தெரியவில்லை.

இவ்வாறு பல ''இல்லைகள்'' தொடர்ந்திலும் பாரதியின் தாக்கம் எம்மவர் மத்தியில் ஆழமாக வேரூன்றியிருக்கிறது.

பாரதியுடன் சொற்ப காலமே (1897 - 1921) வாழ்ந்த செல்லம்மாவுக்கும் கணவர் தொடர்பாக பல எதிர்வினைகள் இருந்திருக்கின்றன. ஆனால், அதனை அவர் நயமாக உரைத்திருப்பதையே இந்த அங்கத்தின் முதற்பகுதியில் பார்த்தோம்.

ஆனால், பின்னாளில் பாரதியை ஆய்வு செய்தவர்களும் மேடைகளில் உரையாற்றியவர்களும் பல முனைகளில் ஒருவருக்கொருவர் எதிர்வினையாற்றிக்கொண்டிருக்கின்றனர். அந்த எதிர்வினைகளிலும் பாரதி வாழ்ந்துகொண்டேயிருக்கிறார்.

(தொடரும்)

# பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தல் இன்று; உள்நாட்டில் யுத்தம் ஏற்படும் அபாயம்!

## மரின் லீ பென் வெற்றி பெற்றால்

பாரிஸ், மே 07

பிரான்ஸின் ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான முதல் கட்ட வாக்குப் பதிவுகள் சமீபத்தில் முடிவு பெற்றன.

இந்த நிலையில், ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான இரண்டாம் கட்ட வாக்களிப்பு இன்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளது.


முதல் கட்ட வாக்குப்பதிவு கடந்த ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி நடைபெற்றது.

இதில் யாருக்கும் பெரும்பான்மை வாக்குகள் கிடைக்கவில்லை. இருந்த போதிலும் இரண்டாம் கட்ட தேர்தலுக்கு லிபரல் செண்டிரிஸ்ட் கட்சியை சேர்ந்த இமானுவேல் மக்ரான் மற்றும் வலதுசாரி தலைவர் மரின் லீ பென் இருவரும் முன்னேறினர்.

இதனால் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு இன்று நடைபெறஉள்ளது.

இத்தேர்தலுக்கான பிரசாரமும் நேற்றுமுன்தினம் முடிவடைந்தது. இருப்பினும் இத்தேர்தலில் மக்ரான் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன என்று தகவல்கள் வெளியாகின.


மரின் லீ பென்


இமானுவேல் மக்ரான்

அரசியல் வாழ்க்கையில் காலடி எடுத்துவைத்த சில ஆண்டுகளில் எப்படி மக்ரான் ஜனாதிபதி அளவிற்கு வளர்ச்சி பெற்றார் என்று உலக அளவில் ஆச்சரியம் நிலவி வருகிறது.

இந்த தேர்தலில் தெரிவாகும் வேட்பாளரை பொறுத்துத்தான் ஒன்றிணைந்த பிரான்ஸ் தேசமா? அல்லது பிரெஞ்சு மக்களுக்கு மட்டுமேயான தேர்ந்தெடுத்த பிரான்ஸ் தேசமா? என்பது முடிவுக்கு வந்துவிடும் என்று தெரிவிக்கப்படுகிறது.'

வலதுசாரி தலைவர் மரின் லீ பென் ஓர் இனவாதத் தலைவராக கருதப்படுகிறார்.




இதேவேளை, பிரான்ஸ் தேசத்தின் எதிர்கால நன்மை கருதி, இனவாதக் கட்சி வேட்பாளரான மரின் லீ பெனின் வெற்றியைத் தடுக்கவேண்டும் என்று பிரான்ஸின் பெரும்பாலான கட்சிகளும், தொழிற்சங்கங்களும், மனிதவுரிமை அமைப்புக்களும் அறைகூவல் விடுத்துள்ளன.

மரின் லீ பென் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால், பிரான்ஸில் வாழும் வெளிநாட்டவர்கள், சங்கங்கள் அமைத்து தமது மொழி ,கலாசார, பண்பாட்டு விழுமியங்களைப் பேணி, தனித்துவ அடையாளங்களோடு வாழ்வது தடை செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், வதிவிட உரிமையற்றவர்களை கைது செய்து உடனடியாக அவர்களது சொந்த நாட்டிற்கு அனுப்புதல், அவர்களது பிள்ளைகளுக்கு பள்ளிகளில் கற்பதற்கான உரிமையை மறுத்தல். உதவித் தொகை, மருத்துவ உதவிகள் வழங்குவது நிறுத்தப்படும். மேலும், இரட்டைக்குடியுரிமை இரத்துச் செய்யப்படும்.

வெளிநாட்டவர்களை வேலைக்கு அமர்த்தும் தொழிலகங்களுக்கு கூடுதல் வரி அறவிடப்படும்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரான்ஸ் வெளியேற்றப்படலாம். யூரோ நாணயத்தைக் கைவிடுவது போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம்.

எனவே, இவர் ஆட்சியைக் கைப்பற்றுவாராக இருந்தால் பிரான்ஸில் உள்நாட்டு யுத்தம் ஒன்று தோன்றுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

# வடகொரிய அணு ஆயுதங்களை வேரோடு அழிக்க ஜப்பான் முடிவு!


டோமஹாவ்க் ஏவுகணை

டோக்கியோ, மே 07

வடகொரியாவின் அணு ஆயுத தளங்களை வேரோடு அழிக்க சக்தி வாய்ந்த அணு ஆயுதங்கள் மற்றும் ஏவுகணைகளை தயார் செய்யும் பணியில் ஜப்பான் ஈடுபட்டுள்ளது.

வடகொரியா உலக நாடுகளை அச்சுறுத்தும் வண்ணம் தொடர்ந்து அணு ஆயுத சோதனைகளை நடத்தி வருகிறது.

இதற்கு ஜப்பான், அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகள் கண்டனம் தெரிவித்தாலும் அதற்கு அந்நாடு செவிசாய்க்கவில்லை.

அதுமட்டுமில்லாமல், ஜப்பான் கடலுக்குள் வடகொரியா ஒரு முறை ஏவுகணைகளை செலுத்தி தாங்கள் சக்தி வாய்ந்தவர்கள் என்பதை அந்நாட்டுக்கு காட்டியது. இனியும் இதையெல்லாம் பொறுக்க முடியாது என வடகொரியாவின் அணு ஆயுத தளங்களை அழிக்க ஜப்பான் முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து ஜப்பான் அதிகாரிகள் தெரிவித்தவை வருமாறு:-

அமெரிக்காவில் தயாரான சக்தி வாய்ந்த ஆயுதங்களை நாங்கள் வாங்கவுள்ளோம்.

டோமஹாவ்க் ஏவுகணை என்னும் பயங்கர ஏவுகணையை வட கொரியா அணு ஆயுத தளங்களைத் தகர்க்க பயன்படுத்தவுள்ளோம்.

சிரியாவின் விமானத் தளத்தின் மீது தாக்குதல் நடத்த டொனால்ட் ட்ரம்ப் இந்த டோமஹாவ்க் ஏவுகணையைத் தான் பயன்படுத்தினார்.

மேலும், எங்களுக்கு ஆயுதங்களை வழங்க அமெரிக்கா தயாராக இருக்கிறது என்றும் ஜப்பான் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

வடகொரியா மீண்டும் அணு ஆயுத சோதனையை எந்நேரத்திலும் நடத்தலாம் மற்றும் தங்கள் மீதும் தாக்குதல் நடத்தலாம் என்பதால் தான் ஜப்பான் இதைச் செய்ய முடிவெடுத்துள்ளதாக தெரிகிறது.

ஜப்பான் பிரதமர் ஷின்ஜோ அபே மற்றும் அமெரிக்கா ஜனாதிபதி ட்ரம்ப் ஆகியோர் வட கொரியாவின் அணு ஆயுத மிரட்டல்களை எதிர்கொள்வது குறித்து ஏற்கனவே தீவிர ஆலோசனை நடத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐ.எஸ். அமைப்பினர் 31 பேர் ஈராக்கில் கொல்லப்பட்டனர்!



பாக்தாத், மே 07

ஐ.எஸ். அமைப்பினர் பிடியில் இருந்த ஈராக்கில் மேற்கு மொசூல் பகுதியை பொலிஸ் படையினர் மீட்டுள்ளனர். இந்த மோதலில் ஐ.எஸ். அமைப்பினர் 23 பேர் கொல்லப்பட்டனர்.

ஈராக்கில் ஐ.எஸ். அமைப்பினர் பிடியில் இருந்து மொசூல் நகரின் கிழக்கு பகுதியை இராணுவத்தினர் கடந்த ஜனவரி மாதம் மீட்டனர்.

அதைத் தொடர்ந்து மேற்கு பகுதியையும் ஐ.எஸ். அமைப்பினரிடம் இருந்து தங்கள் வசப்படுத்துவதற்காக இராணுவம் கடுமையாக யுத்தம் செய்து வருகிறது.

இந்த யுத்தம் தற்போது உக்கிரம் அடைந்துள்ளது. ஈராக் படைகள் தொடர்ந்து முன்னேறி வருகின்றன.

தற்போதைய நிலவரப்படி மேற்கு மொசூலில் 70 சதவீதத்துக்கும் மேற்பட்ட பகுதிகளை ராணுவம் தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து விட்டது என அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

இந்த நிலையில் அங்கு 3 கிராமங்களை ஐ.எஸ். பயங்கரவாதிகளின் பிடியில் இருந்து பொலிஸ் படை மீட்டுள்ளது.


அப்போது நடந்த மோதலில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் 23 பேர் கொல்லப்பட்டனர். இந்த தகவலை மத்திய பொலிஸ் தலைவர் சாகர் ஜாவ்தத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே அங்குள்ள ஜாஞ்ஜிலி மாவட்டத்தில் ஐ.எஸ். அமைப்பினரின் அலுவலகத்தை முற்றுகையிட்டு பொலிஸார் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் அந்த இயக்கத்தின் முக்கிய தளபதிகளில் ஒருவரான ஹசன் கோமா உள்ளிட்ட 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

காலைக்கதிர்


# தமிழகத்தில் விரைவில் சட்டப்பேரவை தேர்தல்!

## தொண்டர்களைத் தயாராகச் சொல்கிறார் ஓ.பி.எஸ்.



சென்னை, மே 07

தமிழகத்தில் சட்டப் பேரவைதேர்தல்வருவதற்கான வாய்ப்பு உள்ளது. அத் தேர் தலை சந்திக்க தொண் டர்கள் இப்போதே தயாராக வேண்டும் என்று ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க வின் இரு அணி கள் இணைப்புக்கான பேச்சு தொடங்கப்படாத நிலையில், அ.தி.மு.க. புரட்சித்தலைவி அம்மா அணியின் பொருளாளர் ஓ.பன்னீர்செல்வம், நேற்று முன்தினம் நீதிகேட்டு பய ணம் தொடங்கினார்.

காஞ்சிபுரம் கிழக்கு மாவட் டம், கொட்டிவாக்கத்தில் நேற்று முன்தினம் பயணத்தை தொடங்கிய அவர் கட்சி தொண்டர்கள் மத்தியில் உரை யாற்றும்போதே மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:-

சுமார் 74 நாள்களாக சிகிச்சை பெற்றுவந்த ஜெயலலிதா குணமடைவார் என நினைத் தோம். ஆனால், அவர் மரண மடைந்த செய்தி ஏழரை கோடி தமிழக மக்கள், உலகதமிழர்கள் மனதில் கவலையை ஏற்படுத் தியுள்ளது.

அவரைக் காப்பாற்ற முடிய வில்லையே என்ற ஏக்கம் உள் ளது. ஜெயலலிதா மர்ம மரணத்தின் முடிச்சை அவிழ்க்க வேண்டும் என்பது தான் இந்த தர்மயுத்தத்தின் நோக்கம். அதற்குத்தான் சி.பி.ஐ. விசாரணை வேண்டும் என கோரிக்கை விடுத்தோம்.

எம்.ஜி.ஆரும், ஜெயல லிதாவும் இந்தக் கட்சி தொண் டர்களின் கட்சியாக இருக்க வேண்டும் என்ற லட்சியத் துடன் இருந்தனர். இந்த இயக் கம் ஒரு குடும்பத்தின் கையில் சிக்கக்கூடாது.

தற்போது, முதல்வர் பழனிச் சாமி தடம் மாறிச் சென்று கொண்டிருக்கிறார். அவரை வருங் காலத்தில் நேர்வழிப் படுத்துவது தான் இந்த தர்ம யுத்தத்தின் நோக்கமாகும்.

இந்த பினாமி அரசின் ஆட்சி வெளிப்படையாக இருக்க வேண்டும். பொதுச் செயலாளராக இருக்கும் சசி கலா, துணை பொதுச்செயலா ளராக உள்ள தினகரன் ஆகி யோரை நீக்க வேண்டும் என கூறினோம்.

ஆனால், அவர்கள் செய லில் வெளிப்படைத்தன்மை இல்லை. அப்படியானால் எப் படி நம்புவது? மக்கள் ஏமாளி கள் இல்லை. பழனிச்சாமி தரப்பினர் ஆடும் ஓரங்க நாட கத்தில் இருந்து முழுமையாக விடுபட வேண்டும்.

ஜெயலலிதா மரணத்துக்கு நீதி விசாரணை நடத்த உத்தர விட வேண்டும். அப் போது தான் நாங்கள் நம்புவோம்.

முதல்வர் பழனிச்சாமி தரப்பி னர் தடம்மாறிச் சென்று எம்.ஜி.ஆர், ஜெயல லிதாவுக்கு துரோகம் செய்து விட்டனர். அவர்களுக்கு விடு தலை கிடையாது. இக்கட்சி ஓ.பி.எஸ்., மைத்ரேயன், பொன்னையன், கே.பி.முனுச ாமி என யார் குடும்பத்தினரி டமும் சிக்கி விடக் கூடாது. அதேபோல், யாரும் யார் வீட்டு வாசலிலும் பதவிக்காக நிற்கக் கூடாது. ஊழலில்லாமல் சமூக சேவை யில் ஈடுபடுபவர்தான் சட்டப் பேரவை உறுப்பினராக வர வேண்டும் என்பதுதான் எங் கள் லட்சியம்.

தற்போது உள்ளாட்சி தேர் தலா அல்லது சட்டப் பேரவை பொதுத் தேர்தலா எது முந்தும் என்ற பட்டிமன்றம் நடக்கிறது.

எங்களைப் பொறுத்தவரை சட்டப் பேரவை தேர்தல் முத லில் வருவதற்கான வாய்ப்பு உள்ளது. அத்தேர்தலை சந் திக்க தொண்டர்கள் இப்போதே தயாராக வேண்டும். எந்த தேர் தல் வந்தாலும் அதில் நாம் வெற்றி பெற வேண்டும் என்ற இலட்சியத்தில் உறுதியாக இருக்க வேண்டும்.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

# துடைப்பம் பிடித்தார் உ.பிரதேச முதல்வர்!



லக்னோ, மே 07

பிரதமர் மோடியின் தூய்மை இந்தியா திட்டத்தை முன் னெடுத்துச் செல்லும் வகை யில் உத்தரப்பிரதேசம் மாநில முதலமைச்சர் யோகி ஆதித் யாநாத் நேற்று துடைப்பம் பிடித்து வீதிகளைக் கூட்டி சுத்தம் செய்துள்ளார்.

உத்தரப்பிரதேசத்தில் சமீ பத்தில் ஆட்சியை கைப்பற்றிய பா.ஜ.க. சார்பில் அம்மாநில முதலமைச்சர் யோகி ஆதித் யாநாத் பொறுப்பேற்றுள்ளார்.

விவசாயிகளின் வங்கிக் கடன் தள்ளுபடி உட்பட தனது அரசின் சார்பில் பல்வேறு அதிரடித் திட்டங்களை இவர் நிறைவேற்றி வருகிறார். புதிய அறிவிப்புகளும் வெளியிடுகி றார்.

இந்நிலையில், உத்தரப் பிரதேச மாநில தலைநகரான பலூ அடார் பகுதிக்கு நேற்று காலை தனது சக அமைச்சர் களுடன் காரில் சென்ற முதல மைச்சர் யோகி ஆதித்யாநாத், பிரதமர் மோடியின் தூய்மை இந்தியா திட்டத்தை முன் னெடுத்துச் செல்லும் வகை யில் துடைப்பம் பிடித்து அங் குள்ள வீதிகளைக் கூட்டிச் சுத்தம் செய்துள்ளார்.

அத்துடன் லக்னோ நகரம் இவ்வளவு அசுத்தமாக இருப் பது ஏன்? என்று அங்கிருந்த மாநகராட்சி அதிகாரிகளிடம் அதிருப்தி தெரிவித்த யோகி ஆதித்யாநாத், நகருக்கு உட் பட்ட பொது இடங்களைத் தூய் மையாக வைத்துக் கொள்ளுங் கள் என்று அறிவுறுத்தினார்.

# 'எங்கள் மகள் நிர்பயா ஒரு தேவதை'

## பெற்றோர் கண்ணீர் பேட்டி



டில்லி, மே 07

'எங்கள் மகள் நிர்பயா ஒரு தேவதை' என்று டில்லியில் கூட்டுப் பலாத்காரம் செய் யப்பட்டு உயிரிழந்த மாணவி யின் பெற்றோர் கண்ணீர் மல்கத் தெரிவித்துள்ளனர்.

நிர்பயா பலாத்கார வழக்கில் குற்றவாளிகள் 4 பேரின் மரண தண்டனையை உச்சநீதிமன் றம் நேற்று முன்தினம் உறுதி செய்தது.

இது தொடர்பில் நிர்பயா வின் தாய் ஆஷா தேவி உணர்ச்சி பொங்க ஊடகவிய லாளர்களிடம் தெரிவித்தவை வருமாறு:-

அந்த சம்பவத்துக்குப் பிறகு, என் மகள் 'நிர்பயா' (பயமறியா தவள்) என்ற பெயரில் உலகம் அழைக்கத் தொடங்கியது.

ஒவ்வொரு நாளும் நம் பிக்கை இழந்தேன். ஆனால், மகளுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கேட்டு போராட மறுநாள் முழுப் பலத்துடன் எழுந்துவிடுவேன்.

என் மகளை தினம் தினம் நினைத்துப் பார்க்கிறேன். அவள் என்னை விட்டுச் சென்ற அடுத்த நொடியில் இருந்து நீதிமன்றம், அரசாங் கத்துடன் போராடி வருகிறேன். எவ்வளவோ நான் போராடிக் கொண்டிருக்கிறேன்.

என் குடும்பம் எந்தளவுக்கு இந்த துயரத்தை சந்தித்து வருகிறது என்பதைச் சொல்ல வார்த்தைகள் இல்லை. ஆனால், நான் நம்பிக்கையை இழக்கவில்லை.- என்று அவர் தெரிவித்துள்ளார்.

மகளை இழந்த துன்பத்தி லும், நிர்பயா ஜோதி அறக் கட்டளையை ஆஷா தேவி தொடங்கி, பலாத்காரத்தால் பாதிக்கப்படும் பெண்கள், அவர்களது குடும்பத்தினருக்கு உதவிகள் செய்து வருகிறார்.

நிர்பயாவின் தந்தை பி.என். சிங் கூறும்போது -

''என் மகள் இல்லாமல் இத்தனை ஆண்டுகளாக நான் தவித்துக் கொண்டிருக்கிறேன். தந்தை - மகள் என்ற எங்கள் பந்தம் மிகவும் சிறப்பானது.

அவளை மகன் போலவே வளர்த்தேன். அவள் அனு பவித்த வலிகள்தான், போராட வேண்டும் என்ற துணிச்சலை எனக்குக் கொடுத்துள்ளது. அவள் எங்கள் தேவதை'' என்று கண்ணீருடன் தெரிவித் துள்ளார்.

# ஆர்.கே.நகரில் தேர்தல் நடைபெற்றிருந்தால் தி.மு.க. வெற்றிபெற்றிருக்கும் – ஸ்டாலின்

ஆர்.கே.நகரில் திட்டமிட் டபடி தேர்தல் நடைபெற் றிருந்தால் தி.மு.க. வெற்றி பெற்றிருக்கும் என்று தி.மு.க. செயல் தலைவர் மு.க. ஸ்டா லின் தெரிவித்துள்ளார்.

சென்னை ஆர்.கே.நகரில் தொகுதி புதிய நிர்வாகிகள் கூட்டம் தண்டையார்பேட்டை யில் இடம்பெற்றது. அங்கு உரையாற்றும்போதே ஸ்டா லின் இவ்வாறு தெரிவித்துள் ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''ஆர்.கே.நகர் இடைத் தேர்தலில் ஓர் எளிய தொண் டரை வேட்பாளராக நிறுத்தி



தீவிரமாக தேர்தல் பணியில் ஈடுபட்டோம்.

ஆனால், ஆளுங்கட்சியின் பணப் பட்டுவாடாவை காரணம் காட்டி தேர்தலை தேர்தல் ஆணையம் ரத்து செய்துவிட் டது. திட்டமிட்டபடி தேர்தல் நடைபெற்றிருந்தால் தி.மு.க. வெற்றி பெற்றிருக்கும்.

புதிதாகப் பொறுப்பேற் றுள்ள ஆர்.கே.நகர் தொகுதி யில் உள்ள தி.மு.க. நிர்வாகிகள் கட்சிப் பணிகளில் தீவிரம் காட்ட வேண்டும். கட்சியின் கொள்கைகளை மக்களிடம் கொண்டுசெல்லவேண்டும்''. -என்று அவர் தெரிவித்துள் ளார்.

# கிரிக்கெட் செயற்குழுவிலிருந்து அரவிந்த டி சில்வா விலகினார்!



கொழும்பு, மே 07

கடந்த சில வருடங்களாக இலங்கை கிரிக்கெட் சபையின் செயற்குழு மற்றும் ஆலோசனை சபையில் சேவையாற்றி வந்த இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அரவிந்த டி சில்வா தனது பணிகளிலிருந்து விலகியுள்ளார்.

தற்பொழுது 51 வயதான அரவிந்த டி சில்வா, 2016 ஆம் ஆண்டிலிருந்து கிரிக்கெட் செயற்குழுவுக்குத் தலைமை தாங்கியதுடன், இலங்கை கிரிக்கெட் சபையினால் அறிமுகப்படுத்தப்பட்ட நவீன முறை பயிற்சியளிக்கும் கட்டமைப்பை உருவாக்குவதிலும் பெரும் பங்காற்றியிருந்தார்.

அவருடைய கிரிக்கெட் குறித்த தொலைநோக்கு பார்வையால், கடந்த வருடம் ஆஸ்திரேலிய அணியுடனான மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரை இலங்கை அணி 3-0 என 'வெள்ளையடிப்பு' செய்தமை உள்ளடங்கலாக, அணியை பல்வேறு விதத்தில் தரமுயர்த்தும் விதத்தில் செயற்பட்டார்.

அத்துடன், அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸும் வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த வெற்றியில் தனிப்பட்ட முறையில் தனது பங்களிப்பை வழங்கியிருந்தார்.

அண்மைய காலங்களில் பிரதான செயற் திட்டங்கள் குறித்து முடிவுகள் எட்டப்பட்ட நேரங்களில், அரவிந்த புறக்கணிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இது தவிர, அவர் கிரிக்கெட் செயற்பாட்டுக் குழுவின் பெரும் மதிப்பு மிக்க தலைமை பதவியை வகித்து, சிறப்பாக வழிநடத்தியிருந்தார். எனினும், அக்குழுவில் இடம்பெற்றிருந்த ஏனைய சில முன்னணி அதிகாரிகள், தொடர்ந்தும் கிரிக்கெட் செயற்குழுவின் வழமையான செயற்பாட்டு கடமைகள் மற்றும் உத்தியோகபூர்வ சந்திப்புக்கள் ஆகியவற்றை புறக்கணித்திருந்தனர்.

கடந்த 2003 ஆம் ஆண்டு கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்ற அரவிந்த டி சில்வா, அதிலிருந்து இலங்கை கிரிக்கெட் சபையின் பல்வேறு விதமான செயற்பாடுகளில் பங்கெடுத்திருந்தார். முக்கியமாக, தேர்வாளர்களின் தலைமைப் பொறுப்பு மற்றும் கிரிக்கெட் செயற்பாட்டுக் குழுத் தலைவர் போன்ற பதவிகளை வகித்திருந்தார்.

அத்துடன், அவருடைய பரபரப்பான சொந்த வர்த்தக நடவடிக்கைகளுக்கு மத்தியில், தனது நேரத்தை இலங்கை கிரிக்கெட் வளர்ச்சிக்காக வழங்கியிருந்தார். இவை அனைத்திற்கும் மேலாக, சர்வதேச கிரிக்கெட் சபையின் கிரிக்கெட் செயற்குழுவுக்கும் தனது அளப்பரிய சேவைகளை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை கிரிக்கெட் தெரிவாளர் குழுவில் 2009 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை அரவிந்த டி சில்வா தலைமை வகித்த பொழுது, முன்னாள் கிரிக்கெட் ஜாம்பவான் குமார் சங்கக்கார அணித் தலைவராகச் செயற்பட்டிருந்தார். அவருடைய நேர்மை மற்றும் பங்களிப்பு போன்ற காரணங்களால் அப்பதவி தொடர்ந்தும் அவருக்கு வழங்கப்பட்டது.

# சந்தீப் ஷர்மா வேகத்தில் வீழ்ந்தது பெங்களூர் அணி!



பெங்களூர், மே 07

10 ஆவது ஐ.பி.எல் தொடரின் 43 ஆவது லீக் போட்டியில் மெக்ஸ்வெல் தலைமையிலான கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 19 ஓட்டங்களினால் 'திரில்' வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

பெங்களூர் ரோயல் செலஞ்சஸ் மற்றும் கிங்ஸ் லெவன் பஞ்சாப் ஆகிய அணிகளுக்கிடையில் இடம்பெற்ற இந்தப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பெங்களூர் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களம் இறங்கிய கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் ஆரம்பத் துடுப் பாட்ட வீரர்களாக மார்டின் குப்டில் மற்றும் ஹசிம் அம்லா ஆகியோர் களம் இறங்கினர்.

பெரிதும் எதிர்பார்க் கப்பட்ட அம்லா (1 ஓட்டம்), குப்டில் (9 ஓட்டங்கள்) ஆகியோர் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளியேறி ஏமாற்றமளித்தனர்.

இதனைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடக்களம் இறங்கிய ஷோன் மார்ஷ் (20 ஓட்டங்கள்), வோரா (25 ஓட்டங்கள்), சஹா (21 ஓட் டங்கள்) ஆகியோர் ஓரளவு நம்பிக்கையளித்தனர்.

அணித் தலைவர் மெக்ஸ்வெல் 6 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றினாலும், அடுத்து வந்த அக்சர் பட்டேல் அதிரடியாக 17 பந்துகளில் 38 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

இதன் காரணமாக கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து 139 என்ற வெற்றி இலக்கினை நோக்கித் துடுப்பெடுத்தாட களம் இறங்கிய பெங்களூர் அணியின் துவக்க வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். கெயில் ஓட்டங்கள் எதுவும் பெறாத நிலையிலும், விராட் கோஹ்லி (6 ஓட்டங்கள்), டிவிலி யர்ஸ் (10 ஓட்டங்கள்), யாதவ் (6 ஓட்டங்கள்), வொட்சன் (3 ஓட்டங்கள்) ஆகியோரும் குறைந்த ஓட்டங்களுடன் அடுத்தடுத்து ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர்.

முக்கியமான அதிரடி ஆட்டக்காரர்கள் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததன் காரணமாக அவ்வணி பெரிதும் அழுத்தத்தை எதிர்கொண்டது. எனினும், பெங்களூர் சார்பில் மந்தீப் சிங் அதிரடியாக விளையாடி 46 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார்.

இதனைத் தொடர்ந்து 19 ஓவர்கள் முடிவில் 119 ஓட்டங்களுக்கு பெங்களூர் அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதனால் பஞ்சாப் அணி 19 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. பஞ்சாப் அணி சார்பில் ஏ.ஆர். படேல் மூன்று விக்கெட்டுக்களையும், சந்தீப் ஷர்மா 3 விக்கெட்களை யும், எம்.எம். ஷர்மா மற்றும் ஜி.ஜெ. மெக்ஸ்வெல் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இந்த வெற்றி குறித்து பஞ்சாப் அணியின் தலைவர் மெக்ஸ்வெல் தெரிவித்தவை வருமாறு:-

நாங்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினோம். அக்ஷர் பட்டேல் கடைசிக் கட்டத்தில் ஓட்டங்களைக் குவித்து நல்ல 'ஸ்கோரை' கொடுத்தார்.

எங்களது பந்துவீச்சாளர்கள் சிறப்பாகச் செயல்பட்டனர். சந்தீப்சர்மா அற்புதமாக பந்துவீசினார். அவர் விராட்கோஹ்லி, கிறிஸ் கெய்ல், டி வில்லியர்ஸ் ஆகியோரின் விக்கெட்டுகளைக் கைப் பற்றியது சிறந்த செயற்பாடு.

நாங்கள் இன்னும் வலுவான ஆட்டத்தை வெளிபடுத்த விரும்புகிறோம்.- என்றும் தெரிவித்துள்ளார்.

போட்டியில் ஏற்பட்ட தோல்வி தொடர்பில் பெங்களூர் அணித் தலைவர் விராட்கோஹ்லி தெரிவித்தவை வருமாறு:-

இதுபோன்ற ஆட்டத்தை என்ன சொல்வது என்று தெரியவில்லை. எங்களது துடுப்பாட்டம் எடுபடவில்லை. மொத்த அணியும் நன்றாக விளையாட முயற்சித்தும் பெரிய 'ஸ்கோரை' எடுக்க முடியவில்லை. விக்கெட்டுகள் சீக்கிரமாகவே வீழ்ந்து விடுகின்றன.

கடந்த ஆண்டு போலவே இந்த ஆண்டும் போட்டிக்காகத் தயார் ஆனோம். ஆனால் களத்தில் எங்கள் எண்ணங்களுக்கு எதிராக அமைந்துவிட்டது என்று தெரிவித்துள்ளார்.


# பெண்களுக்கான உலகக்கிண்ணப் போட்டிக்கு ஐ.சி.சி. அறிவித்துள்ள சலுகை!

துபாய், மே 07

பெண்களுக்கான உலகக்கிண்ணப் போட்டி 11ஆவது தடவையாக இடம்பெறவுள்ள நிலையில், ஐ.சி.சி. வழங்கிவந்த சன்மானத்தொகையை அதிகரிப்பதாக அறிவித்துள்ளது.

பெண்களுக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 11ஆவது முறையாக எதிர்வரும் ஜூன் மாதம் 24ஆம் திகதி பிரிட்டனில் தொடங்கவுள்ளது.

இந்த நிலையில், இவ்வளவு காலமும் வழங்கப்பட்டு வந்த 3.04 கோடி ரூபா பரிசுத் தொகையை 10 மடங்கு அதிகரித்து, இம்முறை 30.40 கோடியாக சர்வதேச கிரிக்கெட் பேரவையான ஐ.சி.சி. அறிவித்துள்ளது.



இம்முறை இந்த உலகக் கிண்ணப் போட்டியில் நடப்பு சம்பியன் ஆஸ்திரேலியா, இலங்கை, இங்கிலாந்து, இந்தியா, நியூஸிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள், தென்னாபிரிக்கா மற்றும் பாகிஸ்தான் உள்ளிட்ட 8 நாடுகள் பங்கு பற்றவுள்ளன.

மேலும், இந்த பரிசுத் தொகை அதிகரிப்பானது பெண்கள் கிரிக்கெட்டுக்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அத்தோடு முதல்முறையாக பெண்களுக்கான உலகக் கிண்ணப் போட்டிகளை நேரடி ஒளி பரப்புச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாக ஐ.சி.சியின் தலைமை நிறைவேற்று அதிகாரி டேவிட் ரிச்சர்ட்சன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 9 மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் நடைபெற்ற 33 ஆவது முதலமைச்சர்கள் மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின்தேசிய அபிவிருத்தி இலக்குகளை எட்டுவதற்கு மாகாண சபைச்செயற்பாடுகள் முறைப்படியாக இருக்க வேண்டியதுடன், அரசாங்கத்துக்கும் மாகாண சபைகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பும் சீர் செய்யப்படவேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வினைத்திறனான மக்கள் சேவையை வழங்கமுடியாதிருப்பதனால், மக்கள் மிகுந்த அழுத்தத்துக்கு உள்ளாவதனால் மக்கள் பிரதிநிதிகளாக பொறுப்புக்களை நிறைவேற்றுவது அனைவரினதும் கடப்பாடாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசமைப்பு, சட்டம் மற்றும் அதிகாரம் எப்படியிருந்தாலும், அவற்றை அமுல்படுத்துவோரின் நடத்தைப்பாங்குக்கமையவே செயற்றிறன் இருக்குமெனத் தெரிவித்த ஜனாதிபதி, அதிகாரத்தைப் பயன்படுத்துவதில் நாம் எவ்வளவு தூரம் முன்னேறியுள்ளோம் என்பதனைத் தெளிவுபடுத்தக்கூடிய அண்மைக்கால உதாரணமாக மீதொட்டமுல்ல குப்பை மேட்டு அனர்த்தத்தைக் குறிப்பிடலாம் எனவும் தெரிவித்தார்.

வடமத்திய மாகாண முதலமைச்சர் பேஷல ஜயரத்ன, ஜனாதிபதிக்கு நினைவுப்பரிசு ஒன்றை வழங்கினார்.

34 ஆவது மாநாடு நடைபெறவுள்ள வடமேல் மாகாணத்துக்கு முதலமைச்சர்கள் மாநாட்டின் தலைமைத்துவம் வழங்கப்பட்டது. தற்போது தலைமை வகிக்கும் வடமத்திய மாகாண முதலமைச்சர் பேஷல ஜயரத்ன ஜனாதிபதியின் முன்னிலையில் வடமேல் மாகாண முதலமைச்சர் தர்மசிறி தசநாயக்காவிடம் தலைமைத்துவத்தை ஒப்படைத்தார்.

முதலமைச்சர்கள், விவசாய அமைச்சர் துமிந்த திசாநாயக்கா, வடமத்திய மாகாண ஆளுநர் பீ.பி.திசாநாயக்கா, பிரதமசெயலாளர்கள் உள்ளிட்ட அரச அலுவலர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (இ-ச)

## மீண்டும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீனாவில் நடைபெறும் மாநாடு ஒன்றில் பங்கேற்பதற்காக பிரதமர் சீனா செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது சீனாவின் ஜனாதிபதி சீ ஜின்பின் உள்ளிட்ட அந்நாட்டு அரச முக்கியஸ்தர்கள் மற்றும் வர்த்தக பிரமுகர்களையும் பிரதமர் சந்திக்கவுள்ளார்.

சீனாவால் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தித்திட்டங்கள் குறித்து இதன்போது பிரதமர் அங்கு அரசின் உயர்மட்டப்பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளுடன் விரிவான கலந்துரையாடல்களை மேற்கொள்ளவார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த மாதம், இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தார். அதற்கு முன்னதாக சீனாவுக்கு விஜயம் செய்திருந்தார். இந்த நிலையில், மீண்டும் சீனாவுக்கு அவர் விஜயம் செய்வது குறித்து இராஜதந்திர வட்டாரங்களில் வெவ்வேறு விதமாகப் பேசப்படுகிறது. (இ)

## சந்திரிகா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீதான விவாதத்தை நடத்திக் கருத்துக்களை வெளிப்படுத்தும்.

அந்தக் கருத்துக்களை உள்வாங்கி அதனடிப்படையில் அரசமைப்பு நகல்திட்டத்தை அல்லது வரைவை உடனடியாகத் தயாரித்து வழங்குவதற்குரிய சட்ட நிபுணர்கள், வள ஆளணியினர் ஏற்கனவே தயாராக இருக்கின்றனர் என்று கூறப்பட்டது.

முன்னைய சந்திரிகா அரசினால் 2000 ஆம் ஆண்டில் தீர்வுத்திட்டமாக முன்வைக்கப்பட்ட அரசமைப்பு நகலையே, மேற்படி சட்டநிபுணர்கள் மற்றும் வள ஆளணியினர் தங்களுடைய தயாரிப்புக்காக அடிப்படைக் கட்டமைப்பாகப் பயன்படுத்துவர் என்று கூறப்பட்டது.

சந்திரிகா கால யோசனைத் திட்டத்துக்கு மாற்றான விதத்தில் தற்போதைய இடைக்கால அறிக்கையிலும் பின்னர் அரசமைப்புக் கவுன்ஸிலாக நாடாளுமன்றம் கூடும்போது, அங்கு மேற்கொள்ளப்படும் தீர்மானங்களிலும் வெளிப்படுத்தப்படும் கருத்துக்கள் உள்வாங்கப்பட்டு, அவை மேற்படி சந்திரிகா கால யோசனைத்திட்டமாக இருக்கும் அடிப்படைக் கட்டமைப்பில் சேர்த்துக் கொள்ளப்படும் என்றும் கூறப்பட்டது.

"சந்திரிகா கால தீர்வுத் திட்ட யோசனையே புதிய மெருகு மற்றும் மாற்றங்களுடன் புதிய அரசமைப்பாக வரும் என்று நம்பலாம்." - என அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ)

## துணைவேந்தர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிக்கவர்கள் பொறுப்புக்களில் அமர்கின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் 140 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று சனிக்கிழமை இடம் பெற்றது. அங்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே யாழ். ஆயர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து உரையாற்றிய ஆயர்-

ஒவ்வொரு பாடசாலைகளும் ஒவ்வொரு தனித்துவத்துடன் இயங்கவேண்டும். இருக்கின்ற வளங்களை வைத்து அவை முன்னேறவேண்டும். மாணவர்கள் கல்வி கற்பதற்கு முன்னர் சிறந்த பண்புகளைப் பழகவேண்டும்.

ஆசிரியர்களின் பண்புகளே மாணவர்களுக்குள் விதைக்கப்படுகின்றன. அதனால் அதிபர், ஆசிரியர்கள் நல்ல மாணவர்களை உருவாக்கவேண்டும். இது கடினமான பணியாகும்.

நாம் இப்போது புத்திஜீவிகளை இழந்துகொண்டிருக்கின்றோம். புத்திசாதுரியமானவர்கள் அரசியல் பின்னணியுடன் செயற்படுகின்றனர்.

தெற்கில் இருந்துதான் எமக்குப் பின்னடைவுகள் வருகின்றன என்றில்லை. நாங்களே எமக்குக் குழி தோண்டுகின்றோம். யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற துணைவேந்தர் நியமனம் இதை எடுத்துக் காட்டுகின்றது.

பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்கள் தொழில்வாய்ப்புக்காக போராடுகின்றனர். தாங்கள் சுயதொழில் செய்து முன்னேற முடியாதா என்பதைப் போராட்டத்தில் ஈடுபடும் பட்டதாரிகள் சிந்திக்க வேண்டும். தாங்களாகவே எந்தவொரு செயலையோ, தொழிலையோ செய்யும் பண்பைப் பல்கலைக்கழகம் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கவில்லை. - என்றார். (ம)

## விந்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றார். இந்த வழக்கில் ஒன்பது சந் தேக நபர்களுக்கு எதிராகக் கூட்டுவன்புணர்வு, படுகொலை, சட்டவிரோதமாக ஒன்று கூடியமை உட்பட 41 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இந்தவிடயத்தைவிசாரணை செய்வதற்கு 'ட்ரயல் அட்பார்' நீதிமன்றையும் அதற்கானதலைமை நீதிபதி உட்பட ஏனைய நீதிபதிகளையும் நியமிக்குமாறு சட்டமா அதிபர், பிரதமநீதியரசரிடம் விண்ணப்பித்துள்ளார். (உ)

# இனியும் முரண்பாடுகள் இல்லாத தமிழ்த் தேசிய ஒற்றுமை அவசியம்

## வலியுறுத்துகிறார் அவைத் தலைவர் சிவஞானம்

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ் இனத்திற்குள் முரண்பாடுகள் இல்லாத தமிழ்த் தேசிய ஒன்றுமையே தற்போது அவசியமாக உள்ளது என வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் முன்னாள் தலைவர் அமரர் சிறி சபாரத்தினத்தின் 31 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று உரும்பிராயில் இடம்பெற்றது. அங்கு கலந்துகொண்டு நினைவுரை ஆற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.


மேலும் அவர் தெரிவிக்கையில்-

சிறி சபாரத்தினத்திற்கும் எனக்கும் இடையில் நல்ல உறவு இருந்தது. அந்த உறவானது தமிழரசுக் கட்சி என்ற கட்டமைப்பில் இருந்ததாலேயே ஏற்பட்டிருந்தது. பின்னர் விடுதலைப் போராட்டம் ஏற்பட்டபோது கூட அவருக்கும் எனக்கும் இடையில் அந்த உறவு நீடித்தது.

நான் தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளனாக இருந்தேன். அப்படி இருந்தும், சிறிசபாரத்தினத்துடன் எனக்கு இருந்த உறவு தொடர்பாக என்மீது பல விமர்சனங்கள் எழுந்தன. ஆனாலும் நாங்கள் சரியான பாதையில் பயணித்து வந்தோம்.

இவ்வாறான நிலையில்தான் முரண்பாடுகளும் மோதல்களும் ஏற்பட்டிருந்தன. அவை எல்லாம் கடந்த காலங்களில் நடைபெற்றவையாக இருக்கட்டும். தற்போது, முரண்பாடுகள் இல்லாத தமிழ்த் தேசிய ஒற்றுமையே எங்களுக்குத் தேவை.

அவ்வாறான ஒற்றுமை உருவாகவேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன். இனிவரும் காலங்களில் நாம் எல்லோரும் ஒருமித்துப் பயணிப்போம். - என்றார். (மற்றொரு செய்தி 24 ஆம் பக்கத்தில்) (ம)



ரெலோவின் முன்னாள் தலைவர் சிறி சபாரத்தினத்தின் 31 ஆவது நினைவு தினம் நேற்று உரும்பிராயில் நடைபெற்றபோது.....

## ஓட்டோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெட்டுக் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

மானிப்பாய் - சுதுமலை அம்மன் கோயில் வயல்வெளியில் நேற்று பிற்பகல் வேளை இடம்பெற்ற இச்சம்பவத்தில் உடுவிலைச் சேர்ந்த யூட் என்ற இளைஞரே படுகாயமடைந்தார்.

மரவள்ளித் தோட்டமொன்றுக்குள் வைத்து இவர் மீது வாள்வெட்டு இடம்பெற்றுள்ளது. மனிதநேயமற்ற முறையில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

வாள்வெட்டுக்கு இலக்கான மேற்படி இளைஞன் சுதுமலை அம்மன் கோயில் வீதி வழியாக தனது ஓட்டோவைச் செலுத்திச் சென்றார். அப்போது அவரைப் பின்தொடர்ந்து இரு மோட்டார் சைக்கிளில் வந்த ஐந்து பேர் திடீரென ஓட்டோவை மறித்து வாள்வெட்டைத் தொடங்கினர்.

முதலில் ஓட்டோ மீது சரமாரியாக வாள்வெட்டுக்கள் இடம்பெற்றன. அப்போது அதன் சாரதியான இளைஞன் வெளியே பாய்ந்து ஓடத் தொடங்கினார். அந்த ஐவரும் இணைந்து அவரைத் துரத்திச் சென்றனர்.

வயல் வெளியூடாக ஓடிச் சென்ற அவர் அங்கிருந்த மரவள்ளித் தோட்டம் ஒன்றுக்குள் புகுந்துகொண்டார். துரத்திச் சென்றவர்கள் அங்குவைத்து அவரைக் கண்டபடி வாள்களால் வெட்டினர். அவரது இரு கைகளையும் இரு கால்களையும் துண்டாடுவதே வெட்டியவர்களின் நோக்கமாக இருக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

வாள்வெட்டை மேற்கொண்டவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றனர். இதன்போது ஒரு மோட்டார் சைக்கிளில் மூவரும் மற்றைய மோட்டார் சைக்கிளில் இருவரும் சென்றனர் என சம்பவத்தைக் கண்டவர்கள் தெரிவித்தனர்.

வாள்வெட்டுக்கு இலக்கான நபர் அவலக்குரல் எழுப்பியதை அடுத்து தோட்ட வேலையில் ஈடுபட்ட ஒருவர் அதை அவதானித்து ஏனையவர்களுக்கு தகவல் கொடுத்தார் எனக் கூறப்படுகின்றது. சம்பவ இடத்திற்குச் சென்ற மானிப்பாய் பொலிஸார் அவரை தமது வாகனத்தில் ஏற்றிச் சென்று யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்ப்பித்தனர்.

வாள்வெட்டுக்கு இலக்கான இளைஞன் உடுவிலில் உள்ள தமது வீட்டில் இருந்தார் எனவும் தொலைபேசி அழைப்பொன்றுக்கு அமையவே ஓட்டோவில் வெளியே புறப்பட்டார் எனவும் அவரது தந்தை கூறினார்.

இதேவேளை, வாள்வெட்டுக் கும்பல் தொடர்பான பதிவுகள் அங்குள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமராவில் பதிவாகியிருந்தன என்றும் அதன் காட்சிகளைப் பொலிஸார் பெற்றுச்சென்றனர் எனவும் கூறப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## ஊடகவியலாளர் சந்திப்பு

யாழ்ப்பாணம், மே 07

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ள 'பனங்காட்டில் புத்தி கூர்மை' என்னும் புதிய தொழில் நுட்பக் கண்காட்சி தொடர்பான ஊடகவியலாளர்களுடனான கலந்துரையாடல் எதிர்வரும் 12 ஆம் திகதி யாழ். 6 ஆவது சமிக்ஞைப் படைப் பிரிவில் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 17, 18 ஆம் திகதிகளில் கண்காட்சி இடம் பெறவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ஐ)

# முள்ளிக்குளம் மக்களின் வீடுகள் இன்னும் 6 மாதங்களில் விடுவிப்பு!

### கடற்படையினரின் குடும்பங்கள் வெளியேறும் என்கிறார் சாள்ஸ் எம்.பி.

மன்னார், மே 07

மன்னார் முள்ளிக்குளம் மக்களின் காணியில் இருக்கும் வீடுகளில் குடியிருக்கும் கடற்படையினரின் குடும்பங்கள் ஆறு மாதங்களுக்குள் வெளியேறிவிடுவர். அதுவரைக்கும் ஒரு குழு முன்னேற்பாடுகளை மேற்கொண்டு வரும். அத்துடன் முள்ளிக்குளம் மக்களுக்கு முதலில் ஐம்பது தற்காலிகக் கொட்டகைகள் அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

பதினொரு வருடங்களுக்கு பின்பு தங்கள் சொந்த கிராமத்துக்கு திரும்பியுள்ளனர்.

இந்த நிலையில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

2007 ஆம் ஆண்டு வலுக் கட்டாயமாக முள்ளிக்குளம் மக்களை குறுகிய காலத்தில் மீள்குடியேற்றுவோம் என்று தெரிவித்து இராணுவம் வெளியேற்றியிருந்தது. இதனால் இவர்கள் தங்கள் உறவினர்கள் வீடுகளிலும் அரசால் காண்பிக்கப்பட்ட ஒரு காட்டுப் பிரதேசத்திலும் வாழ்ந்து வந்தனர்.

பின்னர் புதிய அரசு பதவிக்கு வந்த பின்பு தங்கள் சொந்த இடத்துக்குச் செல்வோம் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது. இதன் அடிப்படையில் இவர்கள் இரண்டு வருடங்கள் பொறுத்துப் பார்த்தார்கள். ஆனால் இவர்களின் நிலம் ஒப்படைக்கப்படவில்லை.

இதைத் தொடர்ந்து இந்த மக்கள் 38 தினங்களாக கவனவீர்ப்புப் போராட்டத்தைத் தங்கள் சொந்த நிலத்தில் - கடற்படை முகாமுக்கு முன்பாக- நடத்தினர்.

இது விடயமாக நான் ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியிருந்தேன். அப்பொழுது அவர் மீள்குடியேற்ற அமைச்சர் மற்றும் கடற்படை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தும்படி பணித்திருந்தார்.

இதனடிப்படையில் இரண்டு பேச்சுகள் பாதுகாப்பு அமைச்சின் செயலகத்தில் இடம்பெற்றன. இதில் முதலாவது பேச்சு எங்கள் கட்சியின் தலைவர் சம்பந்தன் ஐயாவின் தலைமையில் நடைபெற்றது. இரண்டாவது பேச்சு மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் தலைமையில் பாதுகாப்பு அமைச்சின் செயலகத்தில் இடம்பெற்றது.

இரண்டு கூட்டங்களிலும் நான் முள்ளிக்குளம் மக்களின் நிலைமைகளை விரிவாக எடுத்துக் கூறினேன். அப்பொழுது கடற்படை தளபதி உறுதியளித்திருந்தார். விரைவில் நான் முள்ளிக்குளத்துக்கு நேரடியாக வருகிறேன் என்று தெரிவித்திருந்தார். இதற்கமைய முள்ளிக்குளம் கடற்படை தலைமைச் செயலகத்தில் உயர்மட்டக் கலந்துரையாடல் ஒன்றுக்கு வந்திருந்தார்.

அப்போது நாங்கள் எங்கள் கோரிக்கைகளை மிகவும் வலுவாக முன்வைத்திருந்தோம். அப்பொழுது கடற்படை தளபதி மக்களின் நிலங்களை காண்பிக்கும்படி எங்களை வேண்டியிருந்தார். அப்பொழுது மக்களுடன் அவர்கள் வாழ்ந்த இடங்களுக்கு நாங்கள் சென்று காண்பித்தபோது கடற்படை தளபதி அந்த நேரத்திலேயே முள்ளிக்குளம் மக்களை இவ்விடத்துக்கு வந்து மீள்குடியேறுமாறு தெரிவித்தார்.

அதே நேரத்தில் இம் மக்கள் வாழ்ந்த பகுதியில் 27 வீடுகளில் கடற்படையினரின் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. அந்த வீடுகள் இருக்கும் இடங்களை மட்டும் தாங்கள் ஆறு மாத காலத்துக்கு பின்பு விடுவிப்பதாகவும் ஆலயம் பாடசாலை உட்பட ஏனைய விவசாய நிலங்கள் அனைத்தையும் உடன் விடுவிப்பதாகத் தெரிவித்தார். -என்றார். (ஐ-112)

## இராணுவத்தின் வெசாக் நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 07

இலங்கை இராணுவத்தின் ஏற்பாட்டில் வெசாக் தின நிகழ்வுகள் எதிர்வரும் 10ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை யாழ். பொது நூலகத்தின் அருகிலுள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளன.

வெசாக் தின அலங்காரங்கள், பக்திப் பாடல்களுடன் வெசாக் தினம் கொண்டாடப்படவுள்ளது. (ஐ)

# விளையாட்டுக் கழகங்களுக்கு உபகரண கொள்வனவுக்கு நிதி

### வடமாகாண உறுப்பினர் விந்தன் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், மே 07

வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் கே.என். விந்தன் கனகரத்தினம் 2017 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி ஒதுக்கீட்டின் மூலம், தெரிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக ஒரு லட்சத்து 15 ஆயிரத்து 500 ரூபாவை ஒதுக்கியுள்ளார்.



வேலணை ஐயனார் விளையாட்டுக் கழகத்துக்கு 30 ஆயிரம் ரூபாவும், நெடுந்தீவு சென். பற்றிமா விளையாட்டுக் கழகத்துக்கு 30 ஆயிரம் ரூபாவும், ஊர்காவற்றுறை தம்பாட்டி காந்திஜீ சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்துக்கு 30 ஆயிரம் ரூபாவும், யாழ். கன்னியர் மட வீதி பட்டப்பிளை விளையாட்டுக்கழகத்துக்கு 25 ஆயிரத்து ஐந்நூறு ரூபாவும் ஒதுக்கியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இந்த விளையாட்டுக் கழகங்களின் நிர்வாகத்தினர் விடுத்த கோரிக்கைக்கு அமைய இவை வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பண்டைய ஓலைச்சுவடிகளை பாதுகாக்க முறையான திட்டம்!

### நடவடிக்கை எடுத்துள்ளார் ஜனாதிபதி

நாடு முழுவதிலும் உள்ள விகாரைகளில் காணப்படும் பண்டைய ஓலைச்சுவடிகளைப் பாதுகாப்பதற்கு முறையான செயற்திட்டத்தை உருவாக்குவது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது தொடர்பில ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் அரசால் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் செயற்திட்டங்கள், எதிர்காலத் திட்டங்கள், புதிய கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் உள்ளடங்கிய எழுத்து மூலமான அறிக்கை ஒன்றை ஒரு வாரத்துக்குள் தனக்குச் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி இதன்போது அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

குறித்த ஒரு சமூகம் அல்லது கலாசாரத்தைப் பின்பற்றுபவர்களிடம் காணப்படும் அறிவுத் திறமை மற்றும் பாரம்பரிய ஞானம் என்பன அந்தச் சமூகத்தில் காணப்படும் ஆவணங்களின் ஊடாகவே எதிர்காலச் சமூகத்துக்குப் போஷிக்கப்படுகின்றது. பண்டைய இலங்கையின் பிரதான எழுத்து ஊடகமாகக் காணப்பட்ட ஓலைச் சுவடிகளிலேயே ஆயிரக்கணக்கான வருட காலமாக இலங்கையர்கள் தமது அனுபவங்கள் மற்றும் ஆதாரங்களின் ஊடாகப் பெற்றுக்கொண்ட பாரம்பரிய ஞானம் குவிந்து காணப்படுகிறது.



எனவே, இந்த ஆவணங்களை வரலாற்றுரீதியாக எமக்குக் கிடைத்த பெரும் சொத்தாகவே நாம் கருதவேண்டும்.

விகாரைகளில் போலவே பாரம்பரிய சுதேச மருத்துவர்களிடம் காணப்படும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சகல ஓலைச்சுவடிகளையும் அதே இடங்களிலேயே எதிர்கால சந்ததியினரின் உபயோகத்துக்காகப் பாதுகாப்பதற்கு விரிவான செயற்திட்டத்தின் தேவை. -என்றார். (எ)

# இந்திய ஆசிரியர்கள் வரவழைப்புக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டனம்

ஊவா மாகாணத்தில் நிலவும் க.பொ.த. உயர்தர விஞ்ஞான மற்றும் கணிதப் பிரிவுகளுக்கான ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப இந்திய ஆசிரியர்களை வரவழைக்கும் நடவடிக்கையை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இதேவேளை, ஊவா மாகாணத்தில் உயர்தர விஞ்ஞான மற்றும் கணிதப் பிரிவு மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு தாம் தயாராகவுள்ளனர் என்று, அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் தெரிவித்தனர்.

ஊவா மாகாணத்தில் நிலவும் உயர்தர விஞ்ஞான மற்றும் கணிதப் பிரிவு களுக்கான ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு, இந்திய ஆசிரியர்களை வரவழைக்கவுள்ளனர் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.இராதாகிருஷ்ணன் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, வேலை வாய்ப்புக் கோரி வடக்கு, கிழக்கில் தொடர்ச்சியாக் கிரகத்தில் ஈடுபட்டுள்ள வேலையற்ற பட்டதாரிகளில், விஞ்ஞான, கணிதப் பட்டதாரிகளும் அடங்குகின்றனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஊவா மாகாணத்தில் பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரியில் மாத்திரமே விஞ்ஞான, கணிதப் பிரிவு இயங்குவதுடன், அங்கும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது.

இந்த நிலையில், வேறு மாகாணங்களுக்குச் சென்று உயர் தரத்தில் கணித, விஞ்ஞானப் பிரிவில் கல்வியைத் தொடர முடியாமல், ஊவா மாகாண மாணவர்கள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர்.

எவ்வாறாயினும், இந்தியாவில் இருந்து ஆசிரியர்களை அழைத்துவரும் பட்சத்தில் அவர்களுக்கு மேலதிக பயிற்சியளிக்க வேண்டும் என்று ஊவா கல்வி அபிவிருத்திச் சங்கம் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் இந்தச் செயற்பாட்டுக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டனம் வெளியிட்டுள்ளது. (ஐ)

## சிறப்பு வயலின் இசை விருந்து

நல்லூர் இளங் கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் வயலின் இசை விருந்து இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு சட்டநாதர் கோயில் வீதியில் அமைந்துள்ள மன்றக் கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வயலின் - தந்தி வாத்திய சுருதி சிரோன்மணி ஏ.ஜி.ஏ. ஞானசுந்தரம், வயலின் வித்துவான் எம். விஜயகணேஷ்.

மிருதங்கம் - தந்தி வாத்திய லய சுருதி சிரோன்மணி ஏ. சோமசுந்தரதேசிகர்.

கெஞ்சிரா - புவகலாபாரதி நற்குணம் மருத்துவர் எஸ். சங்கர். (ஐ)

## முதலமைச்சர்கள் மாநாட்டில் விக்னேஸ்வரனும்...!







ஹபரணை சினமன் ஹோட்டலில் நேற்றுக் காலை முதலமைச்சர்கள் மாநாடு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்றது. 33 ஆவது முதலமைச்சர்கள் மாநாட்டில் வடமாகாண முத லைமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனும் கலந்து கொண்டார்.

மாகாணசபைகள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகள் குறித்து இந்த மாநாட்டில் கலந்துரையாடப்பட்டது. (இ)

# அமைச்சர்களுக்கு வாகன இறக்குமதி; 33 கோடி ரூபா ஒதுக்கீடு

### நாடாளுமன்றத்தில் பிரேரணை சமர்ப்பிப்பு

ஆறு அமைச்சர்கள், ஆளுநர் மற்றும் பிரதமரின் செயலாளர் ஆகியோருக்கு புதிய வாகனங்களை இறக்குமதி செய்ய 33 கோடி ரூபா குறை நிரப்பு பிரேரணை ஒன்று ஆளும் கட்சியின் கொறடா கயந்த கருணாதிலக்கவினால் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசஅதிகாரிஒருவரின்வெளிநாட்டு பயணத்திற்காக 4 கோடி ரூபாவும் அமைச்சர் ஒருவரின் வீட்டைப் புதுப்பிக்க ஒரு கோடி ரூபாவும் இந்தக்குறைநிரப்புபிரேரணைமூலம்ஒதுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் தலதா அத்துக்கோரளவுக்கு 4கோடி 30 லட்சம் ரூபா, அமைச்சர் பைஸர் முஸ்தபாவுக்கு 4கோடி 20 லட்சம் ரூபா, அமைச்சர் மனோ கணேசனுக்கு 4கோடி 30 லட்சம் ரூபாவும் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

அத்துடன், இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளேவுக்கு 4கோடி 37 லட்சம் ரூபா, இராஜாங்க அமைச்சர் திலிப்வெதஆராச்சிக்கு 4 கோடி 30 லட்சம் ரூபா, இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டாரவுக்கு 2கோடி 90 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

மேலும், கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்னாண்டோவுக்கு 4கோடி 30 லட்சம் ரூபா, பிரதமரின் நாடாளுமன்ற விவகார செயலாளருக்கு 4 கோடி 30 லட்சம் ரூபாவும் வாகனங்களை கொள்வனவு செய்ய ஒதுக்கப்பட்டுள்ளன. (இ-ச)

# பட்டுப் புடைவைகளில் 'ஈழ இராச்சியம்'

கொழும்பு, மே 07

ஒவ்வொரு காலகட்டத்திலும் மக்கள் மத்தியில் ஏதாவது ஒரு விடயம் பிரபல்யம் அடையும் அதேசமயம், மக்கள் அதை விரும்பி நாடுவார்கள்.

அந்த வகையில் பிரபல்ய மானவர்கள், சினிமாநட்சத்திரங்கள், எழுத்துக்கள்மற்றும்தமக்கு பிடித்தவற்றை ஆடை களில் வடிவமைத்துக்கொள் வது ஒரு சிலரின் விருப்பமாக உள்ளது.

அந்த வரிசையில் தற்போது விடுதலைப்புலிகளின் தமிழீழத் தேசிய இலட்சினைகள் பொறிக்கப்பட்ட பட்டுப்புடைவைகள் விற்பனைக்கு வந்துள்ளன.



பிரான்ஸின்வர்த்தகநிலையமொன்றில்குறித்தபுடைவைகள் விற்பனைக்குவந்துள்ளனஎன்று தகவல்கள் தெரிவிக்கின் றன.

இந்தப் புடைவைகளின் புகைப் படங்கள் சமூக வலைத்தளங் களில் பரவி வருகின்றன.

இந்தப் புடைவைகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தேசிய மலரான கார்த்திகைப் பூவும், இலங்கை வரைபடத்தின் தமிழீழ இராச்சியத்தைக் குறிக்கும் பகுதியும் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-ச)

# 'தலைவர் பிரபாகரன் இவர்தானா? அதிர்ந்து போனேன்!'

### இவ்வாறு கூறுகிறார் முன்னாள் இந்திய பொலிஸ் அதிகாரி



கொழும்பு, மே 07

"நான் கைதுசெய்தவர் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் என்று எனக்குத் தெரியாது. அதனை உயர் அதிகாரி தெரிவித்தபோது எனக்கு கடும் அச்ச உணர்வு ஏற்பட்டது." - இவ்வாறு கூறுகிறார் இந்தியத் துணைஆய்வாளர் நந்தகுமார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தமிழகத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டபோது அப்போதைய இந்தியத் துணைஆய்வாளராக இருந்த நந்தகுமார், அன்றைய நாளில்நடந்தவற்றை அண்மையில் ஊடகம் ஒன்றுக்கு விவரித்துள்ளார்.

அவர் கூறியவைவருமாறு:-

1982ஆண்டு மே மாதம் 19ஆம்திகதிசென்னை-பாண்டி பஜாரில் இரு தரப்பினர்களுக்கு இடையில் துப்பாக்கிச் சண்டை இடம்பெறுவதாகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்துசம்பவ இடத்திற்குப் பொலிஸார் சிலரை அழைத்துக் கொண்டு சென்றேன். அந்த இடத்தில் இருந்தவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின்போதுசண்டையிட்டவர்கள் அருகில் மறைந்திருக்கின்றனர் எனக் கூறினார்கள்.

இந்நிலையில், சண்டையிட்டவர்களைப் பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு அழைப்பு விடுத்தவுடன் எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்காது உடனே பொலிஸ் நிலையத்திற்கு வந்தனர்.

அவர்களைக் கைது செய்து அழைத்துவந்த சிலமணிநேரத்தில், தமிழக தலைமைப் பொலிஸ்அதிகாரியிடம் இருந்து அழைப்பு வந்தது.

இதன் போது "நீங்கள் கைது செய்து அழைத்து வந்தவர்கள் யார் என்று தெரியுமா?" எனத் தலைமைக் காவல் அதிகாரி கேட்டார்.

"ஏதோ இலங்கைத் தமிழர்கள் என்று கூறினார்கள்." - என நான் பதில் கூறினேன்.

"நீங்கள் கைது செய்து அழைத்து வந்திருப்பது தமிழீழ விடுதலைப்புலிகளின்தலைவர் வே.பிரபாகரன்." - எனத் தலைமைப் பொலிஸ் அதிகாரி என்னிடம் சொன்னார்.

இதைக் கேட்ட எனக்கு அச்ச உணர்வு ஏற்பட்டது; அதிர்ந்து போனேன். இதனையடுத்து அவர்களிடம் சென்று ஆயுதம் எதுவும் உள்ளதா எனக் கேட்டேன். அவர்களும் கையில் வைத்திருந்த துப்பாக்கியை அமைதியாக என்னிடம் கொடுத்தார்கள்.

அதனைப்பெற்றுக்கொண்ட பின்னர் யோசித்துப்பார்த்தோம். துப்பாக்கியைக் கொண்டு எம் மீது தாக்குதல் நடத்தியிருந்தால் அவர்களை நாங்கள் கைது செய்யாமல் திரும்பவும் ஓடி வந்திருப்போம். எனினும், அவர்கள் நடந்து கொண்ட விதத்தைப் பார்க்கும்போது இன்றும் பெருந்தன்மையாக உள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-ச)

# அமரர் சிறிசபாரத்தினத்தின் 31 ஆவது நினைவு அஞ்சலி

### நேற்று உரும்பிராயில் இடம்பெற்றது

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளில் ஒன்றான தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் மறைந்த சிறி சபாரத்தினத்தின் 31ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்றுச் சனிக்கிழமை கோண்டாவிலில் நடைபெற்றது.

கோண்டாவில் அன்னங்கை வீதியில் அவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட இடத்தில் மேற்படி இயக்கத்தின் பொருளாளரும் வடக்கு மாகாண சபையின் உறுப்பினருமான கே.என்.விந்தன் கனகரத்தினம் தலைமையில் இந்த நினைவு தின நிகழ்வு நடைபெற்றது.

இந்த அஞ்சலி நிகழ்வில் மேற்படி இயக்கத்தின் செயலாளர் நாயகமும் சட்டத்தரணியுமான ந.ஸ்ரீகாந்தா நினைவுச் சுடரை ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்தார். பின்னர் ஏனையோர் மலர் அஞ்சலி செலுத்தினர். பின்னர் அரசியல் பிரமுகர்களின் அஞ்சலி உரைகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் உப தலைவர் ஹென்றி மகேந்திரம், கட்சியின் அரசியல் தலைவரும் தேசிய அமைப்பாளருமான எம்.கே. சிவாஜிலிங்கம், கட்சியின் கிழக்கு மாகாண சபை உறுப்பினரான கோவிந்தன் கருணாகரம் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன் மற்றும் க.சர்வேஸ்வரன், விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மற்றும் பலரும் கலந்துகொண்டனர். (ம)

திறமையின் தேடல்
சர்வதேச தரத்திலான ICVE சான்றிதழுடன்
Dip.In Mass Media
வானொலித்துறை 80% கலையகப் பயிற்சி New Trends of Fm, பத்திரிகை, விளம்பரம், செய்தி, ஒலிப்பதிவு, சந்தைப்படுத்தல் Social Media, உளவியல் Media Ethics & Law போன்ற அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய 3 மாத காலத் தீவிர பாடநெறி.
★ வகுப்பில் 12 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
★ வவுனியாவில் புதிய பிரிவுகள் ஆரம்பம்.
★ தூர இடங்களிலிருந்து வருபவர்களுக்குத் தங்குமிடம் இலவசம்.
North Mass Media College
No.28/1, Station Road, Vairavapuliyankulam, Vavuniya.
024 561 5610/ 077 747 5783 / 077 848 6570 (R/060)

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள், பொதிகள் சேவை
எமது சேவை 365 நாட்களும்
விரைவாகவும் பாதுகாப்பாகவும் 72 மணி நேரத்தில் உலகின் எப்பாகத்திலும் ஒப்படைக்கப்படும் (EXPRESS SERVICE)
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் எடுக்கப்பட்டு வெளிநாடுகளில் ஒப்படைக்கப்படும் (Door to Door Service)
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
இல.10, புதிய மாநகரசபைக் கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Call - 021 222 3536
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர்வீதி சந்தி, யாழ்ப்பாணம்.
Call - 021 222 6113

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாரித்து ... 07.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது